

7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

NORD OPTICAL

லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
2 4 5 B D E
Horraires d'ouverture
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30



ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 03 | 08 - 21 ஒகஸ்ட் 2017 | முழக்கம் 053



பிரான்ஸ் வாழ் வர்த்தகர்களே
உங்கள் வர்த்தக விளம்பரங்களை எமது தளத்தில் விளம்பரம் செய்து அதிக பயன் பெறுங்கள்
பரிஸ்தமிழ் .கொம்
www.ParisTamil.Com
பரிஸ்தமிழ்.கொம்மில் விளம்பரம் செய்ய தொடர்பு:
செல்பேசி: 06 64 96 80 79
தொலைபேசி: 09 70 40 50 71
www.paristamil.com


## கானல் நீராகுமா ஐரோப்பிய நீதிமன்றத்தின் தடைநீக்க ஆணை?

விடுதலைப் புலிகள் தமிழீழ
Liberation Tigers Of Tamil Eelam

## புலிகளின் தடையை நீடிக்க யாழில் களமிறங்கியுள்ள மைத்திரி – மகிந்த குழுக்கள்

### எத்தனை காலம்தான் இது தொடரும்?

### குதிரை ஓடியபின் லாயத்தை மூடுவதால் பயன் உண்டா?

## வங்ரோத்து அரசியல் நடாத்தும் தமிழ் அரசுக் கட்சி

## தமிழர்களின் சொத்துக்களை விற்கும் மர்ம நபர்கள் புலம்பெயர்ந்த தமிழர்களே அவதானம்

## ஏவுகணைத் தாக்குதலில் சில நிமிட இடைவெளியில் தப்பிய பிரெஞ்சு விமானம்

### புலி வருகுது புலி வருகுது..!

### இறுதிப்போட்டியில் இரசிகர்களுக்கு அதிர்ச்சியளித்த உசைன் போல்ட்


BHARATH
ॐ
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Boulangerie - Pâtisserie
208 Rue du Faubourg Saint Denis - 75010 Paris
Tél: 01 42 05 00 00 / e-mail : hotbreads@hotmail.fr
Hot Breads
திருமணம், பிறந்தநாள் மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் தேவையான கேக்குகள், சிற்றுண்டி வகைகள், பாண், பிஸ்கட்டுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்
Eggless கேக்குகள் எமது சிறப்புத் தயாரிப்புக்கள்

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான் சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்

64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

Express station service
- எரிபொருள் நிரப்பு நிலையம்
- பணம் அனுப்பும் சேவை
- புத்தம் புதிய கைத்தொலைபேசிகள்
- தொலைபேசி உதிரிப்பாகங்கள்

நம்பிக்கை,
நாணயம்,
உத்தரவாதம்...
MoneyGram. money transfer
Ria Money Transfer
WU WESTERN UNION
Sigue MONEY TRANSFER
25 boulevard de la Chapelle 75010 Paris M°: La chapelle
Tél.: 01 40 18 07 44
E-mail: express-station@hotmail.com

AACHI BOUCHERIE
பொண்டியில் ஆச்சி இறைச்சிக்கடை – உங்களிற்காக மிகவும் மலிவு விலையில் தரமான இறைச்சி வகைகள்
HALAL ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, உயிர்க்கோழி, கோழிக்கால், பாங்கிறைச்சிகள்
120 Rue Roger Salengro 93140 Bondy Tél : 07 51 08 14 83 / 07 51 27 72 38


VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

# ASCES

## 26 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

**BAC, BREVET பரீட்சைகளில் 100 வீத சித்தி எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்**

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் **www.asces.fr** **Tél : 07 82 88 59 16** E-mail : asces@free.fr

சிறந்த முறையில் பெண்களுக்கான சிகை, ஆடை- புடவை, முக அலங்கார மற்றும் கேக் அலங்கார வகுப்பு ஆரம்பம். வகுப்பு முடிவில் வேலை உடனே!

Grande Section, CP, CE,CM, Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique, Chimie, SVT, Histoire

**பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்**

05-09--2017 செவ்வாய் வியாழன் மாலை 5 மணி
09-09-2017 சனி ஞாயிறு மாலை 4 மணி
10-09-2017 ஞாயிறு காலை 11 மணி ( நாள்வகுப்பு)
04-09-2017 திங்கள் செவ்வாய் காலை 9 மணி
10-09-2017 ஞாயிறு காலை 10 மணி (Nationality வகுப்பு)

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
BAC , BREVET பரீட்சைகளில் 100வீத சித்தி
Cambridge University ஆல் நடாத்தப்படும்
Starters, Movers, Flyers, Ket, Pet பரீட்சைக்கான வகுப்புகள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

**LA COURNEUVE** இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

**BOBIGNY**
38, rue Gaston Crépin 93000 Bobigny

**PARIS**
3, place de Joinville 75019 Paris M° Crimée

**Epinay sur seine** 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

## Bridal makeup & cake icing

மணப்பெண் அலங்காரம்,
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்

உங்கள் உணவகங்கள் சமையல் அறைகளிற்குத் தேவையான
றைஸ் குக்கர் முதல் அனைத்து விதமான பைகள் வரை லாச்சப்பல் அருகில் ஒரே இடத்தில்

# EURO RESTO SERVICE

IMPORTANT உணவு விடுதிகளிற்கான உபகரணங்கள் மற்றும் உடைகள்



IMPORTANT பாதுகாப்பான எலி மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள்



IMPORTANT இல்ல வைபவங்களிற்கான பொருட்கள்

IMPORTANT அங்கீகரிக்கப்பட்ட சொப்பிங் பாக்குகள்



மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**48, RUE DU CHÂTEAU LANDON - 75010 PARIS**

**TÉL.: 01 40 36 00 09 / 06 68 67 15 55** M°: STALINGRAD / LA CHAPELLE

# ஈழமுரசு

mediacentre ஊடகமையம்

முரசு 03 | 08 – 21 ஓகஸ்ட் 2017 | முழக்கம் 053


"பௌத்தம் ஓர் ஆழமான ஆன்மீகத் தரிசனம். அன்பையும் அறத்தையும் ஆசைகள் அகன்ற பற்றற்ற வாழ்வையும் தர்மத்தையும் வலியுறுத்தி நிற்கும் தார்மீகத் தத்துவம். இந்தத் தார்மீக நெறியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொள்ளும் சிங்களம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே இனவாத விசத்தினுள் மூழ்கிக்கிடக்கிறது."

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# கானல் நீராகுமா ஐரோப்பிய நீதிமன்றத்தின் தடைநீக்க ஆணை ?

'கலாநிதி' சேரமான்

பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளை நீக்குமாறு கடந்த 26.07. 2017 அன்று ஐரோப்பிய ஒன்றியப் பேரவைக்கு (Council of the European Union) அதன் அதியுயர்நிலை நீதிமன்றமாகிய ஐரோப்பிய நீதிமன்றம் (European Court of Justice) பிறப்பித்த ஆணையானது உலகத் தமிழர்களிடையே ஆரம்பத்தில் பெரும் பரபரப்பையும், பின்னர் பெரும் குழப்பத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

இதற்குக் காரணம் ஐரோப்பிய நீதிமன்றத்தின் ஆணை வெளிவந்த சில மணிநேரங்களில் கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதரகம் வெளியிட்ட அறிவித்தல் தான். ஐரோப்பிய நீதிமன்றத்தின் ஆணை வெளிவந்ததுமே அனைத்து ஊடகங்களும் - அவை தமிழ் ஊடகங்களாக இருந்தாலும் சரி, மேலைத்தேய ஆங்கில ஊடகங்களாக இருந்தாலும் சரி, இந்திய ஊடகங்களாக இருந்தாலும் சரி, சிங்கள ஊடகங்களாக இருந்தாலும் சரி - தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீக்கப்பட்டு விட்டதாகவே செய்தி வெளியிட்டிருந்தன.

எனினும் இது பற்றி அறிக்கை வெளியிட்ட கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதரகம், ஐரோப்பிய நீதிமன்றத்தின் ஆணை 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் விடயத்தில் மட்டுமே பொருந்தும் என்றும், 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தால் வேறு தடைகளும், கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருப்பதால் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை தொடரும் என்றும் அறிவித்திருந்தது. இவ் அறிக்கையில் ஆழமாகப் பொதிந்திருந்த சட்டபூர்வமான மற்றும் இராசரீக அம்சங்களைப் புரிந்து கொள்ளத் தவறிய சில ஊடகங்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்ட சில மணிநேரங்களிலேயே அது மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டதாக செய்தி வெளியிட்டிருந்தன.

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டதா? தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை தொடரும் என்று எந்த அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்புத் தூதரகம் அறிக்கை வெளியிட்டது? ஐரோப்பிய நீதிமன்றத்தின் உத்தரவை மீறும் அதிகாரம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏனைய கட்டமைப்புக்களுக்கு உள்ளதா? இவையெல்லாம் கடந்த இரண்டு வாரங்களாக எம்மவர்களால் பதில் காணப்படாத கேள்விகளாக உள்ளன. இக் கேள்விகள் அனைத்துக்கும் இலகுவான முறையில் அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய பதிலை அளிப்பதே இப்பத்தியின் நோக்கமாகும்.**

உண்மையில் என்னதான் நடந்தது?

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டதா?

அப்படியாயின் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை தொடரும் என்று எந்த அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்புத் தூதரகம் அறிக்கை வெளியிட்டது?

ஐரோப்பிய நீதிமன்றத்தின் உத்தரவை மீறும் அதிகாரம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏனைய கட்டமைப்புக்களுக்கு உள்ளதா?

இவையெல்லாம் கடந்த இரண்டு வாரங்களாக எம்மவர்களால் பதில் காணப்படாத கேள்விகளாக உள்ளன.

இக் கேள்விகள் அனைத்துக்கும் இலகுவான முறையில் அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய பதிலை அளிப்பதே இப்பத்தியின் நோக்கமாகும்.

தொடர்ச்சி 4ம் பக்கம்


கமிலவ் மொழிபெயர்ப்பு

உங்கள் வேலையிடத்தில் பிரச்சனையா?

உங்களுக்கு அலுவலகப் பிரச்சனையா?

வர்த்தகர்களுக்கான ஆலோசனைகள் (conseil en entreprise)

வருமான வரி தொடர்பான ஆலோசனைகள் ( conseil impots)

ஞாயிற்றுக்கிழமை மூடப்பட்டிருக்கும்

திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 10:30 முதல் 13:00 வரை
பிற்பகல் 14:00 முதல் 18:00
சனிக்கிழமை பிற்பகல் 13:00 முதல் 18:00 வரை

இடம் பெயர்ந்த சட்டரீதியான மொழிபெயர்ப்பும் சேவைகளும் உண்டு

260 rue Faubourg St Martin - 75010 Paris

Metro: Stalingrad/Louis Blanc தொடர்புகளிற்கு : 06 51 91 08 85

ஆலோசனைகள் தேவையா
நாங்கள் உள்ளோம்

• சட்ட ஆலோசனைகள்
• முதல் விண்ணப்பம் (Coalia)
• அகதித்தஞ்சக் கோரிக்கை (Ofpra)
• மீள்பரிசோதனைக் கோரிக்கைகள் (Commision _ Ofii)

போன்றவற்றிற்கான ஆலோசனைகள்

07 68 44 43 47 aalosanaitamil@gmail.com

வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்

Crédits - Solutions

திரு.சிவா

2-4 rue de l'Orillon - 75011 Paris

0973255923 - 0665660305

email: creditssolutions@gmail.com

மக்கள் கடை NEW CASTEL



உங்கள் தேவைகளே எங்கள் சேவை

61, rue Louis Blanc,75010 Paris.

Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02

ஈழமுரசு
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"
"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel Gratuit
MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Tel: 00 33 970 464 464
Port: 00 33 781 808 116
இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
தலைவர்: சு.புலேந்திரன்
**Redacteur:** K.Jeisanthar
பொறுப்பாசிரியர்: கி.ஜெய்சந்தர்
ஆசிரியர் பீடம்
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)
விளம்பரம் / விநியோகம்
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)
Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard
பிரித்தானியா:
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

சந்தா விபரம்
வருட சந்தா
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€

குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

லாச்சப்பலில்
ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு
பாலன்:
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80

# கானல் நீராகுமா...

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை 29.05.2006 அன்று பிறப்பிக்கப்பட்ட தடையாகும். இது 11.09.2001 அன்று அல்கைடா இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நியூயோர்க் இரட்டைக் கோபுரங்கள் மற்றும் பென்ரகன் கூட்டுப்படைத் தலைமையகம் மீதான பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து 28.09.2001 அன்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 1373ஆம் எண்ணுடைய தீர்மானத்தின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியத்தால் நிறைவேற்றப்பட்ட 2580 எண்ணுடைய சட்டத்திற்கு உட்பட்டு கொண்டு வரப்பட்ட தடையாகும். இதற்கு முன்னர் 09.10.1997 அன்று அமெரிக்காவும், 28.02.2001 அன்று பிரித்தானியாவும் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டுத் தடை செய்திருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கு முன்னர் இதற்கான காரணம் அதிகாரபூர்வமான முறையிலும், அதிகாரபற்றற்ற முறையிலும் அமெரிக்காவாலும், பிரித்தானியாவாலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. 1996 ஆம் ஆண்டு தை மாதம் கொழும்பில் உள்ள உலக வர்த்தக மையம் மீது மேற்கொள்ளப்பட்ட வாகன மனிதவெடிகுண்டுத் தாக்குதலை அடுத்து பன்னாட்டு நிறுவனம் ஒன்றின் பிரதிநிதியொருவர் ஊடாக அமெரிக்காவால் வன்னிக்கு செய்தியொன்று அனுப்பப்பட்டது. அதில், ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, சந்திரிகா அம்மையாரின் அதிகாரப் பரவலாக்கத் தீர்வுப் பொதியைத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்க மறுக்கும் பட்சத்தில், அவர்களைப் பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா பட்டியலிடும் என்று எச்சரிக்கப்பட்டிருந்தது. இதேபோன்று ஆயுதப் போராட்டத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்வதன் காரணமாகவே அவர்கள் மீதான தடை போடப்படுவதாக, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பிரித்தானியாவும் செய்தி அனுப்பியது.

அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவதும், அதன் மூலம் தமிழீழத் தனியரசுக்கான ஆயுதப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதுமே இத்தடைகளின் நோக்கம் என்பதை அமெரிக்காவும், பிரித்தானியாவும் தெரியப்படுத்தியிருந்தன.

இதே நோக்கத்துடனேயே 29.05.2006 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியமும் தடை செய்திருந்தது. அக்காலப் பகுதியில் போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தாலும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான நிழல் யுத்தம் தீவிரமடைந்து, அதிகாரபற்றற்ற முழு அளவிலான யுத்தமாகப் பரிணமிக்கும் கட்டத்தை அடைந்திருந்தது. இனம் தெரியாத நபர்களால் நிகழ்த்தப்பட்ட ஆட்கொலைகள் என்ற நிலை மாறி, கொழும்பில் மனிதவெடிகுண்டுத் தாக்குதல்களும், தமிழீழத்தில் வான்வழித் தாக்குதல்களும் நிகழத் தொடங்கியிருந்த கால கட்டம் அது. அன்றைய காலகட்டத்தில் எல்லோராலுமே ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந்தது: இரு தரப்பினரும் முழு அளவிலான யுத்தம் ஒன்றுக்குத் தயாராகி விட்டார்கள் என்பதுதான் அது. இதனைத் தடுப்பதில் முழுமையான அக்கறை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இருந்திருக்குமாயின், அது இரு தரப்பினர் மீதும் சம அளவிலான அழுத்தங்களைப் பிரயோகித்திருக்க வேண்டும். ஆனாலும் அவ்வாறு ஐரோப்பிய ஒன்றியம் செய்யவில்லை.

மாறாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது மட்டுமே ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தது. மறுபுறத்தில் மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தின் விடயத்தில் இடையிடையே இராசரீக வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு தனது அதிருப்தியை ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டாலும், அதன் விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் பெரும்பாலும் நெகிழ்வுப் போக்குடனேயே நடந்து கொண்டது. இதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை என்பது அவ்வியக்கத்தை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தி, அதன் விளைவாக ஆயுதப் போராட்டத்தின் மூலம் அதற்குக் கிடைக்கக்கூடிய வெற்றி வாய்ப்புக்களை இல்லாதொழிப்பதே தமது தடையின் நோக்கம் என்பதை ஐரோப்பிய ஒன்றியம் வெளிப்படுத்தியிருந்தது. அதாவது ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை என்பது அமெரிக்கா, பிரித்தானியா ஆகியவற்றின் வழியைத் தழுவி எடுக்கப்பட்ட அரசியல் முடிவாகும். முழு அளவிலான யுத்தம் ஒன்றுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தள்ளப்பட்டுக் கொண்டிருந்த அன்றைய காலப்பகுதியில், இதனை சட்டரீதியாக எதிர்கொள்வதால் எவ்விதமான பயனும் ஏற்படாது என்பதைத் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிந்திருந்தார்கள். அவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத் தடையை சட்டரீதியாக எதிர்கொள்வதாயினும், அதற்கான முதற்படியாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் எண்ணம் தமக்குத் துளியளவும் இல்லை என்ற உறுதிமொழியைத் தாம் அளிக்க வேண்டும் என்பதும், அது சாத்தியமற்ற ஒன்று என்பதும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தெரியும். இதுதான் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு எதிராக எவ்விதமான வழக்குகளையும் அப்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கல் செய்யாமல் போனதற்குக் காரணமாகும்.

**அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவதும், அதன் மூலம் தமிழீழத் தனியரசுக்கான ஆயுதப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதுமே இத்தடைகளின் நோக்கம் என்பதை அமெரிக்காவும், பிரித்தானியாவும் தெரியப்படுத்தியிருந்தன.**



ஆனால் இதே நிலை 18.05.2009 இற்குப் பின்னரான சூழமைவில் இருக்கவில்லை. அன்றைய நாளில் தமது ஆயுதங்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் மௌனித்த பின்னர் தமிழீழ தாயகத்திலும் சரி, தென்னிலங்கையிலும் சரி எவ்விதமான தாக்குதல்களும் இடம்பெறவில்லை.

இவ்வாறான பின்புலத்தில் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்வது பற்றி 2011 ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்களால் ஆலோசிக்கப்பட்டது. அவ் வேளையில் நெதர்லாந்தில் வசிக்கும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் ஒருவரின் முயற்சியால், இவ்வழக்கைக் குறைந்த கட்டணத்தில் மேற்கொள்வதற்கு ஐரோப்பிய மனித உரிமைச் சட்டத்தரணிகள் சிலர் முன்வந்தார்கள். எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரில் யார் வழக்கைத் தாக்கல் செய்வது என்ற கேள்வி எழுந்த பொழுது, தமது பெயரில் வழக்கைத் தாக்கல் செய்வதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் டென்மார்க் கிளையின் செயற்பாட்டாளர்கள் இருவரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக தொடர்பகத்தில் போராளியாகப் பணிபுரிந்த பிறிதொரு ஐரோப்பிய நாடொன்றில் வசிக்கும் இன்னொருவரும் முன்வந்தனர். இவர்களின் முயற்சி வெற்றியீட்ட வேண்டும் என்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய செயற்பாட்டாளர்களாலும், தமிழ்த் தேசிய உணர்வாளர்களாலும் நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

ஐரோப்பிய ஒன்றியப் பொது நீதிமன்றத்தில் (General Court of the European Union) தொடரப்பட்ட இவ்வழக்கில் தடைநீக்கத்தை வலியுத்திப் பல தரப்பட்ட வாதங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்டத்தரணிகள் முன்வைத்திருந்தாலும், அதில் முக்கியமான வாதமாக அவர்களால் முன்வைக்கப்பட்டது, 18.05.2009 இற்குப் பின்னர் எவ்விதமான தாக்குதல்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் நிகழ்த்தாத நிலையில், அதற்கு முன்னரான காலப்பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிகழ்த்திய தாக்குதல்களையும், அதற்குப் பின்னரான காலப்பகுதியில் இணையங்களிலும், பத்திரிகைகளிலும் வெளிவந்த நிரூபிக்கப்படாத செய்திகளையும், இந்தியா, பிரித்தானியா ஆகிய நாடுகளில் உள்ள தடையையும் காரணம் காட்டித் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீடிப்பதானது ஒரு நீதி மறுப்புச் செய்கை என்ற வாதமாகும். இதனை எதிர்த்து ஐரோப்பிய ஒன்றிய ஆணையமும், பிரித்தானியா, நெதர்லாந்து ஆகிய இரண்டு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் வாதங்களை முன்வைத்தன. தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்டத்தரணிகளின் வாதங்களையும், எதிர்த் தரப்புச் சட்டத்தரணிகளின் வாதங்களையும் ஆராய்ந்த ஐரோப்பிய ஒன்றியப் பொது நீதிமன்றம், 29.05.2006 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த முடிவு சட்டத்திற்கு உட்பட்டது ஒன்று என்றும், எனினும் 18.05.2009 இற்குப் பின்னர் அடிப்படையற்ற காரணங்களை முன்வைத்து இத்தடையை ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து நீடிப்பது தவறானது என்றும் கடந்த 16.10.2014 அன்று தீர்ப்பளித்திருந்தது.

தொடர்ச்சி 08ம் பக்கம்

## ஈழமுரசு

# குதிரை ஓடியபின் லாயத்தை மூடுவதால் பயன் உண்டா?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடையை விலக்கி ஐரோப்பிய ஒன்றிய உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு, தமிழ் மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது உண்மைதான். கடந்த 2006ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடையைக் கொண்டுவர முனைந்தபோது, அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக புலம்பெயர்ந்த தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளில் எழுச்சிகரமான பல போராட்டங்களை நடத்தியிருந்தார்கள்.

அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஒருதலைப்பட்சமாகக் குழப்பிக்கொண்டு மெல்ல மெல்ல மகிந்த அரசு போருக்குள் தமிழர்களை தள்ளிக்கொண்டிருந்த நிலையில், தமிழ் மக்களின் ஒரே பாதுகாவலர்களாக இருந்த விடுதலைப் புலிகள் மீது மட்டும் பயங்கரவாத முத்திரையை ஐரோப்பிய ஒன்றியம் குத்தமுனைந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தின் அந்த முடிவு, தமிழின அழிப்பிற்கு வழங்கப்படும் ஓர் அங்கீகாரமாக அமைந்துவிடும் என்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் விடுதலைப் புலிகள் சார்பாகவும், புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் சார்பாகவும் பல்வேறு வழிகளின் ஊடாக எடுத்துக்கூறப்பட்டது.

ஆனால், அத்தனை வேண்டுகோள்களையும், எச்சரிக்கைகளையும் புறந்தள்ளிவிட்டு ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடைகளைக் கொண்டுவந்தது. பாதிக்கப்படும் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட இந்த அநீதி, தமிழ் மக்களை வேட்டையாட வேண்டும் என்ற வெறியை சிறீலங்கா ஆட்சியாளர்களிடம் இன்னும் அதிகமாக்கியது. போரை நோக்கி சிறீலங்கா அரசு வேகமாக நகரத்தொடங்கிய நிலையில்தான், 2007ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தச் சட்டத்திற்கு உட்பட்டு பிரான்சில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பணியாற்றியவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இது சிங்களப் பேரினவாதம் தனது இனஅழிப்பை சர்வதேசத்தின் ஆதரவுடன் இன்னும் மிகவேகமாக முன்னெடுக்க பிரதான காரணமாக அமைந்தது. இதன் பின்னர் வேகமெடுத்த இனஅழிப்புப் போர் 2009 மே மாதம் இடம்பெற்ற பாரிய அழிவுடன்தான் முடிவுக்கு வந்தது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் பாரிய அழிவைச் சந்தித்ததற்கும், தமிழினம் பேரழிவைச் சந்தித்ததற்கும் இன்று வரை நாதியற்றவர்களாக தமிழினம் வாழ்வதற்கும், தமிழீழ விடுதலைப் போராட்டம் மீண்டெழ முடியாதளவிற்கு மிகப் பெரிய பின்னடைவாக அமைந்ததற்கும் ஐரோப்பிய ஒன்றியத் தடை ஒரு மிகமுக்கிய காரணம் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

இந்த இன அழிவின் பின்னர் கடந்த எட்டு வருடங்களாக விடுதலைப் புலிகள் எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி ஒருசில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதும், விடுதலைப் புலிகளின் தலைமையின் கட்டளையின் கீழ் ஒரு துப்பாக்கிக் குண்டு கூட வெடிக்கவில்லை என்பது உலகறியும். ஆனால், இந்த எட்டு ஆண்டுகளும் விடுதலைப் புலிகள் இருப்பதாகப் பூச்சாண்டி காட்டியபடியேதான் சிறீலங்கா தனது ஆட்சியை நகர்த்தி வருகின்றது. விடுதலைப் புலிகள் இருந்தபோது எவ்வாறான அழுத்தங்களை தமிழ் மக்கள் மீது பிரயோகித்ததோ அந்த அழுத்தங்கள் இன்றுவரை சற்றும் குறையவில்லை என்பதற்கு தற்போது யாழ்குடாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் சுற்றி வளைப்புக்களும் கைதுகளுமே ஒரு சிறிய உதாரணம்.

தமிழர் தாயகத்தைவிட தென்னிலங்கையில் சிறீலங்காவின் காவல்துறையினர் மீது அதிக தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. போராட்டங்களின்போதும், தனிப்பட்ட முறையிலும் இந்தத் தாக்குதல்கள் தமிழர் தாயகத்தைவிட மிக அதிகமாகவே அங்கு நடைபெறுகின்றது. ஆனால் அங்கு அதனை யாரும் பூதகரமாக்குவதில்லை. காவல்துறையினர் மீதான தாக்குதல் மேற்கொண்டதற்காக இராணுவம் களமிறக்கப்பட்டு கிராமங்களும், நகரங்களும் அங்கு சுற்றிவளைக்கப்பட்டு கைதுகள் இடம்பெறுவதில்லை. ஆனால், தமிழர் தாயகத்தில் நிற்காமல்போகும் மாணவர்கள் சுட்டுவீழ்த்தப்படுவார்கள், மணல் அள்ளுபவர்கள் படுகொலை செய்யப்படுவார்கள், காவல்துறை மீது தாக்கினால் கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு ஏராளமானவர்கள் காரணமெதுவுமின்றி கைது செய்யப்படுவார்கள் என்னும் நிலைமையே இருக்கின்றது.

இந்த நிலையில்தான் ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுவந்த தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை, தமிழ் மக்கள் சட்டரீதியாக எதிர்கொண்டு அதில் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். 'குதிரை ஓடிய பின் லாயத்தை மூடிய கதை' என்பது போல, விடுதலைப் புலிகளை அழித்து அவர்களின் செயற்பாட்டை முற்றாக முடக்கிய பின்னர் இந்தத் தடை நீக்கம் எந்த வித பலனைத் தமிழ் மக்களுக்கு தந்துவிடப்போகின்றது என்ற கேள்வியை பல்வேறு தரப்பினரும் எழுப்பி வருகின்றார்கள்.

சிங்களப் பேரினவாத அரசு மட்டுமல்ல, உலகின் பல நாடுகளும் தமிழர்கள் என்றால் விடுதலைப் புலிகள் என்றே பார்க்கின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. தமிழர்களின் விடுதலைக்கான அரசியல் நகர்வுகளையும் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நகர்வுகள் என்றே எண்ணுகின்றது. இதனால், அரசியல் உயர்மட்டங்களுக்குள் தமிழர்களின் தலைமுறைகள் கூட நுழைகின்ற வழிகள் தடைப்பட்டுக்கிடக்கின்றன. எனவே, விடுதலைப் புலிகள் மீதான தடை அகற்றப்படுவதென்பது தமிழ் மக்கள் முன்னேறிச் செல்வதற்கான ஒரு பாரிய தடைக்கல் அகற்றலே.

அத்துடன், 30, 35 நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு தடை விதித்திருப்பதாகக் கூறியே, மேலும் சில நாடுகளில் சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகள் மீதான தடைகளைக் கொண்டுவர வைத்தது. எனவே ஐரோப்பிய ஒன்றியம் தடையை நீக்குவது, குறைந்தது 25 நாடுகளில் என்றாலும் விடுதலைப் புலிகள் மீது தடையை நீக்கியதாக அமைந்துவிடும். இது ஏனைய தடை செய்த நாடுகளையும் சிந்திக்கவைக்கும்.

அத்துடன், தடைகளுக்கும் மத்தியில் விடுதலைக்காக தொடர்ந்து போராட்ட நகர்வுகளை முன்னெடுத்து வருவதில் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் முன்னிலை வகித்துவருகின்றனர். விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதென்பது அவர்களின் விடுதலைக்கான நகர்வுகளை இன்னும் வீச்சாக்கும் என்பதையும் நன்கு புரிந்துகொண்டதால்தான் சிங்களப் பேரினவாத அரசு எவ்வாறு என்றாலும் மீண்டும் புலிகள் தோற்றம் பெற்றுவிட்டதாக ஒரு காட்சிப் பிழையை ஏற்படுத்தியென்றாலும் ஐரோப்பிய ஒன்றியத் தடையை மீண்டும் நீடிக்க வைப்பதற்கு பகீரதப் பிரயத்தனங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதற்காக விடுதலைப் புலிகளின் பெயரில் எவ்வாறான ஒரு நடவடிக்கையும் விரைவில் முன்னெடுக்கப்படலாம்.?அது ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் அதனையும் ஐரோப்பிய ஒன்றியம் நம்பிவிடுமோ என்பதே இப்போது தமிழர்களுக்கு உள்ள ஒரே அச்சம்.

# திருமலை இரகசிய படுகொலை முகாம் விசாரணையில் மீண்டும் புதுத் தகவல்கள்

திருமலையில் அமைந்துள்ள சிறீலங்கா இனப்படுகொலைக் கடற்படையினரின் முகாமில் உள்ள கன்சைட் எனப்படும் இரகசிய படுகொலைச் சித்திரவதை கூடங்கள் என நம்பப்படும் சிறைக் கூடங்களில் என்ன நடந்தன என்பது குறித்து புதிய புதிய தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வைத்து 2008ம் ஆண்டு 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இடம்பெற்றுவரும் நீதிமன்ற விசாரணைகளில் இந்தப் புதிய புதிய தகவல்கள் வெளிவருகின்றன.



இங்கு நடைபெற்ற அனைத்து தகவல்களும் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கர்ணகொட, முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி.தஸநாயக்க, லெப்டினன் கொமாண்டர் சுனித் ரணசிங்க மற்றும் லெப்டினன் கொமாண்டர் பண்டார ஆகியோரைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது என சிறீலங்கா கடற்படையின் கிழக்கு பிராந்திய கட்டளைத் தளபதி ரியர் அத்மிரால் ரி.ஜே.எல்.சின்னையா (Travis Jeremy Liyanduru Sinniah)குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.



குற்றப்புலனாய்வுப்பிரிவின்சமூககொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவு முன்னெடுக்கும் சிறப்பு விசாரணைகளில் அவர் இவ்வாறு தெரிவித்ததாக குற்றப் புலனாய்வுப் பிரிவு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்னவுக்கு சிறப்பு அறிக்கை ஊடாக அறிவித்துள்ளது. இக்கடத்தல் சம்பவம் தொடர்பிலான வழக்கு கடந்த 2ம் திகதி புதன்கிழமை கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் மீளவும் விசாரணைக்கு வந்தபோது இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற விசாரணையின்போது இந்த கடத்தல், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள கடற்படை முன்னாள் ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி.தஸநாயக்க உள்ளிட்ட 7 பேரில் விளக்கமறியலில் இருந்துவரும் அறுவரின் விளக்கமறியல் காலத்தை எதிர்வரும் 10ம் திகதிவரை கோட்டை நீதிமன்றம் நீடித்தது. அத்துடன் கைது செய்வதற்காக தேடப்பட்டுவரும் கடற்படை லெப்டினன் கொமாண்டர் பிரசாத் ஹெட்டி ஆரச்சியைக் கைது செய்ய மீளவும் உத்தரவிட்ட நீதிமன்றம் பிடியாணை உத்தரவை அனைத்து காவல் நிலையங்களுக்கும் வழங்குமாறும் ஆலோசனை வழங்கியது.

முன்னாள் கடற்படை தளபதி, வசந்த கர்ணகொட தனது பாதுகாப்பு உத்தியோகத்தராக இருந்த லெப்டினன்ட் கொமாண்டர் சம்பத் முனசிங்கவுக்கு எதிராக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்த மேலதிக விசாரணைகளிலேயே இந்த கடத்தல் விவகாரம் அம்பலத்துக்கு வந்திருந்தது. புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட காவல் அத்தியட்சர் நாகஹமுல்லவின் வழிகாட்டலின் கீழ் சிரேஷ்ட காவல் அத்தியட்சர் சானி அபேசேகரவின் நேரடி

தொடர்ச்சி 10ம் பக்கம்

# பாடசாலை மாணவிகளை வீட்டில் வைத்து வவுனியா தலைமை ஆசிரியர் துஷ்பிரயோகம்

பாடசாலை தலைமை ஆசிரியர் (அதிபர்) ஒருவர் மாணவிகள் பலரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய சம்பவம் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது. வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலையில் தலைமை ஆசிரியராக கடமையாற்றி வரும் இளம் வயதான ஒருவரே இவ்வாறு மாணவிகளை துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளதாக தெரியவருகின்றது. மேலும் குறித்த நபர் திருமணமானவர் என்பதுடன் திருமணமாகி சிறிது காலத்திலேயே பாடசாலை மாணவி ஒருவருடன் வீட்டில் வைத்து தகாத முறையில் நடந்ததை நேரில் கண்ட அவரது மனைவி அன்றுடன் அவரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகின்ற நிலைமையில் மேலும் பல மாணவிகளை இவர் தன் காமயிச்சைக்குள்ளாக்கியுள்ளதாகவும் அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 4ம் திகதி வெள்ளிக்கிழமை, தரம் 10 இல் கல்விபயிலும் மாணவி ஒருவரை வவுனியா நகரிற்கு அண்மையில் உள்ள தனது வீட்டிற்கு அழைத்து வந்து துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்திய வேளையில் மாணவியின் பெற்றோரினால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் பல மாணவிகளுடன் தொடர்பு வைத்திருந்தமை அம்பலமாகியுள்ளது. இத்துடன் கடந்த சில நாட்களுக்கு முன்பு இவர் கடமையாற்றும் பாடசாலையின் ஆசிரியை ஒருவருடனும் தகாதமுறையில் நடக்க முற்பட்ட வேளை கண்டிக்கப்பட்டிருந்ததாகவும், இவர் தான் மட்டுமில்லாது வவுனியாவில் பிரபல வர்த்தகர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் மாணவிகளை துஷ்பிரயோகத்திற்குள்ளாக்க வழங்கி வந்துள்ளார். குறித்த நபர் தனது முறைகேடான நடவடிக்கைகளுக்கு பிரபல வர்த்தகரின் சொகுசு வாகனமொன்றையும் பயன்படுத்தியதாக நேரில் பார்த்த சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

## சீனாவின் மிதக்கும் வைத்தியசாலை கொழும்பில்!




சீனக் கடற்படையின் மிக நவீன வைத்தியசாலைக் கப்பலான, Peace Ark நல்லெண்ணப் பயணமாக சிறீலங்கா சென்றுள்ளது. இந்தக் கப்பல் எதிர்வரும் 9ம் திகதி வரை கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்று சீனத் தூதரகம் அறிவித்துள்ளது. எதிர்வரும் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை, இந்த மிதக்கும் மருத்துவமனையில் இலங்கையர்களுக்கு இலவச மருத்துவ உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. Peace Ark கப்பல், சீனாவினால் கட்டப்பட்ட மிகப் பெரிய வைத்தியசாலைக் கப்பல் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் சிறீலங்காவின் ஆதிக்கம்

தமிழர்களும் முஸ்லிம்களுமாக 90 சதவீதத்துக்கும் அதிகமான தமிழ் பேசும் மக்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் 90 சத வீதமான சிறீலங்காவின் காவல்துறை அதிகாரிகள் சிங்கள இனத்தை சேர்ந்தவர்கள் என்று மட்டக்களப்பு மாவட்ட மூத்த காவல்துறை அத்தியட்சகர் சமன் யட்டவர அம்பலப்படுத்தியுள்ளார். காவல் மா அதிபரின் பணிப்புரைக்கமைவாக கிராமத்துக்கு காவல்துறை நடமாடும் சேவை எனும் செயற்றிட்டத்தின் கீழ் ஏறாவூர் சந்திவெளியில் காவல் சாவடியை அண்மையில் திறந்து வைத்துப்பேசியபோது இந்தஉண்மையைஅம்பலப்படுத்தியுள்ளார்.

## பெண் சுற்றுலாப் பயணிகளே அதிகம்

2016ம் ஆண்டு 2.05 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு பயணம் செய்துள்ளனர். இவர்களுள் 54.7 சதவீத



மானோர் அல்லது 1.12 மில்லியன் பேர் பெண் சுற்றுலாப் பயணிகள் என சிறீலங்கா சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இதேவேளை, கடந்த வருடத்திலும் பார்க்க, கூடுதலான பெண் சுற்றுலாப்பயணிகள் இவ்வருடம் இலங்கைக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளாக பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## மாணவன் மீது மாணவன் தாக்குதல்

சாவகச்சேரி கல்வயல்ப் பகுதியில், வீதியில் நின்ற மாணவனை மற்றுமொரு மாணவன் மோசமான முறையில் தாக்கியுள்ளார். தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவனையே அதே பாடசாலையில் உயர்தர வகுப்பில் கற்கும் மாணவன் தாக்கியுள்ளார். வீட்டின் முன்னால் உள்ள சாலையோரத்தில் நின்றிருந்த வேளையில் மதுபோதையில் வந்த உயர்தர வகுப்பு மாணவன், தன்னை மோசமாகத் தாக்கினார் என பாதிக்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற மாணவன் தெரிவித்தார்.

## ஐ.நா. சபை - சிறீலங்கா ஒப்பந்தம் கைச்சாத்து

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சிறீலங்கா இடையிலான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை வெற்றி கொள்ளும் வேலைத்திட்ட ஒப்பந்தத்திலேயே சிறீலங்கா கைச்சாத்திட்டுள்ளது. 2018ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நீண்டகால அபிவிருத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு சிறீலங்கா இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. கொழும்பு அடிப்படை கற்கை நிறுவகத்தில் குறித்த ஒப்பந்தம் கடந்த 3ம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் சிறீலங்காவிற்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி உள்ளிட்ட பல பிரமுகர்கள்கலந்துகொண்டனர்.

## சம்பூரில் நிரந்தரமாக நிலைகொள்கிறது சிறீலங்காவின் மரைன் பற்றாலியன்

சிறீலங்கா இனப்படுகொலைக் கடற்படையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள, மரைன் பற்றாலியன், தமிழர்களின் பூர்வீக நிலமான திருகோணமலை சம்பூரில் நிலைநிறுத்தப்படவுள்ளது. இதற்கமைய, சம்பூரில் உள்ள சிறீலங்கா கடற்படையின் எஸ்எல்என்எஸ் விதுர கடற்படைத் தளத்தில் மரைன் படையினருக்கான விடுதி அறை, மூத்த மற்றும் இளைய அதிகாரிகளுக்கான உணவுக் கூடங்கள், நான்கு மாடிகளைக் கொண்ட நிர்வாக வளாகம் என்பன சிறீலங்கா கடற்படைத் தளபதியினால் அண்மையில் திறந்து



வைக்கப்பட்டன. மரைன் படையினருக்கான பயிற்சி மற்றும் நிர்வாகத் தேவைகளுக்கு ஏற்ற வசதிகளைக் கொண்டதாக இந்த தளம் மாற்றப்பட்டு வருகிறது. சம்பூர் கடற்படைத் தளம் அமைந்துள்ள பகுதியில் தமிழ் மக்களின் காணிகள் பல இன்னமும் விடுவிக்கப்படாதுள்ளன. இந்த நிலையில், சிறீலங்கா கடற்படையின் வலிமை வாய்ந்த படைப்பிரிவான, மரைன் படைப்பிரிவு அங்கு நிரந்தரமாக நிலைகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து சம்பூரின் சொந்த மகன் என்று கூறிக்கொள்ளும் சிறீலங்கா எதிர்க்கட்சி அரியாசனத்தில் மணமகுடம் சூடியிருக்கும் சம்பந்தன் வாயே திறக்கவில்லை.

# கொலைக்கு 2 வருடம் ஆட் கடத்தலுக்கு ஆயுள் சிறீலங்காவின் நீதி இதுதான்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பலவந்தமாக ஆள் சேர்ப்பில் ஈடுபட்டார் என்ற குற்றத்திற்காக, தமிழீழ இசைக் கல்லூரியின் பொறுப்பாளர் கணேஷ் கண்ணதாசனுக்கு சிறீலங்காவின் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஆயுள் தண்டனை வழங்கி, வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கண்ணதாசன், சிறீலங்கா அரசினால் புனர்வாழ்வு என்ற பெயரில் இயக்கப்பட்ட சித்தரவதை முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டவர். யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் மீது, கிளிநொச்சியைச் சேர்ந்த பெண் ஒருவர், தனது மகளை (விஜயபாலன் மஞ்சுளா) 2007ம் ஆண்டு காலப் பகுதியில் பலவந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் பிடித்துச் சென்று இணைத்தார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து நாகரத்தினம் விஜயபாலன் 2014ம் ஆண்டு மார்ச் மாதம் 9ம் திகதி வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இதனையடுத்து, கண்ணதாஸ் 2015ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் திகதி சிறீலங்காப்



பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார். இந்தவழக்குமீதானவிசாரணை வவுனியாமேல்நீதிமன்றில்இடம்பெற்றது. கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட பெண்ணின் தந்தை விஜயபலனும், தாயார் சாந்திமலர் ஆகியோர் இதன்போது நேரில் வந்து சாட்சியமளித்தனர். அத்துடன் சண்டையில் தமது மகள் கொல்லப்பட்டுவிட்டார் என்பதையும் அவர்கள் தெரிவித்தனர். இதனையடுத்து, பலவந்தமாக ஆள் சேர்ப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கண்ணதாசனுக்கு ஆயுள் தண்டனை வழங்கி நீதிபதி தீர்ப்பளித்தார். இதன்போது, தான் மனவருத்தத்துடன் தீர்ப்பளிப்பதாக வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பின் போது குறிப்பிட்டிருந்தார். இதன்மூலம்எங்கிருந்தோவந்தஅழுத்தத்தின்காரணமாக இத்தனை கடுமையான தீர்ப்பை அவர் வழங்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவர் தள்ளப்பட்டிருந்தாரோ என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

இதுஇவ்வாறிருக்க, அதே நீதிமன்றத்தில் இடம்பெற்ற மற்றுமொரு வழக்கில், சிறீலங்கா இராணுவ முகாமில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது, சக இராணுவ கோப்பரல் தர அதிகாரி ஒருவரைக் கொலை செய்த குற்றத்திற்காக சிப்பாய் ஒருவருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு யூலை 20ம் திகதி வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் நடைபெற்ற ஆண்டு பூர்த்திவிழா வைபவத்தின் போது, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தில், மது போதையில் இரண்டு இராணுவத்தினருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையில் முடிந்திருந்தது. குறித்த இரண்டு வழக்குகளும் ஒரே நாளில் (கடந்த 25ம் திகதி) வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன்சசிமகேந்திரன்முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### தொடருந்து விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

யாழ். சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் கடந்த 29ம் திகதி இடம்பெற்ற தொடருந்து விபத்தில் ஒருவர் உரிழந்துள்ளார். பண்டத்தரிப்பைச் சேர்ந்த சிங்காரம் சிவச்செல்வம் (வயது–50) என்பவரே உயிரிழந்துள்ளார். குறித்த நபர், சாவகச்சேரில் வசிக்கும் தனது உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுவிட்டு பேருந்தில் ஏறுவதற்காக, பாதுகாப்பற்ற கடவையைக் கடந்துள்ளார். இதன்போதே தொடருந்து மோதியுள்ளது. யாழிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இன்ரசிற்றி தொடருந்து மோதியேதிலேயே இவ் உயிரிழப்பு சம்பவித்துள்ளது.

### மாட்டுடன் உந்துருளி மோதி - இளைஞரும் மாடும் பலி

மட்டக்களப்பு கொழும்பு வீதியில் பிள்ளையாரடி பகுதியில் உந்துருளி ஒன்று மாட்டுன் மோதி விபத்துக்குள்ளானதில் அதனைச் செலுத்திச் சென்றவரும் மாடும் உயிரிழந்த சம்பவம் கடந்த முதலாம் திகதி நள்ளிரவு இடம்பெற்றுள்ளது. உந்துருளியைச் செலுத்திச் சென்ற கிரான் கும்புறுமூலை வெம்பு பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய சிறிகரன் நிசாந்தன் என்பவரே உயிரிழந்துள்ளார். மறுநாள் அதிகாலை 2.30 மணியளவில் சிறீலங்காக் காவல்துறையினருக்கு கிடைத்த தகவலையடுத்து, உயிரிழந்த இளைஞரின் சடலத்தை மீட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

### யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

அம்பாறை–அலிக்கம்பை வயல் பிரதேசத்தில் யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். ஆலையடிவேம்பு, கோளாவில் பகுதியை சேர்ந்த வைரமுத்து நடராசா (வயது 63) என்பவரே உயிரிழந்துள்ளார். கடந்த 2ம் திகதி அதிகாலை அலிக்கம்பை வயல் பிரதேசத்தில் வழமை போன்று காவல் கடமையின் நிமித்தம் பரண் குடிசை ஒன்றில் இவர் உறக்கத்திலிருந்தபோது யானை தாக்கியுள்ளது. வழமைபோன்று வயல் காவலில் ஈடுபட்டிருந்த அவர், பரனில் சற்றுத் தூங்கிய போது குறித்த இடத்துக்கு வந்த யானையை கண்ட உடனிருந்தவர் குறித்த நபரை எழுப்புவதற்காக முயற்சித்துள்ளார். எனினும், யானை அருகில் வருவதைக் கண்டவர், தப்பியோடிபோதும் பரணிலிருந்த குறித்த விவசாயியை, யானை பரணிலிருந்து இழுத்தெடுத்து தாக்கியுள்ளது. இதனை கண்ணுற்றவர்கள், உழவு இயந்திரங்களின் ஓசையோடு யானையை துரத்தியதாகவும் எனினும், விவசாயி படுகாயமுற்றதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

### பால் புரைக்கேறி சிசு உயிரிழப்பு


செங்கலடிப் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஆண் சிசுவொன்று, பால் புரைக்கேறி உயிரிழந்துள்ளது. வந்தாறுமூலையைச் சேர்ந்த கிருபாகரன் அஸ்வின் என்ற சிசுவே உயிரிழந்துள்ளது. பிறந்து 6 மாதங்களேயான இரட்டையர்களின் ஒன்றான இச்சிசுவுக்கு ஏற்பட்ட வயிற்றோட்டம் காரணமாக தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டது. இருப்பினும், இச்சிசு சுகவீனம் அடையாமையால் செங்கலடிப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில், இச்சிசுவுக்குப் புட்டிப்பால் பருகக் கொடுத்தபோதே புரைக்கேறியுள்ளது. இச்சிசுவைக் காப்பாற்றுவதற்கு முயற்சித்த போதும், அது பலனளிக்கவில்லை.

### கிளிநொச்சி விபத்தில் பெண் பலி

கிளிநொச்சி சேவையர்கடைச் சந்திக்கு அருகாமையில் இரண்டு முச்சக்கரவண்டிகள் விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் பின்புறத்தில், மற்றுமொரு முச்சக்கரவண்டி மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து முறிப்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டியை சேவையர்கடை சந்திக்கு அருகாமையில் உள்ள கடை ஒன்றிற்கு முன்னால் நிறுத்தி விட்டு சாரதி கடைக்கு சென்றுள்ளார். அவ்வேளையில் அதே திசை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த மற்றுமொரு முச்சக்கர வண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் பின்புறத்தில் மோதியுள்ளது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியின் பின் இருக்கையில் இருந்த 77 வயதான கருணாநிதி சின்னம்மா என்ற மூதாட்டியே மயக்கமுற்ற நிலையில் கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்துள்ளதாக, மருத்துவமனைத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

### வீதி விபத்தில் தபால் ஊழியர் பலி

பாண்டிருப்பு பிள்ளையார் கோவில் பிரதான வீதியில் கடந்த 3ம் திகதி வியாழக்கிழமை இரவு 8.30 மணியளவில் இடம் பெற்ற வாகனவிபத்தில் தபால் ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் பாண்டிருப்பைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ஆறுமுகம் சிவானந் என்பவராவார். கல்முனையில் இருந்து துவிச்சக்கர வண்டியில் வந்தவர் தனது வீட்டுக்குச் செல்வதற்கு பாண்டிருப்பு பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக வீதியைக்கடக்க முற்பட்டுள்ளார். இதன்போது எதிரே பொருட்களை ஏற்றிக்கொண்டு வேகமாக பயணித்த சிறியரக வாகனம் ஒன்று மோதியதில் சம்பவ இடத்திலேயே தபால் ஊழியர் பரிதாபகரமாக பலியானார்.



சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
CITY EXPRESS
We Move the Businessclass
Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

‘தாயகத்தில் இருந்து’ காந்தரூபன்



# புலிகளின் தடையை நீடிக்க யாழில் களமிறங்கியுள்ள மைத்திரி – மகிந்த குழுக்கள்



சிறீலங்கா சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் வந்த காலம் தொடக்கம் தமிழ் மக்களே ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியாகத் திகழ்ந்திருக்கின்றனர். அதிலும் குறிப்பாக, 1970 ஆம் ஆண்டில் இருந்து அதற்கு பின்னர் வந்த நாற்பது வருடங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே இலங்கையின் அரசியலைத் தீர்மானித்தார்கள்.

2009 ஆம் ஆண்டுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த பின்னரும், இந்த நிமிடம் வரை இலங்கைத்தீவின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக புலிகள் இருக்கின்றார்கள் என்பது உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியான விடயமாகும்.

ஈழத்தில் என்ன நடந்தாலும், அதன் பின்னணியில் முன்னாள் போராளிகளே இருக்கின்றார்கள் என அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. உலகத்தின் எந்தவொரு நாட்டிலும், எந்தவொரு மூலையிலும் ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக எந்தவொரு செயற்பாடு நடந்தாலும் அதன் தாக்கம் யாழ்ப்பாணத்தில் உணரப்படும். யாழ்ப்பாணத்தைத் தொடர்ந்து அது ஈழத் தமிழர்கள் வாழும் ஏனைய மாவட்டங்களை நோக்கி நகரும்.

அதேபோலத்தான், தற்போதும் யாழ்ப்பாணத்தில் திட்டமிட்டு வன்முறைகள் அரங்கேற்றப்படுகின்றன. காவல்துறையினர் மீது துப்பாக்கிச் சூடு, காவல்துறையினர் மீது வாள்வெட்டு, காவல்துறையினர் மீது கொட்டன் அடி, பொது மக்கள், இளைஞர்கள் மீது வாள்வெட்டு இவ்வாறு பல சம்பவங்கள் திட்டமிட்டு நடைபெறுகின்றன. இந்தச் சம்பவங்களுக்கான பின்னணியை ஆராயவேண்டியது முக்கியமானது.

கடந்த காலங்களில், மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் மர்ம மனிதன் என்ற பெரும் நாடகம் ஒன்றை கோத்தபாய அரங்கேற்றினார். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வு இடம்பெறும்போது, அதனை ஒட்டிய காலங்களில் அந்த மர்ம மனிதர்கள் கட்டவிழ்த்து விடப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் அல்லது, புலி ஆதரவாளர்கள் இப்போதும் ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கின்றார்கள் என்பது சிறீலங்கா படைத்துறைக்கு தெரியாமல் இல்லை. அந்த ஆயுதங்களை அவர்கள் வெளியே எடுத்து பயன்படுத்தினால் அதை வைத்துக்கொண்டே ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் தாங்கள் வெற்றிபெற முடியும் என மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு நம்பியது.

அதற்காகவே மர்ம மனிதர்கள் உருவாக்கப்பட்டனர். அவர்களின் இலக்கு பெண்களாகவே இருந்தது. பெண்களின் மார்பகங்களைக் கீறுதல், அவர்கள் தனிமையில் இருக்கும் வீடுகளுக்குள் நுழைந்து அவர்களை அச்சுறுத்துதல் போன்ற செயல்களை மர்ம மனிதர்கள் அரங்கேற்றினர்.

பெண்கள் மீது யாராவது கைவைத்தால் ஆண்கள் பொறுமையாக இருக்கமாட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அதிலும் தமிழ்ப் பெண்கள் விடயத்தில் ஆண்கள் இயல்பாகவே அக்கறையாக இருப்பார்கள் என்பது தெரியும். அதற்காகவே கோத்தபாயவின் மர்ம மனிதர்கள் பெண்களை இலக்காகக் கொண்டனர்.

ஆனால், அவர் எதிர்பார்த்ததைப் போன்று எந்த ஆயுதங்களும் வெளியே எடுக்கப்படவில்லை. தமிழ் ஆண்கள் அமைதி காத்தனர்.

**மேற்படி குழுக்கள் அனைத்தும் எப்போதும் தயார் நிலையிலேயே இருக்கும். எந்த நேரத்தில் அவைகளுக்கு கட்டளைகள் பிறப்பிக்கப் படுகின்றனவோ அந்த நேரத்தில் உடனடியாகவே களமிறங்கி கனகச்சிதமாக காரியங்களை நிறைவேற்றும்.**

யாழ்ப்பாணம் நாவாந்துறையில் மட்டும் ஆண்கள் கொட்டன்களுடன் வெளியே வந்து மர்ம மனிதர்களைத் தாக்கத் தொடங்கியதால் அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது. அந்த வழக்கு இன்றுவரை நீதிமன்றில் நிலுவையாக இருக்கின்றமை அனைவரும் அறிந்த விடயம்.

அதேபோல, இன்று யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டமைக்கு முக்கிய காரணம், ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடை நீக்கியமை ஆகும்.

யுத்த காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்றும் அதனால் அவர்கள் மீது தடை விதியுங்கள் என்றும் சிறீலங்கா உலக நாடுகளைத் தொடர்ந்து கோரி வந்தது.

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி, பிரதமர் போன்ற அனைவரும் வெளிநாடுகளுக்குச் சென்றபோது புலிகள் மீதான தடையை முதன்மைப்படுத்தியிருந்தனர். வெளிவிவகார அமைச்சர் உலக நாடுகளின் கால்களில் வீழ்ந்து பிச்சை கோருவதைப் போலக் கோரினார்.

தொடர்ச்சி 22ம் பக்கம்



## மனைவியை மரத்துடன் கட்டி வைத்து தாக்குதல்

மிருசுவில் விடத்தற்பளைப் பகுதியில் மனைவியைக் கட்டி வைத்து இரவிரவாகத் தாக்கியுள்ளார் கணவர். காயங்களுக்கு இலக்கான நிலையில் மரத்துடன் கட்டப்பட்டிருந்த பெண்ணை மறுநாள் அதிகாலை அயலவர்கள் மீட்டுச் சென்று மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு வழங்கிய சிகிச்சையின் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டார்.

## சீதனம் கேட்டு மனைவி மீது தாக்குதல்

சீதனம் கேட்டு தனது மனைவியைக் கடுமையாகத் தாக்கினார் என்று தெரிவிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட கணவரை எதிர்வரும் 11ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று உத்தரவிட்டது. கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவரையே மன்று விளக்க மறியில் வைக்க உத்தரவிட்டது. திருமணமாகி ஒரு குழந்தையும் கிடைத்த நிலையில் தனது கணவர் சீதனம் தருமாறு கேட்டுத் தன்னை அடித்துக் கொடுமைப் படுத்துகின்றார். தொடர்ச்சியாக இவ்வாறே செய்கின்றார் என அவரது மனைவி கிளிநொச்சியிலுள்ள சிறீலங்காக் காவல் நிலையத்தில் கடந்த மாதம் 29ம் திகதி முறைப்பாடு பதிவு செய்தார். விசாரணைகளை முன்னெடுத்த காவல்துறை குற்றம் சாட்டப்பட்ட நபரை கைது செய்தனர்.

## அம்மாச்சி உணவகத்துக்கு சிங்களப் பெயர் வைக்க அழுத்தம்!

அம்மாச்சி உணவகத்துக்கு சிங்களத்தில் பெயர் வைக்க வேண்டும் என்று சிறீலங்கா அரசு வற்புறுத்துவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்




வரன் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அம்மாச்சி உணவகம் அமைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரிலும் இதைப் போன்ற உணவகம் அமைப்பதற்கு அரசிடம் நிதி கோரப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே கொழும்பு அரசு மேற்படி நிபந்தனை விதித்துள்ளதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார். அவர்கள் பணம் தருவதால் சிங்களப் பெயர் போடச் சொல்கின்றார்கள். சிங்களப் பெயர்தான் வைக்க வேண்டும் என்று காசு தரும் போதே சொல்லியிருந்தால் நாங்கள் காசு



வேண்டாம் என்று சொல்லியிருப்போம். நீங்கள் நன்மை செய்வதாகச் சொல்லித்தான் தந்தீர்கள். தமிழர் பாரம்பரிய உணவகத்திற்கு சிங்களச் சொல் தேவையில்லை. இவ்வாறுதான் எங்கள் தனித்துவத்தை அழிக்கின்றார்கள் என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## இலங்கையர்கள் 13 பேர் நாடு கடத்தல்

அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கையர்கள் 13 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர். சிறப்பு வானூர்தி மூலம் கடந்த 4ம் திகதி பண்டாரநாயக்காக விமானநிலையத்தில் கொண்டுவந்துவிடப்பட்டனர். சிறீலங்காக் குற்றப்புலனாய்வுப் பிரிவினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இவர்களிடம் விசாரணைகள் இடம்பெறுவதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். குறித்த 13 பேரும் 2012ம் ஆண்டு வானூர்தி மூலம் இந்தியாவிற்குச் சென்று அங்கிருந்தும் படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

## பெற்றோரை இழந்து 31 சிறுவர்கள் நிர்க்கதி

கிளிநொச்சி – கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் வாழ்கின்ற 8,203 சிறுவர்களில், தாயையும் தந்தையும் இழந்து 31 சிறுவர்கள் உள்ளனரென, பிரதேச செயலகப் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தந்தையை மட்டும் இழந்த சிறுவர்கள் 325 பேரும், தாயை மட்டும் இழந்த சிறுவர்கள் 40 பேரும், தந்தையைப் பிரிந்து வாழும் சிறுவர்கள் 13 பேரும், தாயைப் பிரிந்து வாழும் சிறுவர்கள் 12 பேரும், மாற்றுவலுவுள்ள சிறுவர்கள் 65 பேரும், மன வளர்ச்சி குன்றிய சிறுவர்கள் 03 பேரும், சிறுவர்கள் இல்லங்களில் 96 சிறுவர்களும், சீர்திருத்தப் பாடசாலைகளில் 13 சிறுவர்களும் உள்ளனர் எனவும், பிரதேச செயலகப் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுவிஸ் மாணவி மீது பாலியல் துஷ்பிரயோகம்

சுவிஸிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா வந்த 22 வயதுடைய மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த மாணவி அநுராதபுரத்தில் இரவு நேரக் களியாட்டங்களில் கலந்துகொண்டுவிட்டு, பின்னர் தான் தங்கியிருந்த விடுதிக்கு செல்ல முச்சக்கரவண்டி ஒன்றை வாடகைக்கு நிறுத்தி அதில் ஏறியுள்ளார். அச்சந்தர்ப்பத்தில் குறித்த நபர் மாணவியை விடுதிக்கு அழைத்துச் செல்லாமல் வேறு இடத்திற்கு அழைத்துச்சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். மாணவியை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திவிட்டு அநுராதபுரம் பேருந்து நிலையத்திற்கு அருகில் கொண்டு சென்றுவிட்டுள்ளார். இந்நிலையில், பாதிக்கப்பட்ட சுவிஸ் மாணவி காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து குறித்த சந்தேக நபரை கைது செய்தனர்.

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைச் சந்தித்தார் மனோ

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்திக் கிளிநொச்சில் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் மக்களை சிறீலங்காவின் அமைச்சர் மனோ கணேசன் கடந்த வாரம் சந்தித்துக் கலந்துரையாடினார். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் போராட்டம் 165 நாட்களுக்கு மேலாக தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது. இதுவரை அவர்களுக்கு உரிய தீர்வு வழங்கப்படவில்லை. இந்த நிலையில் அமைச்சர் மனோ கணேசன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். சிறீலங்கா காவல்துறையின் அதீத பாதுகாப்புடன் நடந்த இச்சந்திப்பின் போது எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோரும் உடனிருந்தனர்.

# கானல் நீராகுமா...

அப்பொழுது அதனை எதிர்த்து ஐரோப்பிய ஒன்றியம் மேன்முறையீடு செய்யாமல் இருந்திருக்கும் பட்சத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை பிரித்தானியா தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்திலும் 2015 ஆம் ஆண்டின் முற்பகுதியோடு நீங்கியிருக்கும்.

ஆனால் நடந்ததோ வேறு. ஐரோப்பிய ஒன்றியப் பொது நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆட்சேபித்து 16.12.2014 அன்று ஐரோப்பிய நீதிமன்றத்தில் ஐரோப்பிய ஒன்றியப் பேரவையால் மேன்முறையீடு செய்யப்பட்டது. இம் மேன்முறையீட்டு வழக்கை பிரான்ஸ் குடியரசே முன்னின்று ஆதரித்தது.

இது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. அதாவது 2011 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியப் பொது நீதிமன்றத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் தொடரப்பட்ட வழக்கை எதிர்த்துப் பிரதிவாதங்களை முன்வைத்த நெதர்லாந்தும், பிரித்தானியாவும் பின்னிலை வகிக்க, மேன்முறையீட்டு வழக்கில் பிரான்சே முன்னிலை வகித்தது. இதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்ற கேள்வி இப்பொழுது வாசகர்களுக்கு எழலாம். அதற்கான பதிலைக் கட்டுரையின் இறுதியில் தருகிறேன்.

பிரான்சின் ஆதரவுடன் ஐரோப்பிய ஒன்றியப் பேரவையால் மேன்முறையீட்டு வழக்குத் தொடரப்பட்ட ஒரு மாதத்தில் ஈழத்தீவில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது. மேற்குலகம் விரும்பிய மைத்திரி - ரணில் அரசாங்கம் ஆட்சிபீடத்தில் ஏறியது. சிங்கள தேசத்தின் பிரதம மந்திரியாகச் சிம்மாசனம் ஏறிய மறுகணமே ரணில் மேற்கொண்ட நடவடிக்கைகளில் முக்கியமானது ஐரோப்பிய ஒன்றியப் பேரவையின் மேன்முறையீடு எந்த இடையூறுகளும் இன்றி முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்வதாகும்.

இவ்வாறாக பிரான்ஸ் முன்னின்று ஆதரவு வழங்க, மைத்திரி - ரணில் அரசாங்கம் முழுமையான இராசரீக அழுத்தங்களைப் பிரயோகிக்க, ஐரோப்பிய ஒன்றியப் பேரவையால் ஐரோப்பிய நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேன்முறையீட்டு வழக்கிற்கான இறுதி அமர்வு 22.09.2016 அன்று நடைபெற்றது. இவ் அமர்வில் தனது நிலைப்பாட்டைப் பதிவு செய்த ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டவாளர் நாயகம், 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் வன்முறைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் எவையும் இல்லாத நிலையில் அவ் இயக்கத்தின் மீதான தடை நீக்கப்படுவதே பொருத்தமானது என்று தெரிவித்திருந்தார்.

18.05.2009 இற்குப் பின்னரும் வன்முறைகளில் - அதுவும் 2010 ஆடி வரையான காலப்பகுதியில் - தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டதாக இம் மேன்முறையீட்டு வழக்கில் ஐரோப்பிய ஒன்றியப் பேரவை குற்றம் சுமத்தியிருந்தாலும், அதற்கான ஆதாரங்களை அது முன்வைக்கவில்லை. இதுவும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குச் சாதமாக அமைந்தது.

இவ்வாறாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்க மேன்முறையீட்டு வழக்கை ஆராய்ந்த ஐரோப்பிய நீதிமன்றம், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையையும், சொத்து முடக்கத்தையும் நீக்கும் ஆணையைக் கடந்த 26.07.2017 அன்று பிறப்பித்திருக்கின்றது.

அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கத்திற்கு 26.07.2017 அன்று ஐரோப்பிய நீதிமன்றம் பிறப்பித்திருக்கும் ஆணையானது, 16.10.2014 அன்று ஐரோப்பிய ஒன்றியப் பொது நீதிமன்றம் பிறப்பித்த தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்க ஆணையை உறுதிசெய்யும் தீர்ப்பாகும். இன்னொரு விதத்தில் கூறுவதானால், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்றும் 16.10.2014 அன்று ஐரோப்பிய ஒன்றியப் பொது நீதிமன்றம் பிறப்பித்த ஆணை சரியானது என்பதையே 26.07.2017 அன்று ஐரோப்பிய நீதிமன்றம் உறுதிசெய்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அதியுச்ச நிலை நீதிமன்றம் என்ற வகையில், ஐரோப்பிய நீதிமன்றம் பிறப்பித்திருக்கும் ஆணையை, ஐரோப்பிய ஒன்றியம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நடைமுறைப்படுத்தித்தான் ஆக வேண்டும். அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கித்தான் ஆக வேண்டும். எனினும் இவ் ஆணையை நடைமுறைப்படுத்துவதற்கு நீதித்துறை விதிகளின்படி ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஒரு மாத கால அவகாசம் இருப்பதால், இம்மாத (ஆவணி) இறுதி வரை தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் தொடரலாம். இதுதான் 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளின் அடிப்படையில் அவ் அமைப்பின் மீதான தடை தொடரும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்புத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பின் ஓர் அர்த்தபரிமாணம் ஆகும். அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்க ஆணையை ஐரோப்பிய நீதிமன்றம் பிறப்பித்திருந்தாலும், தடை இம்மாத இறுதி வரை தொடரும்.

> **அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவதும், அதன் மூலம் தமிழீழத் தனியரசுக்கான ஆயுதப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதுமே இத்தடைகளின் நோக்கம் என்பதை அமெரிக்காவும், பிரித்தானியாவும் தெரியப்படுத்தியிருந்தன.**

அதற்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அது தானாகவே நீங்கி விடும். ஆனால் அத்தோடு பிரச்சினை முடிவுக்கு வரப்போவதில்லை.

ஏனென்றால், 18.05.2009 இற்குப் பின்னர் வன்முறைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டார்கள் என்பதற்கான புதிய ஆதாரங்கள் எவற்றையும் இம்மாத இறுதிக்குள்ளோ, அல்லது அதற்குப் பின்னரோ ஐரோப்பிய ஒன்றியப் பேரவையால் முன்வைக்க முடியும் பட்சத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான புதிய தடையை ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்க முடியும். அதாவது ஐரோப்பிய நீதிமன்றத்தின் ஆணைக்கு இணங்க இம்மாத இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை தானாக நீங்கிய மறுகணமே புதிய ஆதாரங்களின் அடிப்படையில், தமிழீழ விடுதலைப் புலிகள் மீது புதிய தடையை ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்க முடியும். 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளின் அடிப்படையில் அவ் அமைப்பின் மீதான தடை தொடரும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்புத் தூதரகம் தெரிவித்திருப்பதன் மற்றுமொரு அர்த்தபரிமாணம் இதுதான். ஏனென்றால் ரணில் - மைத்திரி அரசாங்கத்தைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்காக சிறீலங்காவிற்கு ஜி.எஸ்.பி பிளஸ் (GSP+) சலுகையை மீளவும் வழங்கியது போன்று, புதிய ஆதாரங்களின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் தடை செய்து ரணில் - மைத்திரி அரசாங்கத்தைத் தொடர்ந்தும் தனது கட்டுக்குள் வைத்திருப்பதில் ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாக உள்ளது.

அவ்வாறான ஆதாரங்கள் கிடைக்காத பட்சத்தில், பிரித்தானியாவைப் போன்று தமது உள்நாட்டுப் பயங்கரவாதத் தடைச் சட்டங்களிற்கோ, அன்றி அவசரகாலச் சட்டங்களுக்கோ உட்பட்டுத் தனித் தனியாகத் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாறு தனது அங்கத்துவ நாடுகளை - உதாரணமாக பிரான்சை - ஐரோப்பிய ஒன்றியம் கோரலாம்.

இப்பொழுது உள்ள மில்லியன் டொலர் கேள்வி என்னவென்றால், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மீளவும் விதிப்பதற்கு எவ்விதமான ஆதாரங்களை ஐரோப்பிய ஒன்றியம் முன்வைக்கப் போகின்றது என்பதுதான். தடைநீக்க வழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் வாதாடிய சட்டத்தரணிகளின் கருத்துப்படி, 18.05.2009 இற்குப் பின்னர் வன்முறைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் எவற்றையும் இதுவரை முன்வைக்காத ஐரோப்பிய ஒன்றியத்தால், இனியும் திடமான ஆதாரங்களை முன்வைப்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.

ஆனாலும் அண்மைய நாட்களில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளைத் தொடர்புபடுத்துவதற்கு மைத்திரி - ரணில் அரசாங்கம் முற்படுவதைப் பார்க்கும் பொழுது, தமிழீழ தாயகத்தில் சிங்களப் படைகளுடன் இணைந்து இயங்கும் முன்னாள் போராளிகள் சிலரைப் பயன்படுத்தித் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மீள விதிப்பதற்கான ஆதாரங்களைக் குள்ளநரி என்று பெயர் போன ரணில் சோடித்து விடுவார் என்றே அஞ்ச வேண்டியுள்ளது. இவ் அச்சத்திற்கு வலுவூட்டும் வகையில் வெளிநாடுகளில் இருக்கக்கூடிய தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களுக்குத் தண்டனை கொடுக்கப் போவதாக முகநூல் பக்கங்களிலும், கட்டாக்காலி இணையத்தளங்கள் ஊடாகவும் ஜனநாயகப் போராளிகள் என்ற பெயரில் இலங்கையில் இயங்கும் முன்னாள் போராளிகளைக் கொண்ட குழு ஒன்று மிரட்டி வருகின்றது. இக் குழுவில் உள்ளவர்கள் சிறீலங்கா புலனாய்வுப் பிரிவுடன் தொடர்புடையவர்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறி வருவது, இவர்களின் பின்னணி பற்றிய சந்தேகங்களை வலுவடைய வைக்கின்றது.

மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்க ஆணையை ஐரோப்பிய நீதிமன்றம் பிறப்பித்த சில மணிநேரங்களில், புலம்பெயர் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களை மிரட்டும் தொனியில் எல்லாளன் படை என்ற பெயரிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் கட்டமைப்பு என்ற பெயரிலும் இணையத் தொலைபேசி வலையமைப்புக்கள், முகநூல் பக்கங்கள் போன்றவை ஊடாக கடுகதியில் எச்சரிக்கைச் செய்திகளும், ஒலிப்பதிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

18.05.2009 இற்குப் பின்னர் புலம்பெயர் தேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி சிங்களக் கைக்கூலிகளால் பிரான்ஸ் நாட்டில் பல்வேறு வன்முறைகள் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன. இவ் வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் தம்மைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளாகவும், செயற்பாட்டாளர்களாகவும் பகிரங்கமாக அடையாளம் காட்டி வருவதோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுக் கட்டமைப்புக்களைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகளில் தாம் ஈடுபடுவதாகவும் நியாயம் கற்பித்து வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்க மேன்முறையீட்டு வழக்கில் பிரான்ஸ் முன்னிலை வகித்ததற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரில் பிரான்சில் இவ்வாறான சிங்களக் கைக்கூலிகளால் அரங்கேற்றப்பட்ட வன்முறைகளைக் காரணம் காட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இம் மாத இறுதியில் ஐரோப்பிய ஒன்றியம் மீளவும் விதித்தாலோ, அல்லது இவ் வன்முறைகளைக் காரணம் காட்டித் தனது பயங்கரவாத மற்றும் அவசர காலச் சட்டங்களின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பிரான்ஸ் குடியரசு தடை செய்தாலோ கூட நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை.

## ஆசியாவின் நோபல் பரிசு இலங்கைத் தமிழ் பெண்ணுக்கு!



ஆசியாவின் நோபல் பரிசு என்று அழைக்கப்படும் ராமன் மக்சாசே விருது இலங்கைத் தமிழ்ப் பெண் ஞானதீபம் கெத்ஸி சண்முகத்துக்கு வழங்கப்படவுள்ளது. 83 வயதுடைய இவர் இலங்கையில் பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்துள்ளார். இந்த விருது 6 பேருக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. இந்த விருது எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் உத்தியோகபூர்வமாக பிலிப்பைன்சில் வைத்து வழங்கப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. 1957 காலப்பகுதியில் பிலிப்பைன்ஸின் அரச தலைவராக இருந்த ரெமோன் மெக்செசேவின் ஞாபகார்த்தமாக இந்த விருது வழங்கப்படவுள்ளது. மனநல ஆலோசகரான ஞானதீபம் கெத்ஸி சண்முகம் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கி வருகிறார். யுத்தத்தில் கணவரை இழந்த பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்டோருக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்கி வருகின்றார். ஆதரவற்ற பெண்கள், குழந்தைகளிடையே கெத்ஸி 'ண்முகம் ஆற்றிய அயராத சேவையைப் பாராட்டி அவருக்கு விருது வழங்கப்படுவதாக மகஸேஸே விருதுகளை அளிக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது. கெத்ஸி சண்முகம் தவிர, கம்போடியாவில் உள்ள உலகப் புகழ் பெற்ற அங்கோர் வாட் கோயில் வளாகத்தைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்காற்றிய சரித்திர ஆய்வாளர் யோஷி யாகி இஷ்ஸாவா (79), ஏழைகளுக்கு இலவச உணவு அளிக்கும் திட்டத்தை தொடங்கிய டோனி டே (70), இந்தோனேசிய பழங்குடியினத்தவரிடையே தொண்டாற்றி வரும் ஆப்டன் நபாபன் (53), பிலிப்பின்ஸ் ஏற்றுமதியை அதிகரிக்க உதவிய வழக்குரைஞர் லிலியா டிலீமா (76) ஆகியோருக்கு இவ்வாண்டு மகஸேஸே விருது அளிக்கப்படுகிறது. இவர்களுடன், பிலிப்பின்ஸில் மேடை நாடகங்கள் மூலம் அரசியல், சமூக எழுச்சி ஏற்படும் வகையில் கடந்த 50 ஆண்டுகளாக இயங்கி வரும் பிலிப்பீன் தேசிய கல்வி நாடக சங்கத்துக்கும் விருது வழங்கப்படுகிறது. இவர்களுக்கு பதக்கமும், 50 ஆயிரம் டொலர் பணப் பரிசும் வழங்கப்படும்.

### ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை விசாரணையும்

## சிரித்துக்கொண்டு திரியும் பிள்ளையானும் குழுவினரும்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பிள்ளையான் உட்பட 5 சந்தேக நபர்களினதும் விளக்கமறியல், தொடர்ந்து எதிர்வரும் நவம்பர் 6ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இந்த வழக்கு விசாரணை, நவம்பர் 20ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பிள்ளையான், பிரதீப்,கிருஸ்ணானந்தராஜா, இராணுவப் புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவ சிப்பாய் கே.ஏ.மதுசிங்க ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இருவர் இன்னும் கைதுசெய்யப்படாமலிருப்பதால், அவர்கள் தொடர்பாக எதிர்வரும் செப்டெம்பர் 20ம், 25ம் திகதிகளில், மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் குற்றத்தடுப்புப் பிரிவினர் விளக்கமளிக்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார்.

த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், 2005ம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்துகொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டார். இது தொடர்பாக கடந்த 11.10.2015 அன்று கைது செய்யப்பட்ட பிள்ளையான் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஆனால் படுகொலையைப் புரிந்துவிட்டு எதோ சாதனையைப் புரிந்தவர் போல், மகிழ்ச்சியோடும் சிரிப்போடும் பிள்ளையானும் குழுவினரும் நீதிமன்றம் வந்து செல்லும் காட்சிகள் அமைந்திருக்கின்றன.

## வடிவேலுவும் நம்ம அரசியல் தலைகளும்

## 8




திக்கம் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பின எம்.ஏ.சுமந்திரன்



# செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வாமகள்

**செய்தி:-** 'நாட்டில் நீண்ட காலமாக இரண்டு பெரும்பான்மை கட்சிகளுக்கு இடையில் இருந்த போட்டி காரணமாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலமை மீண்டும் ஏற்படுவதற்கு இடமளிக்கப்படக் கூடாது' என எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் கூறினார்.

**எழும் கேள்வி:-** மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள், சிங்களக் கட்சிகளால் மட்டும்தானா தமிழர்கள் ஏமாந்தார்கள்..?

★★★★ ★★★★



**செய்தி:-** 'வடமாகாணத்தில் இடம்பெற்று வரும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த வடமாகாணத்தைச் சேர்ந்த இளம் பெண்கள் பொலிஸ் சேவையில் இணைந்து பணியாற்ற வேண்டும்' என வடக்கு மாகாண மகளிர் விவகார புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** ஏன் இந்த விபரீத எண்ணம்..? மாகாணசபைக்கு காவல் துறை அதிகாரம் கிடைத்துவிட்டதா என்ன..?

★★★★ ★★★★

**செய்தி:-** சுவிட்சர்லாந்தில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களை நாடு திரும்புமாறு, சுவிட்சர்லாந்து தூதரகத்தில் நடைபெற்ற சுவிஸ் தேசிய தினநிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றிய சிறீலங்கா மீள்குடியேற்றத்துறை அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** ஏன் பொருத்து வீட்டில் யாரும் குடியிருக்க வருகினம் இல்லையோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** மிருசுவில் - விடத்தற்பளைப் பகுதியில் மனைவியைக் கட்டி வைத்து இரவிரவாகக் கணவர் தாக்கியுள்ளார்.

**எழும் கேள்வி:-** 'மேர்வின் சில்வா'வின் நண்பராக இருப்பாரோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** 'கைப்பற்றுகின்ற போதைப் பொருட்களை என்ன செய்கின்றீர்கள்?' இவ்வாறு அமைச்சரவைக் கூட்டத்தில் திடீரெனக் கேட்டார் சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

**எழும் கேள்வி:-** அதனைத்தான் விட்டுவிட்டு (விற்றுவிற்று) பிடிக்கின்றார்களோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** 'நாட்டைப் பிரிக்குமாறு நாங்கள் கேட்கவில்லை, இதை சிங்கள மக்கள் மத்தியில் உரக்கச் சொல்லப் போகின்றோம்' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப் பாக்கிற்கு விலை சொல்வதென்பது இதுதானோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** பாடசாலைகளை விட்டு இடை நடுவில் விலகிச் சென்ற மாணவர்கள் தமக்கான சுயதொழில் முயற்சியாக போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாக சிறீலங்காவின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோகினி கவிரத்ன தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** வியாபாரம் களை கட்டி நடக்குதுபோல..?

★★★★ ★★★★

**செய்தி:-** ஆசையும், பேராசையும் இருந்தால் மாத்திரமே வாழ்க்கையில் முன்னேற முடியும் என சிறீலங்காவிற்கான இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்தார்.



**எழும் கேள்வி:-** 'தனி ஒருவன்' படத்தைப் பலதடவை பார்த்திருப்பாரோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** நாடாளுமன்ற ஜனநாயகம் சாவுப் படுக்கையில் விழுந்துள்ள நிலையிலும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் பதவிக்காக எதையும் பேசாது மௌனமாக இருக்கின்றார் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன குற்றம்சாட்டினார்.

**எழும் கேள்வி:-** அட இது உங்களுக்கும் தெரிஞ்சுபோச்சா..?

# திருமலை இரகசிய...

கட்டுப்பாட்டில் புலனாய்வு பிரிவின் கூட்டுக் கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி காவல் பரிசோதகர் நிஸாந்த டீ சில்வா தலைமையில் முன்னெடுக் கப்படும் இருவேறு விசாரணைகளில் இந்த பிரதான கடத்தல்கள் தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. கொழும்பு, கொட்டாஞ்சேனை, தெஹிவளை, வத்தளை மற்றும் கட்டுநாயக்க உள்ளிட்ட பல பிரதேசங்களில் பல்வேறு உத்திகளை கையாண்டு இந்த கடத்தல்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக தெஹிவளையில் 17.09.2008 அன்று பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள அலி ஹாஜியார் அன்வர் என்பவரது வீட்டில் வைத்து அவருடன் ரஜீவ நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஸ்வரன் ராமலிங்கம், மொஹம்மட் திலான், மொஹம்மட் சாஜித் ஆகிய ஐந்து மாணவர்களும் கடத்தப்பட்டிருந் தனர். இதனைவிட கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிலாகே ஜோன் ரீட், அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அமலன் லியோன் மற்றும் ரொஷான் லியோன், கொட்டாஞ்சேனையை சேர்ந்த அன்டனி கஸ்தூரி ஆராச்சி, திருகோணமலையை சேர்ந்த தியாகராஜா சுஜன் உள்ளிட்டோரும் கடத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கடத்தப்பட்ட அனைவரும் திருகோணமலை கடற்படை தளத்தில் உள்ள இரகசிய வதை முகாமான கன்சைட் எனும் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந் தமையை குற்றப் புலனயவாளர்கள் கண்டுபிடித்தனர். இந்த விடயம் சர்வதேச அளவில் அவதானிப்புக்கு உள்ளாகியுள்ள நிலையில், சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளராக கடமையாற்றியிருந்த லெப்டினன் கொமான்டர் சம்பத் முனசிங்க, கன்சைட் நிலத்தடி இரகசிய வதை முகாமின் பொறுப்பாளராக அப்போது இருந்த லெப்டினன் கொமாண்டர் தரத்தினை உடைய தற்போது கொமாண்டராக பதவி உயர்த்தப்பட்டுள்ள சுமித் ரணசிங்க, கடற்படை சிப்பாய் லக்ஷ்மன் உதயகுமார, நலின் பிரசன்ன விக்ரமசூரிய, தம்மிக தர்மதாஸ, கித்சிரி மற்றும் சிறப்பு புலனய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் கடற்படை ஊடகப் பேச்சாள ராகவும் அப்போது பதவி வகித்த கொமாண்டர் டி.கெ.பி.தஸநாயக்க ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் சம்பத் முனசிங்க பிணையில் உள்ள நிலையில் ஏனையோர் தொடர்ந்து விளக்கமறியலில் இருந்து வருகின்றனர். புதன்கிழமை விசாரணைகள் ஆரம்பமானபோது சந்தேக நபர்கள் மன்றில் முன்னிறுத்தப்பட்டிருந்த நிலையில் 7 வது சந்தேக நபரான டி.கே.பி.தசநாயக்க மட்டும் மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் வெலிசறை கடற்படை வைத்தியசாலையில் சிறைக்காவலர்களின் பாதுகாப்பின் கீழ் சிகிச்சைப் பெறுவதாக இதன்போது சிறை அதிகாரிகளால் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அசித் சிறிவர்தனவின் கீழ் சட்டத் தரணிகள் குழு மன்றில் முன்னிலையாகியிருந்த நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவின் சார்பில் பிரதான விசாரணை அதிகாரி யாழ். மாணவி வித்தியா கொலை வழக்கில் சாட்சியம் வழங்க சென்றிருந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான காவல் பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்க, உப காவல் பரிசோதகர் பீ.எச்.உபாலி, ஆகியோர் மன்றில் மேலதிக விசாரணை அறிக்கையுடன் முன்னிலையாகினர். பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன மன்றில் பிரசன்னமானார். இதன்போது மன்றில் சிறப்பு அறிக்கையை சமர்பித்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான காவல் பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்க கருத்துக்களை முன்வைத்தார். கடந்த தவணையின் போது 2ம், 3ம் சந்தேக நபர்களுக்கு எதிராக கப்பம் கோரியமை தொடர்பில் சாட்சிகள் உள்ளதா என வினவப்பட்டது. இதுவரையிலான விசாரணையில் அவ்வாறான சாட்சிகள் இல்லை. எனினும் அவர்களுக்கு எதிரான விசாரணைகள் தொடர்கின்றன. பந்து குமார என்பவர் தன்னிடம் கப்பம் கோரியதாக ஊடகவியலாளர் சந்திப்பில் பாதிக்கப்பட்ட தரப்பு தாய் ஒருவர் தெரிவித்த விவகாரம் தொடர்பில்நாம்அவரிடம்வாக்குமூலம்பெற்றோம். இதன்போதுபந்துகுமாரவின்பெயரை தான் தவறுதலாக தெரிவித்ததாக அவர் தெரிவித்தார். 3, 4ம் சந்தேக நபர்களுக்கு எதிரான எதிர்கால விசாரணைகள் தொடர்பில் கடந்த தவணை கேள்வி எழுப்பப்பட்டது. அவர்களுக்கு எதிராக மட்டுமன்றி அனைத்து சந்தேக நபர்களுக்கு எதிராகவும் விசாரணைகள் தொடர்கின்றன.

இதுவரை வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த தவணை விசாரணையின் பின்னர் நாம் பதிவு செய்த முக்கிய வாக்குமூலம் ஒன்றூடாக சில விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கடற்படையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரியான ரியர் அட்மிரல் ரீ.ஜே.எல்.சின்னையாவிடம் நாம் வாக்குமூலம் பெற்றோம். இதன்போது அவர் முக்கிய சில தகவல்களை வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப் படுவதாக கூறப்படும் திருமலையில் உள்ள கன்சைட் முகாமின் 1, 2ம் இலக்க சிறைக் கூடங்களில் என்ன நடக்கிறது என்பது முன்னாள் கடற்படை தளபதி வசந்த கர்ணகொட, டி.கே.பி.தஸநாயக்க, லெப்டினன் கொமாண்டர் ரணசிங்க, லெப்டினன் கொமாண்டர் பண்டார ஆகியோரே அறிந்திருந்தனர். வேறு எவருக்கும் அங்கு என்ன நடக்கிறது என்பது தெரியாது என அவர் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதே நேரம் கைது செய்யத் தேடப்பட்டு வரும் லெப்டினன் கொமாண்டர் ஹெட்டியாரச் சியை கைது செய்ய நாம் பல விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம். தற்போது அவரது நண்பர்கள், உறவினர்கள் மீது எமது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. யாரேனும் அவருக்கு அடைக்கலம் கொடுத்துள்ளனரா என ஆராய்ந்து வருகின்றோம். இந்த விடயத்தில் இன்னும் யாரெல்லாம் கைது செய்யப்பட போகிறார்கள் என்பதை பிரதான விசாரணை அதிகாரியான காவல் பரிசோதகர் நிசாந்த சில்வாவுக்கே தெரியும். எனவே அவர் மன்றில் முன்னிலையாகி அது தொடர்பில் அடுத்த தவணை அறிவிப்பார் என பிரதான காவல் பரிசோதகர் ரஞ்சித் முனசிங்க தெரிவித்தார். இதனையடுத்து சந்தேக நபர்களின் சட்டத்தரணி அசித் சிறிவர்தனவும் மற்றொருவரும் மன்றில் கருத்துக்களை முன்வைத்தனர். குற்றப் புலனாயவுப் பிரிவு பக்கச் சார்பாக நடந்துகொள்வதாகவும் உபுல் பண்டார, பந்து குமார உபுல் சமிந்த, காமினி மென்டிஸ், வெலகெதர உள்ளிட்ட சிலர் இக்கடத்தலுடனும் கப்பம் கோரிய சம்பவம் தொடர்பிலும் தொடர்புபட்டு இருந்தும் அவர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவு கைது செய்யவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். எனினும் குற்றப் புலனாய்வுப் பிரிவு பக்கச் சார்பானது என்பதை அதன் பொறுப்பதிகாரி ரஞ்சித் முனசிங்க மறுத்தார். சாட்சிகளின் அடிப்படையிலேயே கைதுகள் இடம்பெற்றுள்ளதாகவும், விசாரணை நிறைவடையாத நிலையில் மேலும் நபர்கள் இருப்பின் கைது செய்யப்படுவர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். விரிவானவிசாரணைகளைசெய்துசந்தேகநபர்கள்யாராகஇருப்பினும் அவர்களைக்கைதுசெய்யுமாறுநீதிவான்லங்கஜயரத்னகுற்றப்புலனயவுப்பிரிவுக்கும்ஆலோசனை வழங்கினார்.

இதனையடுத்து மன்றில் கருத்துக்களை முன்வைத்த சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன, சந்தேக நபர்கள் தற்போது ஒவ்வொருவரின் பெயராக கூறுவதாகவும், அவர்கள் உண்மையில் குற்றத்துடன் தொடர்புபட்டிருப்பின் அதிகாரம் இருந்தபோது அவர்களுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என கேள்வி எழுப்பினார். தற்போது சந்தேக நபர்கள் சிக்குண்டுள்ள நிலையில் மூக்கு வரை நீர் மட்டம் வந்ததும் வேறு வழியின்றி ஒவ்வொருவரின் பெயரைக் கூறிவருவதாகவும் எவராக இருந்தாலும் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வாதிட்டார். இதனையடுத்து குறித்த வழக்கை எதிர்வரும் 10ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

# தமிழர்களின் சொத்துக்களை விற்கும் மர்ம நபர்கள்!

## கொழும்பில் 8 பேர் கைது

## புலம்பெயர்ந்த தமிழர்களே அவதானம்

**வெற்றிநிலவன்**

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களின் இலங்கையில் உள்ள நிலங்கள், காணிகள், வீடுகள் போலி ஆவணங்கள் மூலம் யார் யாருக்கோ விற்கப் படுவது 2009 இன அழிப்பிற்கு பின்னர் மிகமோசமாக அதிகரித்துள்ளது. சில தமிழ் குடும்பத்தினர் தாய கத்தை விட்டு முழுமையாகப் புலம்பெயர்ந்துள்ள நிலையில், அவர்களின் அசையாச் சொத்துக்கள் தாய கத்தில் கவனிப்பாரற்று அப்படியே இருக்கின்றன. அவர்களின் சொத்துக்களின் விபரங்களைத் தெரிந்து கொண்டவர்கள், அவர்களுக்குத் தெரியாமல் போலி உறுதிகளைத் தயாரித்து அவற்றை வேறு யாருக்கும் விற்றுவிடும் கொடுமை அரங்கேறிக்கொண்டிருக் கின்றது. இவ்வாறு தீவுப் பகுதிகளில் குறிப்பாக புங்குடுதீவுப் பகுதியில் சிலரது காணிகள் அவர்க ளுக்கே தெரியாமல் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அதேவேளை, பூநகரியில் 860 ஏக்கர் காணி போலி ஆவணங்கள் மூலம் சிங்களவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள தகவல் அண்மையில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

மிகவும் திட்டமிட்டு எத்தனையோ போராளி களின் இழப்புக்களுடன் ‘தவளைப் பாய்ச்சல்’ நடவ டிக்கை ஊடாக பூநகரியை மீட்டெடுத்தனர் விடு தலைப் புலிகள். அந்த மண்ணை மீட்பதற்காக 450ற் கும் மேற்பட்ட போராளிகள் தங்கள் உயிர்களையே அர்ப்பணித்திருந்தனர். ஆனால், அதே பூநகரிப் பகு தியைச் சேர்ந்த மூவரே போலி ஆவணங்களைத் தயாரித்து 860 ஏக்கர் காணியை பல கோடி ரூபாவுக்கு சிங்களவர்களுக்கு விற்பனை செய்திருந்தனர். இவ்

**தவளைப் பாய்ச்சல் நடவடிக்கை ஊடாக பூநகரியை விடுதலைப் புலிகள் மீட்டெடுத்தனர். அந்த மண்ணை மீட்பதற்காக 450ற்கும் மேற்பட்ட போராளிகள் தங்கள் உயிர்களையே அர்ப்பணித்திருந்தனர். ஆனால், அதே பூநகரிப் பகுதியைச் சேர்ந்த மூவரே போலி ஆவணாங்களைத் தயாரித்து 860 ஏக்கர் காணியை பல கோடி ரூபாவுக்கு சிங்களவர்களுக்கு விற்பனை செய்திருந்தனர்.**




வாறு தமிழர் தாயகத்தின் பல்வேறு இடங்களிலும் தமிழர்களின் சொத்துக்கள் இவ்வாறு அவர்களுக்கே தெரியாமல் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தொடர் ந்து விற்பனைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் போலி ஆவணங்கள் தயாரிப்பிற்கு பின் னால் சிறீலங்கா இராணுவ தரப்பைச் சேர்ந்தவர் களும், காவல்துறை தரப்பை சேர்ந்தவர்களும் இருப் பதுடன் அவர்களுக்கு துணையாக கச்சேரிகளில் பணி யாற்றும் ஊழியர்களும், காணி பதிவாளர் திணைக் களத்தைச் சேர்ந்தவர்களும் உதவி வருவதாக கண் டறியப்பட்டுள்ளது. வெளிநாட்டில் உள்ளவர்களின் காணிகளை அடையாளம் காண தமிழர்கள் சிலரும் உதவி புரிந்து பலகோடிகளைச் சம்பாதித்து வருகின் றனர்.

ஒருவருக்கு சொந்தமான காணியை அல்லது வீட்டை முதலில் இன்னொருவருக்கு விற்று, அவர் பின்னர் வேறு ஒருவருக்கு விற்பதாக போலி ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதனால் காணிக்கு சொந்தக் காரர் இந்த விற்பனையில் பங்கேற்கவேண்டிய தேவையே இல்லாமல்போகின்றது. விடுமுறையில் தாயகம் செல்லும் பலர், தங்கள் நிலங்களைப் பார்ப் பதற்கு சென்றபோது அதன் உரிமையாளர்களாக வேறு ஒருவர் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடையும் சம்பவங்கள் தற்போது தமிழர் தாயகத்தில் அடிக்கடி இடம்பெறுவதாக கூறப்படுகின்றது. தமிழர் தாயகம் மட்டுமல்ல, அதற்கு வெளியேயும் கொழும்பு போன்ற பகுதிகளிலும் தமிழர்களின் சொத்துக்கள் இவ்வாறு போலி ஆவணங்கள் மூலம் விற்பனை செய்யப்பட் டுள்ளமை கடந்த காலங்களில் கண்டறியப்பட்டுள் ளன. இந்த விற்பனைகளில் இராணுவ கப்டன் தர அதிகாரிகளும் பங்கெடுத்திருந்தமை கண்டறியப்பட் டது. பெரும்பாலும் வெளிநாட்டில் உள்ளவர்களின் சொத்துக்களே இவ்வாறு போலி ஆவணங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆனால் தற்போது நாட்டில் உள்ள ஒருவரின் சொத்தை அவருக்கு தெரியாமல் விற்பனை செய்ய முயன்று 8 பேர் கைதாகியுள்ளனர். அவர்களிடம் இருந்து காணிகளின் போலி உறுதிப்பத்திரங்களையும் அவற்றை தயாரிக்க பயன்படுத்திய உபகரணங்களை யும் கண்டுபிடித்துள்ளார்கள். மிகவும் பெறுமதியான ஓர் இடத்தை வந்தவரை இலாபம் என்றளவில் மிக வும் குறைந்த விலைக்கு விற்க முனைந்தபோது இவர் கள் கைதாகியுள்ளனர்.

இதுகுறித்து விபரமாகத் தெரியவருவதாவது, கொழும்பு பம்பலப்பிட்டி பகுதியில் தமிழ் வர்த்தகர் ஒருவரின் 26 கோடி ரூபா பெறுமதியான காணியை போலி காணி உறுதிப் பத்திரம் ஊடாக 5 கோடி ரூபா வுக்கு விற்பனை செய்ய முயன்ற திட்டமிட்ட கும்பல் ஒன்றினை கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர். அந்த திட்டமிட்ட கும்பலிட மிருந்து மேலும் நூற்றுக் கணக்கான ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில் இத்தகைய மோசடி நடவடிக்கைகள் ஏதும் இந்த கும்பலால் அந்த ஆவ ணங்களை பயன்படுத்தி ஏற்கனவே முன்னெடுக்கப் பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய விசேட விசார ணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் கொழும்பு பிரதிக் காவல்மா அதிபர் லலித் பத்திநாயக்கவின் கட்டுப்பாட் டில் கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவின் பணிப்பா ளர் காவல் அத்தியட்சர் ரொஹான் பிரேமரத்னவின் ஆலோசனைக்கு அமைய மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 22ம் பக்கம்

தானும் சாப்பிடாது மற்றதையும் சாப்பிட விடாது என்பது போல தமிழ் அரசுக்கட்சியின் நிலைமை மாறிவிட்டது. கடந்த வாரம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கல்குடாத் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அத்தொகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் நிகழ்வு ஒன்றிக்காக சென்றபோது சில புதுவிதமான மிகவும் ஒரு வங்ரோத்தான கருத்துக்களை அவர் தெரிவித்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் மாற்றினங்களினால் நிலங்கள் அபகரிக்கப்படவில்லை. தமிழர் அடையாளங்கள் அழிக்கப்படவில்லை. ஓர் இந்து ஆலயத்தில் கூட கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறவில்லை. அதன் புனிதத்தன்மை பேணப்பட்டது. கடந்த 2007 ஆம் ஆண்டு சிங்கள படையின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் பின்னர் தமிழர்களின் ஈழ தேசம் சின்னாபின்னமாக மாறிக் கொண்டுவருவதை அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

# வங்ரோத் அரசியல் நடாத்தும் தமிழ் அரசுக்கட்சி

2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழர்களின் ஈழதேசம் சிங்களவர்கள் ஆக்கிரமிப்பு மற்றும் முஸ்லீம்களின் ஆக்கிரமிப்பு என தொடர்ந்து செல்கிறது. மாவட்டத்தில் ஒரு காலத்திலும் முஸ்லீம்கள் வசிக்காத கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேச செயலாளர் பிரிவில் இன்று முஸ்லீம் அரசியல்வாதிகள் நூற்றுக் கணக்கான ஏக்கர் காணிகளை கபளீகரம் செய்துள்ளனர். கொழும்பு அரசாங்கத்தின் பின்புலத்தில் தோட்டக் காணி, வயல்காணி, குடியிருப்பு காணி என ஏக்கர் கணக்கில் அத்துமீறிய கொள்ளைநடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

அதுமாத்திரமல்ல, கோறளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாகனேரி பகுதியில் உள்ள குளத்துமடு எனும் கிராமத்தையே முஸ்லீம் கிராமமாக மாற்றும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. மாவட்டத்தில் 14 பிரதேச செயலளார் பிரிவுகள் உள்ளன. இவற்றில் கோறளைப்பற்று மேற்கு, கோறளைப்பற்று மத்தி, ஏறாவூர் பற்று, காத்தான்குடி ஆகிய 4 பிரதேச செயலளர் பிரிரிவுகள் மாத்திரம் முஸ்லீம்கள் வாழும் பகுதியாகும். ஆனால் இன்று அனைத்து பிரதேச செயலளார்கள் பிரிவிலும் அத்துமீறிய குடியேற்றங்களை மேற்கொண்டுவருகின்றனர்.

இவற்றில் மிகவும் முக்கியமாக மண்முனைப் பற்று ஆரையம்பதி கிராமத்தில் உள்ள தமிழர்களின் இறந்த உடல்ளை அடக்கம் செய்யும் பொது மயானத்தைக் கூட இவர்கள் விட்டு வைக்கவில்லை. மாவட்டத்தில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐந்து மாகாண சபை உறுப்பினர்கள் இருந்தும் சிங்களவர்கள் மற்றும் முஸ்லீம்களினால் தமிழர் பகுதியில் திட்டமிட்ட வகையில் இடம்பெறும் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மீண்டும் விடயத்திற்கு வருகின்றேன்... அண்மையில் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முறாவோடை கிராமத்தில் உள்ள சக்தி பாடசாலைக்கு சொந்தமான விளையாட்டு மைதானத்தை முஸ்லீம்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இது ஒரு குறுகிய காலத்தில் இடம்பெற்ற சம்பவம், இதற்கு முன்பு இக்கிராமத்தில் அக்கிராமத்தவர்கள் காணிக்கான உரிய ஆவணங்களை வைத்தியிருந்தும், முஸ்லீம்கள் அத்துமீறிய குடியேற்றத்தையும், பள்ளிவாயில்கள் அமைக்கும் நடவடிக்கை தொடர்பாகவும் கல்குடாத் தொகுதியை பிரநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தனர். அத்துடன் அரச அதிகாரிகள், மனித உரிமை அமைப்புக்கள் என அந்த மக்கள் செல்லாத இடமேயில்லை.

## 'கிழக்கில் இருந்து' எழுவான்

இந்நிலையில், கடந்த மாதம் பாடசாலை விளையாட்டு மைதானம் ஆக்கிரமிப்புத் தொடர்பாக மட்டக்களப்பு நகரிலுள்ள விகாராதிபதி



அம்பிட்டிய சுமணரெட்ன தேரர் ஆக்கிரமிப்புக்கு எதிராக கருத்துத் தெரிவித்திருந்தார். இதனைக் கண்டித்து அந்தத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான சீனித்தம்பி யோகேஸ்வரன் அறிக்கை ஒன்றை ஊடகங்களுக்கு வழங்கியிருந்தார்.

அதில் அவர் தெரிவித்திருந்த கருத்து 'மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலங்கள் அபகரிக்கப்படுவது தங்களுக்குத் தெரியாதாம். தங்களின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தால் அதனை தீர்த்து வைத்திருக்கலாம்' என்ற கருத்துப்பட அந்த அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர் இரு தடவைகள் தேர்தலில் தெரிவானவர். அதுமாத்திரமல்ல கல்குடாத் தொகுதியில் பிறந்து வளர்ந்தவர்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

## இலங்கையர்கள் அறுவர் டுபாயில் கைது

பெருந் தொகையான பணத்தை திருடிய குற்றச்சாட்டில் இலங்கையர்கள் ஆறு பேர் டுபாயில் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த ஆறு பேரும் 11 இலட்சத்து 98 ஆயிரம் திர்ஹம் பணத்தை திருடியுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வெவ்வேறு நிறுவனங்களுக்கு உரிய பணத்தை வாகனத்தில் கொண்டு செல்லும் போது இவர்கள் பணத்தை திருடியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## ம.உ. ஆணைக்குழுவுக்கு 1,223 முறைப்பாடுகள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு, கடந்தாண்டின் கடைசிக் காற்பகுதியில், 1,223 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன என அவ்வாணைக்குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது. இந்த அறிக்கையின்படி, முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின்படி, 680 முறைப்பாடுகள், ஆணைக்குழுவின் எல்லைக்குள் காணப்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. 132 முறைப்பாடுகள், முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. குறித்த அறிக்கையின்படி, அதிகளவிலான முறைப்பாடுகள், கண்டி மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளன. அங்கிருந்து, 244 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மாத்தறையிலிருந்து 170, அநுராதபுரத்திலிருந்து 141, மட்டக்களப்பிலிருந்து 80, கல்முனையிலிருந்து 78, வவுனியாவிலிருந்து 79, யாழ்ப்பாணத்திலிருந்து 73, அம்பாறையிலிருந்து 56, பதுளையிலிருந்து 55, திருகோணமலையிலிருந்து 45 முறைப்பாடுகள் என, கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் அமைந்துள்ளன.

## இலங்கைப் பணியாளர்கள் தொழில் வாய்ப்பை இழக்கும் அபாயம்

கொரியா மற்றும் இஸ்ரேல் நாடுகளில் இலங்கைப் பணியாளர்கள் தொழில் வாய்ப்புக்களை இழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று சிறீலங்கா வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக செயற்பாட்டு இயக்குனர் உப்புல் தேஷ்ப்பிரிய தெரிவித்தார். தொழில் நிறுவனங்களில் இருந்து தப்பிச்சென்று வேறு இடங்களில் சட்டவிரோதமாக பணியாற்றுவதன் காரணமாகவும், சேவைக் காலம் நிறைவடைந்து சட்டவிரோதமாக அந்த நாடுகளில் தங்கியிருப்பவர்களாலும் இந்த ஆபத்து ஏற்பட்டுள்ளது. கொரியாவில் கிட்டத்தட்ட 5000 இலங்கைப் பணியாளர்கள் சட்டவிரோதமாக தங்கியிருக்கின்றனர். அவர்கள் தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனால் பல நாடுகளில் பணி புரியும் இலங்கைப் பணியாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, இஸ்ரேல் நாட்டில் பணியாற்றிய இலங்கையர்கள் பலர் காணாமல்போயுள்ளதால் அந்நாடு இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதை நிறுத்தும் முடிவிற்கு வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழரசுக் கட்சியை கழற்றிவிட்ட பங்காளிக்கட்சிகள்!

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் கூட்டாக செயற்பட வவுனியாவில் தீர்மானித்துள்ளன. இது தொடர்பாக வவுனியாவில் தொடருந்து நிலையத்திற்கு அண்மையில் உள்ள விருந்தினர் விடுதியொன்றில் கடந்த 2ம் திகதி புதன்கிழமை இரகசியச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகளின் வவுனியா மாவட்ட பிரதிநிதிகள் வவுனியா விருந்தினர் விடுதியில் ஒன்று கூடி இம்முடிவை எடுத்துள்ளனர். அண்மைக்காலமாக கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளுள் ஒன்றான தமிழரசுக்கட்சி தன்னிச்சையாக செயற்பட்டுவரும் நிலையில் ஆயுதப் போராட்டத்தின் வழிவந்த ஏனைய கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தது.

அதன் முன்னுதாரண நடவடிக்கையாக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி இனிவருங்காலத்தினில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பெயரினில் செயற்படுவதென தீர்மானித்துள்ளனர். குறித்த ஒன்றுகூடலில் மாவட்ட ரீதியில் மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட முடிவெடுத்துள்ளதாகவும், எதிர்காலத்தில் மாதாந்தம் இப்படியான ஒன்றுகூடல்கள் தொடருமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தினில் அவதானிப்பாளர்களாக சிவசக்தி ஆனந்தன், சித்தார்த்தன் உள்ளிட்ட தலைவர்களும் பங்கெடுத்திருந்தனர். இதுவரை தமிழரசுக்கட்சியுடனான உறவு தொடர்பினில் மதில் மேல் பூனையாகவிருந்த சித்தார்த்தன் மற்றும் அடைக்கலநாதன் ஆகிய இருவரும் மாகாணசபையினில் தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகளினால் தீர்க்கமான முடிவை எடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

இதனிடையே வடமாகாண போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன் விரைவில் ரெலோவில் இருந்து நீக்கப்படவுள்ளார். எதிர்வரும் 12ம் திகதி வவுனியாவில் கூடும் உயர்மட்ட கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்படலாமென தெரிகிறது. ஏற்கனவே கட்சியுடன் உறவை பேணாத நிலையில், வடமாகாண முதலமைச்சரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் டெனிஸ்வரன் கையெழுத்திட்டார். எனினும், முதலமைச்சரை ஆதரிப்பதென ரெலோ முடிவுசெய்திருந்தது. கட்சியின் முடிவை மீறி டெனிஸ்வரன் கையெழுத்திட்டதையடுத்து, அவரிடம் விளக்கம் கேட்டு கட்சி கடிதம் அனுப்பியிருந்தது. ஆனால் டெனிஸ்வரன் இதற்கு பதிலளிக்கவில்லை.

நிலவன்






**கேள்வி:–** ‘கலியுகம், கலியுகம்’ என்கிறார்களே அது எப்படி இருக்கும்...? அது வந்துவிட்டதா அல்லது இனித்தான் வரப்போகின்றதா..?

எஸ்.நாகமணி சார்சல் பிரான்ஸ்

**பதில்:–** இது மகாபாராதத்தில் வருகின்ற ஒரு கதை. கடவுளைப் போல் இதிகாசங்களை, புராணங்களை நம்புவதும் நம்பாமல் விடுவதும் அவரவர் மனநிலையைப் பொறுத்தது. கலியுகம் குறித்து மகாபாரதத்தில் மிக நீண்ட விளக்கம் இருக்கின்றது. அதனை மிகமிகச் சுருக்கி இங்கே தருகின்றேன்.

‘கலியுகம் என்றால் என்ன? அப்போது என்ன நடக்கும்?’ என்று பாண்டவர்களில் நால்வர் கிருஷ்ணனிடம் கேட்க, அதனை அவர்களுக்குப் புரிய வைக்க செயல்முறை விளக்கம் ஒன்றை கிருஷ்ணர் செய்து காண்பித்தாராம். வில் ஒன்றினை எடுத்து நான்கு அம்புகளை நான்கு திசைகளிலும் எய்து, அவற்றைத் தன்னிடம் கொண்டுவந்து கொடுக்குமாறு கிருஷ்ணர் பணித்தார்.

அர்ஜுனன் ஒரு திசையில் சென்று அம்பினை எடுத்து வந்தான். இனிமையான குரலில் குயில் ஒன்று தன்னை மறந்து கூவிக் கொண்டிருந்தது. ஆனால், உயிருள்ள முயலை அது கொத்தித் தின்றுகொண்டிருந்தது. அந்த முயல் வலியால் துடித்துக் கொண்டிருந்தது. அர்ஜுனனுக்கு இது தாக்கி வாரிப்போட்டது. ஒரு பறவை இப்படியொரு கொடிய செயலைச் செய்கிறதே என்று துடித்தான்.

பீமன் இன்னொரு திசையில் சென்று அம்பை எடுத்துவந்தான். ஐந்து கிணறுகள் அங்கு இருந்தன. ஒரு கிணற்றைச் சுற்றி மற்ற நான்கும் அமைந்திருந்தன. நான்கு கிணறுகளிலிருந்தும் இன்சுவை நீர் நிரம்பி வழிந்துகொண்டே இருந்தது. ஆனால், நடுவில் உள்ள கிணற்றில் சொட்டுத் தண்ணீர் கூடக் கிடையாது. பீமனுக்கு இது புரியாத புதிராக இருந்தது.



நகுலன் தான் சென்ற திசையிலிருந்து அம்பு ஒன்றைக் கொண்டு வந்தான். வருகின்ற வழியில் பசு ஒன்று கன்றை ஈன்று அதனை நாவால் நக்கிக் கொண்டிருப்பதை கண்டான். கன்றுக்குட்டி சுத்தமான பிறகும் கூட, பசு நாவால் நக்குவதை நிறுத்தவில்லை. மக்கள் மிகவும் சிரமப்பட்டுப் பசுவையும் கன்றையும் பிரித்தனர். அதற்குள் கன்று மிக மோசமாகக் காயம்பட்டிருந்தது. சாதுவான பிராணி ஒன்றின் இந்தச் செயல் நகுலனுக்கு அதிர்ச்சியூட்டியது.

சகாதேவன் மலைக்குக் கீழ் விழ்ந்திருந்த அம்பை எடுத்தான். அப்போது பெரிய பாறை ஒன்று உருண்டு விழ்வதைக் கண்டான். அது உருண்டோடும்போது வழியிலுள்ள குன்றுகளையும் மரங்களையும் நசுக்கிக் கொண்டே வந்தது. ஒரு சின்னஞ்சிறிய தாவரம் அதனைத் தடுத்து நிறுத்தியது. சகாதேவனால் இதை நம்பவே முடியவில்லை.

வியப்பில் திரும்பிய நால்வரும் இந்த நிகழ்வுகளுக்குள்ள உள்ளர்த்தத்தைக் கிருஷ்ணரிடம் கேட்டனர். அப்போது கிருஷ்ணர் அவர்களுக்கான விளக்கத்தைக் கொடுத்தார். கலியுகத்தில் பிறந்தவர்கள் இனிக்க இனிக்கப் பேசுவார்கள். மிகுந்த அறிவு படைத்தவர்களாகவும் இருப்பார்கள். ஆனால், குயில் எப்படி முயலை இம்சித்ததோ, அதேபோல் அவர்கள் மற்றவர்களை இம்சிக்கத் தயங்கமாட்டார்கள்.

கலியுகத்தில் பணக்காரர்களுக்கு மத்தியில் ஏழைகள் வாழ்வார்கள். செல்வந்தர்களிடம் சொத்துக்கள் குவிந்திருக்கும், அபரிமிதமாகவும் இருக்கும். நான்கு கிணற்றிலும் தண்ணீர் பெருக்கெடுத்து வரும்போது, நடுவில் ஒரு கிணறு வற்றிக் கிடப்பது போல. ஆனால், ஏழைகளுக்குக் கொடுக்க அவர்கள் தாங்களாகவே முன்வரமாட்டார்கள்.

கலியுகத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் பாசத்தைப் பொழிவார்கள். அந்த அளவுகடந்த பாசம் குழந்தைகளை பாதிப்பதோடு அவர்களுடைய வாழ்க்கையையும் சிதைத்துவிடும். பசு தன் கன்றுக்குட்டியை எல்லைமீறி நக்கிக்கொடுத்ததற்கு ஒப்பாகும் இது.

கலியுகத்தில் மக்கள் ஒழுக்கம், பண்பாடு, நீதி, நேர்மை ஆகியவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் உருண்டோடும் பாறையைப் போல் இருப்பர். எவராலும் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது. கடவுளின் நாமாவளி ஒன்றுதான் அவர்களை அழிவுப்பாதையிலிருந்து சின்னஞ்சிறு தாவரத்தைப் போலக் காப்பாற்றும் என்று விளக்கம் கொடுத்தாராம் கிருஷ்ணர் என்கிறது மாகாபாரதம்.

இந்தக் கதையை வைத்து கலியுகம் வந்துவிட்டதா அல்லது இனித்தான் வரப்போகின்றதா என்பதை நீங்கள்தான் கண்டுபிடிக்கவேண்டும்.

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**
இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16

# புலி வருகுது புலி வருகுது..!




– கந்தரதன்

இன்று தமிழர் தாயகத்தில் குறிப்பாக யாழ்.குடாவில் உருவாகியுள்ள வன்முறைகளை திசை திருப்பி எங்கோ கொண்டு செல்லும் நடவடிக்கையில் சிறீலங்கா அரசு முனைப்புடன் இறங்கியுள்ளதை அவதானிக்கமுடிகின்றது. இளநீர் குடித்தவனை விட்டுவிட்டு, கோம்பை சாப்பிட்டவனை கைது செய்யும் நடவடிக்கையில் சிறீலங்காப் படைகள் இறங்கியுள்ளது என்றே கூறலாம்.

யாழில் இயங்கும் குழுக்களை எத்தனையோ தடவை ஆயுதங்களுடன் தாம் கைதுசெய்ததாக நிழற்படங்களுடன் சிறீலங்கா காவல்துறையினர் ஊடகங்களுக்கு செய்தி வெளியிட்டிருந்தமை நினைவிருக்கலாம். இவ்வாறு கைதுசெய்ய செய்ய புதிதாக எப்படி இந்தக் குழுக்கள் உருவாகி வருகின்றன என்பது அனைவரையும் சிந்திக்கவைத்துள்ளது.

இவ்வாறான குழுக்கள் தொடர்பாக கடந்த இதழிலும் இப்பகுதியில் எழுதியிருந்தோம். அதன்தொடர்ச்சியாக கொக்குவில் பகுதியில் சிறீலங்கா காவல்துறையினர் மீதான தாக்குதல் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தை அடுத்து சிறீலங்கா காவல்துறை மா அதிபர் யாழுக்கு பயணம் செய்து குறித்த சம்பவங்கள் அனைத்தையும் விடுதலைப் புலிகள் மீது சுமத்தியுள்ளார். இதுதொடர்பில் யாழில் இருந்து வெளிவரும் நாளிதழ் ஒன்று தனது ஆசிரிய தலையங்கத்தை அழகாகத் தீட்டியுள்ளது.

‘எந்தக் குற்றச் செயல் நடந்தாலும் முன்னாள் போராளிகளைச் சாட்டுவது...’ என்ற தலைப்பில் வெளியாகியுள்ள அந்த ஆசிரியர் தலையங்கத்தில்...

‘நாட்டில் எந்த மூலையில் என்ன குழப்பம் நடந்தாலும் அந்தச் சம்பவத்துடன் முன்னாள் போராளிகளைத் தொடுக்கின்ற கொடுமைத் தனம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.



இதனால் முன்னாள் போராளிகளின் நாளாந்த வாழ்வு என்பது ஏக்கம் நிறைந்ததாகவும் பயம் கொண்டதாகவும் அமைந்திருப்பதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்துடன் யுத்தம் நின்று போனாலும் முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வும் அவர்களைச் சிறையில் அடைத்து வதைப்பதுமான நிகழ்வுகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

புனர்வாழ்வு வழங்கப்பட்ட பின்னரும் அவர்களை கைதுசெய்வது, இராணுவ முகாமுக்கு அழைப்பது, புலனாய்வுப் பிரிவினர் விசாரிப்பது என்ற தொந்தரவுகளுக்கு அவர்கள் முகம் கொடுத்துக் கொண்டே இருக்கின்றனர்.

இப்போது யாழ்ப்பாணத்தில் இரண்டு முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அதிலொன்று நல்லூரில் நீதிபதி இளஞ்செழியன் மீது நடந்த துப்பாக்கிப் பிரயோகம் மற்றையது கொக்குவிலில் இரண்டு பொலிஸார் மீது நடந்த வாள்வெட்டுச் சம்பவம்.

இச்சம்பவங்கள் தொடர்பில் இந்த நாட்டின் அனைத்து தரப்புக்களும் கவனம் செலுத்தியுள்ளன. அதிலும் குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ‘மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது மகன் நாமல் ராஜபக்ச’ ஆகியோர் இச்சம்பவங்கள் தொடர்பில் தமது கருத்துக்களை அவசரமாகப் பதிவு செய்துள்ளனர்.

தவிர இச்சம்பவங்களை அடுத்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு குறித்து ஆராய்ந்துள்ளார். அந்த ஆய்வுகளின் பின்னர் அவர் விடுத்த அறிவிப்பில் நடந்து முடிந்த சம்பவங்களுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் தொடர்பு உண்டு என்பதாகக் கூறியுள்ளார்.

ஆக, மீண்டும் முன்னாள் போராளிகள் மீது விசாரணைகளும் விளக்கங்களும் நடப்பதற்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படுவது தெரிகின்றது. தாமும் தம் பாடும் என்றிருக்கின்ற முன்னாள் போராளிகளுக்கு மீண்டும் இடுக்கண் கொடுப்பதற்கான சதி வேலைகள் நடப்பது தெரிகின்றது.

உண்மையில் முன்னாள் போராளிகளும் அவர்களின் குடும்பங்களும் மிகுந்த கஸ்டத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றனர். அவர்களின் சீவனோபாயம் என்பது இடர்பாட்டில் உள்ளது. முன்னாள் போராளிகள் என்பதற்காக அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுவ தில் கூட புறக்கணிப்புக்கள் இருப்பதான தகவல்களை பொது அமைப்புக்கள் பதிவு செய்துள்ளன. இந்த வேலைவாய்ப்பு புறக்கணிப்பு என்பது தனியார் மற்றும் அரச துறைகள் இரண்டிலும் நடப்பதாகக் கூறப்படுகிறது.

இதுதவிர முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இசைந்து வாழ்வதில் கூட பலத்த கஸ்டங்களை சந்தித்துள்ளனர். இந்நிலைமை தமிழ் மக்கள் சமூகத்திலேயே இருக்கும் போது முன்னாள் போராளிகள் என்பவர்கள் உடல், உள, சமூக ரீதியில் சதா தண்டிக்கப்படுகின்ற னர் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கையில், யாழ்ப் பாணத்தில் நடந்த பொலிஸார் மீதான வாள் வெட்டுச் சம்பவத்துக்கும் முன்னாள் போராளிகளுக்கும் தொடர்புண்டு என பொலிஸ்மா அதிபர் கூறியிருப்பது முன்னாள் போராளிகளையும் அவர்களின் குடும்பங்களையும் அதிர்ச் சிக்குட்படுத்தியுள்ளது.

எனவே எதற்கெடுத்தாலும் முன்னாள் போராளிகளை குற்றம் சாட்டுவதை விடுத்து உண்மையை கண்டறிவது மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் குற்றச்செயல்களை தடுப்பதற்கும் உதவுவதாக இருக்கும்.’

என அந்த ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிறீலங்கா காவல்துறையினரும் படையினரும் இதனைச் சாதகமாக வைத்துக்கொண்டு தமது வழமையான பாணியை அதாவது சுற்றிவளைப்பு மருந்தை கையில் எடுத்து துன்னாலை உள்ளிட்ட பகுதிகளில் பெரும் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகக் கூறிக்கொண்டு அப்பாவிகளை கைதுசெய்து, அவர்களை சித்திரவதை செய்து புலிச்சாயம் பூசும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.**

இவ்வாறு சிறீலங்கா காவல்துறையினரும் படையினரும் இதனைச் சாதகமாக வைத்துக்கொண்டு தமது வழமையான பாணியை அதாவது சுற்றிவளைப்பு மருந்தை கையில் எடுத்து துன்னாலை உள்ளிட்ட பகுதிகளில் பெரும் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகக் கூறிக்கொண்டு அப்பாவிகளை கைதுசெய்து, அவர்களை சித்திரவதை செய்து புலிச்சாயம் பூசும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இந்த நடவடிக்கையில் சுமார் 30 இற்கும் அதிகமான அப்பாவி இளைஞர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளதுடன் அவர்களது பெறுமதிமிக்க உந்துருளிகள் மற்றும் உடமைகள் சூறையாடப்பட்டுமுள்ளன. இதுகுறித்து பொதுமக்களும் தமது முறைப்பாடுகளைப் பதிவுசெய்துள்ளனர். பட்டப் பகலில் எல்லோரும் பார்த்திருக்க எட்டுக்கும் மேற்பட்ட உந்துருளிகளில் ஒரே நேரம் வலம் வந்து அடாவடிகளில் இறங்கும் போது பார்த்திருந்தவர்கள் இப்போது, அப்பாவிகளை வீடுகளில் வைத்து கைதுசெய்வது எதற்காக?

விடை உங்களின் மனங்களில்தான். சிந்தியுங்கள் செயற்படுங்கள்!

(சூறையாடல்கள் தொடரும்)

## பிரெஞ்சு தேசச் செய்திகள்

# வட கொரியா ஏவுகணைத் தாக்குதலில் சில நிமிட இடைவெளியில் தப்பிய பிரெஞ்சு விமானம்!



வட கொரியா ஏவிய ஏவுகணை ஒன்று எயார் பிரான்ஸ் பயணிகள் விமானத்திற்கு 100 கிலோ மீற்றர் அருகே பறந்து சென்றது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஹ்வாசாங் 14 ஏவுகணையாகும். இதனைக் கடந்த யூலை 28ம் திகதி வட கொரியா ஏவிப் பரிசோதித்தது. இதன் பிறகுதான் ஒட்டுமொத்த அமெரிக்காவும் எங்களது விரலுக்குக் கீழே என்று சவால் விட்டிருந்தார் வடகொரிய சர்வாதிகாரி கிம் ஜாங் உன். தற்போது அந்த ஏவுகணை சோதனையின்போது நடந்த ஒரு சம்பவம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

விமானத்துக்கு அருகே வட கொரிய ஏவுகணை கடந்த பகுதியில்தான் சில நிமிட இடைவெளியில் டோக்கியா – பரிஸ் இடையிலான எயார் பிரான்ஸ் விமானம் வந்துள்ளது. கிட்டத்தட்ட 100 கிலோ மீற்றர் இடைவெளியில் விமானமும், ஏவுகணையும் மோதுவதிலிருந்து தப்பித்துள்ளன. அந்த எயார் பிரான்ஸ் விமானம் 330 பேருடன் வந்துள்ளது. எனினும் சில விநாடி இடைவெளியில் விமானம் தப்பித்துள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஏவுகணை விழுந்த கடல் பகுதியை எயார் பிரான்ஸ் விமானம் 10 நிமிடம் கழித்து கடந்து சென்றுள்ளது. ஒரு வேளை 10 நிமிடத்திற்கு முன்பு அது கடந்திருந்தால் நிச்சயம் ஏவுகணையால் தாக்கப்பட்டிருக்கும்.

இந்த சம்பவத்தையடுத்து தனது விமானங்கள் செல்லும் பகுதியை மாற்றியமைத்து அறிவித்துள்ளது எயார் பிரான்ஸ் நிறுவனம். முன்னெச்சரிக்கையாக இதை செய்துள்ளதாக அது அறிவித்துள்ளது.

வட கொரியா ஏவுகணை சோதனை நடத்தும் பகுதியில் அதிக அளவில் விமானங்கள் செல்வது வழக்கம். எனவே அங்கு சோதனை நடத்த வேண்டாம் என்று அமெரிக்கா பலமுறை எச்சரித்தும் கூட வட கொரியா அதைக் காதில் போட்டுக் கொள்வதில்லை.

இப்படித்தான் 2014ம் ஆண்டு யூலை மாதம் கிழக்கு உக்ரைனிலிருந்து ஏவப்பட்ட ரஷ்ய தயாரிப்பு பக் ஏவுகணை தாக்கி ஆம்ஸ்டர்டாமிலிருந்து கோலாலம்பூர் சென்று கொண்டிருந்த மலேசியன் எயார் லைன்ஸ் விமானம் தகர்க்கப்பட்டது. அதில் பயணம் செய்த 283 பேரும் பரிதாபமாக கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரான்சில் எய்ட்சிற்கு எதிரான புதிய மருந்து!

அமெரிக்காவின் Mylan மருந்து தயாரிப்பு நிறுவனம், காப்புரிமையற்ற (générique) பால்வினை (எய்ட்ஸ்) நோய்க்கு எதிரானதும், முன்னெச்சரிக்கையுமான ஒரு மருந்தினைப் பிரான்சில் சந்தைப் படுத்தி உள்ளது.

Emtricitabine/Tenofovir disoproxil Mylan எனும் இந்த மருந்து, எய்ட்சினால் (HIV-1) பாதிக்கப்பட்டவர்களிற்கும், இலகுவாகப் பாதிப்படையக் கூடிய நிலையில் பலவீனமாக உள்ளவர்களிற்கும் வழங்கப்டுகின்றது. இது மருத்துவரினால் வழங்கப்படும் மருந்துச் சீட்டிற்கு மட்டுமே வழங்கப்படும். ஆனால் இன்னும் சில அமைப்புக்கள் இந்த மருந்து




கள் வீரியமற்றவை என விமர்சித்த வண்ணம்தான் உள்ளன. இந்த மருந்து 2012ம் ஆண்டிலிருந்து, அமெரிக்காவிலும், 2015 இலிருந்து பிரான்சிலும் உபயோகப் படுத்தபடுகின்றது. 100 வீதம் மருத்துவக் காப்புறுதியனால் பொறுப்பேற்கப்பட்டு வழங்கப்பட்ட இந்த மருந்தின் ஒரு பெட்டியில் 30 குளிகைகள் உள்ளன. இது 406,87 ஈரோவிற்கு விற்கப்பட்மையால் மருத்துவ உதவி அமைப்பிற்கு (செக்குருட்டி சோசியல்) பெரும் செலவீனத்தை ஏற்படுத்தியது. ஆனால், தற்போது காப்புரிமையற்ற இந்த மருந்து விற்பனையாக இருப்பதால், முன்னைய செலவீனம் மூன்றில் ஒன்றாகக் குறைய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பரிஸ் உடன்பாட்டில் மீண்டும் இணைந்துகொள்ளுமாறு

### அமெரிக்காவுக்கு ஐ.நா. சபை அழைப்பு

பரிஸ் பருவநிலை மாற்ற உடன்பாட்டில் மீண்டும் இணைந்துகொள்ளுமாறு அமெரிக்காவுக்கு ஐ.நா. சபை அழைப்பு விடுத்துள்ளது. பரிஸ் பருவ நிலை மாற்ற உடன்பாடு, 2015ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 12ம் திகதி ஏற்படுத்தப்பட்டது. 2016ம் ஆண்டு, நவம்பர் மாதம் 4ம் திகதி நடைமுறைக்கு வந்தது. இந்த உடன்பாட்டில் 195 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. 158 நாடுகள் அதை உறுதி செய்துள்ளன. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா பதவிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்த பரிஸ் பருவநிலை மாற்ற உடன்பாடு, 'குளோபல் வார்மிங்' என்றழைக்கப்படுகிற உலக வெப்பமயமாதல் பிரச்சினைக்கு காரணமாகியுள்ள பசுமை குடில் வாயுக்களின் வெளியேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு வகை செய்கிறது. அதே நேரத்தில், பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகள், பருவ நிலை மாற்றத்துக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்ளவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறவும் பணக்கார நாடுகள் நிதி உதவிகள் செய்யவும் இந்த உடன்பாடு உதவுகிறது.

பரிஸ் பருவநிலை மாற்ற உடன்பாட்டுக்கு எதிராக அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் பதவி ஏற்ற டிரம்ப் போர்க்கொடி தூக்கினார். அத்துடன் இந்த உடன்பாட்டில் இருந்து அமெரிக்கா விலகுவதாக கடந்த யூன் மாதம் டிரம்ப் அதிரடியாக அறிவிப்பு வெளியிட்டார். இது உலகளாவிய கண்டனங்களுக்கு வழி வகுத்தது. ஆனால் டிரம்ப், "அமெரிக்காவுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய உடன்பாடுதான், இந்த பரிஸ் பருவநிலை மாற்ற உடன்பாடு. இது மற்ற நாடுகளுக்கு பலன் தரத்தக்கது. இது அமெரிக்க மக்களுக்கு, வரி செலுத்துவோருக்கு பலன் தராது. அமெரிக்கர்களுக்கு வேலை வாய்ப்பு இழப்பை ஏற்படுத்தும். ஊதியத்தைக் குறைக்கும். தொழில் நிறுவனங்களை மூட வைக்கும். நமது பொருளாதார உற்பத்தியை மிகவும் குறைத்து விடும்'' என கூறினார். ஆனால், இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கு இந்த பரிஸ் பருவநிலை மாற்ற உடன்பாடு பலன் அளிக்கக்கூடியதாக அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

இந்த நிலையில், பரிஸ் பருவநிலை மாற்ற உடன்பாட்டில் இருந்து விலகுவதற்கான முறையான அறிவிக்கையை, ஐ.நா. சபையிடம் அமெரிக்கா கடந்த வாரம் வழங்கியது. இதை அமெரிக்காவுக்கான ஐ.நா. தூதர் நிக்கி ஹாலி உறுதி செய்தார். இது தொடர்பாக ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டரெஸ்சின் செய்தி தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக் கூறியதாவது, பரிஸ் பருவநிலை மாற்ற உடன்பாட்டில் இருந்து அமெரிக்கா விலகிக்கொள்வதற்கான முறையான அறிவிக்கையை ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் பெற்றுக்கொண்டார்.

ஆனால், பரிஸ் பருவநிலை மாற்ற உடன்பாட்டில் மீண்டும் சேர்வதற்கான முயற்சியை அமெரிக்கா மேற்கொண்டால் அதை பொதுச்செயலாளர் வரவேற்பார். பருவநிலை மாற்றத்தை பொறுத்தமட்டில், அமெரிக்கா உடன்பாட்டில் தலைவராக தொடருவது முக்கியம். அமெரிக்க அரசு மற்றும் தொடர்புடைய நபர்கள், உலகில் உள்ள அனைத்து தரப்பினரும் நமது குழந்தைகள், எதிர்கால தலைமுறையினருக்கான நிலையான எதிர்காலத்தை கட்டமைக்க ஐ.நா. பொதுச்செயலாளர் முன்னோக்கி எதிர்நோக்குகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

## இறுதிப்போட்டியில் இரசிகர்களுக்கு அதிர்ச்சியளித்த உசைன் போல்ட்!

உலக தடகள போட்டியின் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் ஜமைக்கா வீரர் உசைன் போல்ட் மூன்றாவது இடம் பிடித்து அதிர்ச்சியளித்தார். இந்தப்போட்டியில் அமெரிக்க வீரரான ஜஸ்டின் கட்லினிடம் தங்கப்பதக்கத்தை பறிகொடுத்தார் உசைன் போல்ட்.

16வது உலக தடகளப் போட்டிகள் வெகு விமர்சையாக கடந்த 4ம் திகதி முதல் 13ம் திகதி வரை இலண்டனில் நடைபெற்றுவருகின்றது. 205 நாடுகள் பங்கேற்கும் இந்த தடகள திருவிழாவில் 24 பந்தயங்கள் இடம்பெறுகின்றன. இதில், எல்லோரது பார்வையும் உலகின் அதிவேக மனிதன் என்று அழைக்கப்படும் ஜமைக்காவின் உசேன் போல்ட் மீதே பதிந்திருந்தது.




உசைன் போல்ட் இந்தத் தொடருடன் ஓய்வு பெறப்போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார். அத்துடன், தோற்கடிக்கப்படாமல் விடைபெறுவேன் என்றும் கூளுரைத்திருந்தார். அதனால் இரசிகர்கள் கூட்டம் அலை மோதியது. 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டத்தில் உலக மற்றும் எட்டு முறை ஒலிம்பிக் சாம்பியனா உசேன் போல்ட், ஏராளமான சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். உலக தடகளத்தில் 11 தங்கப் பதக்கங்களை அள்ளியிருக்கும் இவர், 'தோற்கடிக்கப்படாமல் விடைபெறுவேன்' எனவும் உசைன் போல்ட் போட்டிக்கு முன்னதாக கூறியிருந்தார்.




இந்நிலையில், மிக முக்கிய போட்டியான 100 மீற்றர் ஓட்டப்பந்தயம் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றது. 2012ம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 9.95 நொடிகளில் எல்லையை கடந்து உசேன் போல்ட் சாதனையை நிகழ்த்திய அதே மைதானத்தில் 100 மீற்றர் ஓட்டம் பிரிவின் இறுதிப் போட்டியும் நடைபெற்றது. ஒகஸ்ட் 12ம் திகதி நடைபெற இருக்கும் 4ஒ100 தொடர் ஓட்டப்போட்டி தான் போல்ட்டின் கடைசி போட்டி என்றாலும், தனிநபர் பிரிவில் இதுதான் அவருக்கு கடைசிப்போட்டியாகும்.

ஆனால், இதில், அமெரிக்க வீரர் கட்லின் 100 மீற்றர் தூரத்தை 9.92




விநாடிகளிலும், அவரது சக வீரரான கிறிஸ்டியன் கோல்மேன் 9.94 விநாடிகளிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற உசைன் போல்ட் 9.95 விநாடிகளில் மூன்றாம் இடத்திற்கு வந்து, இரசிகர்களுக்கு அதிர்ச்சியளித்தார். இறுதிப்போட்டியில் வெண்கலப்பதக்கம் மட்டுமே பெற்றிருந்தாலும், இரசிகர்கள் உசைன் போல்ட்டுக்கு சிறப்பான மரியாதையுடன் பிரியாவிடை அளித்தனர்.

போல்ட்டின் போட்டியாளராக இருந்து வந்த 35 வயதான ஜஸ்டின் கட்லின் 2006 முதல் 2010 ஊக்க மருந்து குற்றச்சாட்டில் போட்டிகளில் பங்கேற்பதிலிருந்து தடை செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஊக்க மருந்து பயன்பாடு நிற்க வேண்டும், இல்லையென்றால் விளையாட்டு மரணமடையும் என்று உசைன் போல்ட் அண்மையில் வழங்கிய பேட்டியொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, சமீபத்தில் வெளியாகிய மெலாரென் அறிக்கையில் ரஷ்ய அரசு ஆதரிக்கும் ஊக்க மருந்து பயன்பாட்டு பற்றி குறிப்பிடுகையில், ?தனிப்பட்ட முறையில் எண்ணும் போது இதை விட அடிமட்டத்திற்கு போக முடியாது என்றே கருதுகிறேன். ரஷ்யாவின் முறைகேட்டை பார்க்கும்போது இதை விட மோசமாக முடியாது என்றே தோன்றுகிறது என்றார். சமீபகாலமாக நிறைய வீரர்கள் இப்படி பிடிபடுகிறார்கள். தவறு செய்தால் பிடிபடுவார்கள் என்ற எண்ணம் வந்தால் காலப்போக்கில் விளையாட்டு சிறப்பாகும்? என்றார். ஒருபுறம் கடுமையாக பணி புரிந்து சிலர் முன்னேறும் போது வேறு சிலர் அதை பின்னோக்கி நகர்த்துவது மகிழ்ச்சியான நிலையில்லை. அது கடுமையான ஒன்று என்று குறிப்பிட்டிருந்தார்.

# இந்திய தேசச் செய்திகள்

## மாணவ-மாணவிகளின் சுமையைத் தாங்கிய தெலுங்கானா அரசு

### உலகின் முன்னணி நடவடிக்கைக்கு வரவேற்பு

தெலுங்கனாவில் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளுக்கு புத்தக பைகளுக்கு கட்டுப்பாடு விதித்து அம்மாநில கல்வித்துறை சமீபத்தில் உத்தரவிட்டது. தெலுங்கானாவில் 1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை மாணவ மாணவிகள் கொண்டு வரும் புத்தக பைகளுக்கு மாநில அரசு கல்வித்துறை இந்த உத்தரவை போட்டுள்ளது.

அதன்படி 1 மற்றும் 2ம் வகுப்பு மாணவர்களுக்கு 1.5 கிலோவையும், 3,4 மற்றும்




5ம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு 2–3 கிலோவையும், 6 மற்றும் 7 ம் வகுப்பு மாணவர்களுக்கு 4 கிலோவையும், 8 மற்றும் 9 ம் வகுப்பு மாணவர்களுக்கு 4.5 கிலோவையும், 10ம் வகுப்பு மாணவர்களுக்கு 5 கிலோவையும் தாண்டக்கூடாது. அத்துடன், ஆறாம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரையிலான மாணவர்கள், ஒவ்வொரு பாடத்துக்கும் 200 பக்கங்களைக் கொண்ட தனித்தனி கொப்பிகளை தினமும் கொண்டு வர வேண்டாம். பதிலாக, மாணவர்கள் ஒரே ஒரு பொதுவான கொப்பியைக் கொண்டு வந்து அனைத்து பாடங்களையும் அதில் எழுதிக் கொள்ளலாம் என்றும், இதனால் புத்தகப் பையின் நிறை நிச்சயம் குறையும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசு பாடசாலை மற்றும் அரசு உதவி பெறும் பாடசாலைகளுக்கும் இது அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த உத்தரவு உடனடியாக நடைமுறைக்கும் வந்துள்ளது. இந்த நிலையில் கல்வித்துறையின் இத்தகைய நடவடிக்கைக்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவ மாணவிகள் தரப்பில் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

தெலுங்கானா அரசின் திட்டம் இத்தோடு முடிந்துவிடவில்லை... தெலுங்கானா அரசின் பாடசாலைகளுக்கான அறிக்கையில், முதல் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை மாணவர்களுக்கு வீட்டுப்பாடம் கொடுக்கக் கூடாது என்றும், ஆறாம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாடத்தில் வீட்டுப்பாடம் கொடுக்கும் வகையில் கால அட்டவணை நிர்ணயிக்கும்படியும் உத்தரவிட்டுள்ளது. மேலும், ஏராளமான பாடங்களை குழந்தைகளுக்குக் கற்றுத் தருகிறேன் என்று திணிப்பதையும் தெலுங்கானா அரசு கட்டுப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்திய வரலாற்றில் அதிகூடிய போதைப் பொருள் ஒரே தடவையில் கண்டுபிடிப்பு

குஜராத் கடற்பகுதியில் கப்பலில் இருந்து 545 மில்லியன் டொலர் பெறுமதியுடைய 1.5 தொன் நிறையுடைய ஹெரோய்ன் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்திய வரலாற்றில் ஒரே தடவையில் கண்டுபிடிக்கப்பட்ட அதிகூடிய போதைப்பொருள் இதுவெனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக 3 பேரை பிடித்து அந்த மாநில தீவிரவாத எதிர்ப்புப் படை (ஏடிஎஸ்) விசாரணை நடத்தி வருகின்றனர். இதுகுறித்து குஜராத் தீவிரவாத எதிர்ப்புப் படை மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாவது, குஜராத் கடற்பகுதியில் கடந்த சனிக்கிழமை (30ம் திகதி) இரவு வந்த வணிகக் கப்பலை இந்தியக் கடலோர காவல் படையினர் சோதனை நடத்தினர். இதில் 1,500 கிலோ நிறையில் 545 மில்லியன் டொலர் மதிப்புடைய ஹெராயின் பறிமுதல் செய்யப்பட்டது. அத்துடன், கப்பலில் பிடிபட்ட மாலுமிகள் 8 பேரிடம் இருந்து, 2 சட்டிலைட் தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டது. ஹென்றி என்ற பெயருடையை இந்த கப்பல், ஈரான் நாட்டில் இருந்து குஜராத்துக்கு வந்துள்ளது. அதற்கு முன்பு, பாகிஸ்தான் துறைமுகத்துக்கு அந்த கப்பல் சென்றபோது அதில் ஹெராயின் ஏற்றப்பட்டிருக்க வாய்ப்புள்ளதாக ஏடிஎஸ் கருதுகிறது. மாலுமி பேச பயன்படுத்திய சட்டிலைட் தொலைபேசியை ஆய்வு செய்ததை அடிப்படையாகக் கொண்டு, 3 பேரை பிடித்து ஏடிஎஸ் விசாரணை நடத்தி வருகிறது. அவர்கள் மூவரும், பல்வேறு பகுதிகளில் சுற்றி வளைக்கப்பட்டனர் என்று அந்த அதிகாரி கூறினார். இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சக செய்தி தொடர்புத்துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில், குஜராத் கடற்பகுதியில் பிடிபட்ட கப்பல், பனாமா நாட்டில் பதிவு செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, கப்பலில் கடத்தி வரப்பட்ட ஹெரோயினை இந்தியாவில் வாங்கத் திட்டமிட்டிருந்த நபர் யாரென்பது குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



## 59 ஆயிரம் விவசாயிகள் தற்கொலை

### டில்லியில் விவசாயிகள் பாடை கட்டி ஊர்வலம்

டில்லியில் தமிழக விவசாயிகள் பாடை கட்டி ஊர்வலமாக சென்று போராட்டம் நடத்தினார்கள். கடன் தள்ளுபடி, காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் தமிழக விவசாயிகள் டில்லியில் போராட்டம் நடத்தி வருகிறார்கள். டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் நடைபெற்று வரும் இந்த போராட்டம் 15 நாட்களுக்கு மேலாக நடந்துவருகின்றது.



ஒவ்வொரு நாளும் நூதன முறையில் போராட்டம் நடத்தி வரும் அவர்கள், பாடை கட்டியும் ஊர்வலம் நடத்தினார்கள். பாடை கட்டி அதில் ஒருவரை படுக்க வைத்து, ஊர்வலமாக தூக்கிச் சென்றார்கள். பின்னர் அய்யாக்கண்ணு நிருபர்களிடம் கூறுகையில், தமிழகத்தில் வறட்சியால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் விவசாயிகளின் கோரிக்கைகளை மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை. எனவே அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஒவ்வொரு நாளும் நூதனமான முறையில் போராட்டம் நடத்தி வருகிறோம் என்றார்.

இதுஇவ்வாறிருக்க, பருவநிலை மாற்றம், விவசாயம் பாதிப்பு உள்ளிட்ட காரணங்களால் இந்தியாவில் கடந்த 30 ஆண்டுகளில் 59,000 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டதாக அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில் தகவல் அளித்துள்ளனர். அறுவடை தவறுவதால் விவசாயிகள் வறுமை நிலைக்கு தள்ளப்படுவதே தற்கொலைக்கு முக்கிய காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

அந்த ஆய்வின் முடிவுகளின்படி, பருவநிலை மாற்றங்களால் வளரும் நாடுகளில் அதிக அளவிலான தற்கொலை சம்பவங்கள் நடைபெறுகின்றன. இதில் ஐந்தில் ஒரு சம்பவம் இந்தியாவில் நடைபெறுகிறது என்று கூறியுள்ளனர். அதிகரித்துவரும் வெப்பநிலைக் காரணமாக இந்த எண்ணிக்கை அதிகரித்து கொண்டுதான் இருக்கும் என ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தற்கொலைகளை தடுப்பதற்காக இந்திய அரசு சுமார் 1.3 பில்லியன் டொலர் அளவிற்கு நிதி ஒதுக்கியுள்ளது. ஆனால் அது எந்த அளவிற்கு பயனளிக்கும் என்பது பற்றி தெரியவில்லை என கூறப்பட்டுள்ளது. இவ்வாறு விவசாயிகள் தற்கொலை செய்துகொள்வது மிகவும் அதிர்ச்சியானதாக இருப்பதாக கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

## 21 இலட்சம் இந்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற முடிவு

அமெரிக்காவில் பணியாற்ற கடந்த 11 ஆண்டுகளில் 21 இலட்சம் இந்தியர்கள் எச்1பி விசாவுக்கு விண்ணப்பித்துள்ளனர் என்று அமெரிக்க குடியுரிமை சேவை மையம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் இருந்து பெரும்பாலானோர் பணி நிமித்தமாக அமெரிக்கா செல்கின்றனர். இதில் அதிகபட்ச மதிப்புடையது அந்நாட்டின் எச்1பி விசா. அதிக சம்பளம் வாங்குவோருக்கு இந்த விசா வழங்கப்படுகிறது. சமீபத்தில் அமெரிக்காவின் புதிய அதிபராக பொறுப்பேற்ற டிரம்ப், எச்1பி விசா வழங்குவதில் பல்வேறு கெடுபிடிகளை செய்தார். அதன்படி, அமெரிக்காவில் பணியாற்றும் வெளிநாட்டினருக்கு குறைந்தபட்சம் சம்பளம் 92,317 அமெரிக்க டொலராக இருக்க வேண்டும் என அதிரடி உத்தரவு பிறப்பித்தார். (2007ம் ஆண்டில் 68,159 டொலராக இருந்தது)


இதனால், பெரும்பாலான இந்தியர்கள் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டது. இதற்கு பல்வேறு தரப்பிலும் இருந்தும் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், அமெரிக்க குடியுரிமை சேவை மையம் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், எச்1பி விசாவுக்கு விண்ணப்பிப்பவர்களின் பெரும்பாலானோர் தகுதியானவர்களாக இல்லை.

எச்1பி விசாவுக்கு விண்ணப்பம் செய்பவர்களின் சராசரி சம்பளமாக 92,317 அமெரிக்க டொலராக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில், பெரும்பாலும் முதுகலை பட்டம் படித்தவர்களே அதிகம்.

2007ம் ஆண்டு முதல் கடந்த யூன் மாதம் வரை அமெரிக்க குடியுரிமை சேவை மையத்தில் 34 இலட்சம் எச்1பி விசா விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. இதில், 21 இலட்சம் பேர் இந்தியர்கள். இந்த கால கட்டத்தில், 26 இலட்சம் பேருக்கு அமெரிக்கா எச்1பி விசா வழங்கி உள்ளது.

## கென்யாவில் ஜல்லிக்கட்டு!



தென்னிந்திய திரைப்பட வரலாற்றில் முதல் முறையாக தமிழ்ப்படம் ஒன்று கென்யாவில் படம் பிடிக்கப்பட்டுள்ளது. அறிமுக இயக்குர் சந்தோஷ் கோபல் இயக்கும் படம் ஜல்லிக்கட்டு. கென்யாவில் இந்த படத்தின் படப்பிடிப்புகள் நடைபெற்றுள்ளன. ஒரு தென்னிந்திய படம் கென்யா மற்றும் குறிப்பாக மாசாய் மாரா பழங்குடி மக்களின் மத்தியில் படம்பிடிக்கப்பட்டுள்ளது. கென்யாவில் உள்ள மசாய் பழங்குடியினர்கள், பழங்கால வாழ்க்கை தற்போதும் பின்பற்றுபவர்களாக உள்ளனர். மேலும் அவர்களது தனித்துவமான வாழ்க்கைமுறையையும் தொடர்கின்றனர். எந்த தொழில்நுட்ப வசதியை பெறாத அவர்கள் இன்னும் அவர்கள் கால்நடை மற்றும்இயற்கையுடன்இணக்கமாக வாழ்ந்து வருகின்றனர். ஜல்லிக்கட்டுக்கும் மாசாய் பழங்குடி மக்கள் மற்றும் அவர்களின் கால்நடைகளுக்கும் நெருங்கிய உறவு உள்ளது என படக்குழுவினர் தெரிவித்துள்ளனர். 15 நாட்களுக்கும் மேலாக அவர்களுடன் தங்கி அவர்களின் பாரம்பரியத்தை பார்த்ததாகவும் தெரிவித்துள்ளனர். கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள கால்நடைகளின் மரபணுவும் காங்கேயம் காளைகளின் மரபணுவும் ஒத்து போவதாகவும் அவர்கள் கூறினர்.



# எத்தனை காலம்தான் இது தொடரும்?

- பழ. நெடுமாறன்



இலங்கையில் நடைபெற்ற போருக்கு முன்பும் பின்பு மாக காணாமல் போனவர்கள் குறித்த சட்டத்தில் குடியரசுத் தலைவர் சிறீசேனா கையெழுத்திட்டுள்ளார். இதன் மூலம் இலங்கையில் நிலையான அமைதி நிலவுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் 21.07.2017 அன்று தெரிவித்துள்ளார்.

ஆனால், நாடாளுமன்றத்தில் இச்சட்டம் நிறைவேற்றப் பட்டு ஓராண்டுக்கும் மேலாகிவிட்ட பிறகே இதற்கு சிறீ சேனா ஒப்புதல் அளித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக் கதாகும்.

உலக மனித உரிமை கண்காணிப்பு அமைப்பான சர்வ தேச மன்னிப்புச் சபை 1980 ஆம் ஆண்டிலிருந்து கடந்த 30 ஆண்டு காலத்தில் இலங்கையில் 60 ஆயிரத்திற்கும் மேற் பட்டோர் காணாமல் போயிருக்கிறார்கள் என குற்றம் சாட்டியுள்ளது. இதில் பெரும்பாலானோர் தமிழர்கள்.

இதுவரை காணாமல் போனவர்கள் குறித்து 1994 ஆம் ஆண்டிலிருந்து நான்கு விசாரணை ஆணையங்களை சிங்கள அரசு அமைத்தது. ஆனால் அத்தனையும் கண் துடைப்பு ஆணையங்களாக மாறிப்போயின. கடந்த சூன் மாதத்தில் யாழ்ப்பாணத்திற்கு சிறீசேனா வருகை தந்தபோது, இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போனவர்களின் உறவினர்கள் அவரிடம் முறையிட்டனர். அவர்களுக்கு சரியான பதில் கூறாமல் அவர் நழுவினார்.

22.07.2017 அன்று நூல் வெளியீட்டு விழா ஒன்றில் பேசிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2018 ஆம் ஆண்டு சனவரி மாதத்திற்குள் இலங்கையின் புதிய அரசியலமைப்புச் சட்டம் தயாராகிவிடும் என அறிவித்தார். இச்சட்டத்தின் மூலம் தமிழர் பிரச்சனைக்கு நல்ல தீர்வு கிடைக்கும் என்றும் கூறினார்.

2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் அதிபர் பொறுப்பேற்ற சிறீசேனா கடந்த இரண்டரை ஆண்டு காலமாகக் காணாமல் போனவர்கள் பிரச்சனை குறித்தோ புதிய அரசியல் அமைப் புச் சட்டம் குறித்தோ வாய்திறக்காமல் அமைதி காத்தவர், இப்போது திடீரென்று மேற்கண்டவாறு பேசுவதற்கு மன மாற்றம் காரணமென்று யாராவது கருதினால் அவர்கள் ஏமாந்து போவார்கள்.

ஐ.நா. மனித உரிமை மற்றும் சனநாயக உரிமைப் பாது காப்புச் சிறப்புத் தூதுவர் பென் எமர்சன், அமெரிக்காவின் அரசியல்துறைத் துணைச் செயலாளர் - நாயகமான ஜெப்ரி பெல்ட்மேன் ஆகியோரின் இலங்கை வருகையே இதற்குக் காரணமாகும்.

சூலை 15-ஆம் திகதி அன்று பென் எமர்சன் ஐந்து நாட்கள் சுற்றுப்பயணத் திட்டத்துடனும், சூலை 19-ஆம் திகதி ஜெப்ரி பெல்ட்மேன் 3 நாட்கள் சுற்றுப்பயணத் திட்டத்துடனும் இலங்கை வந்தனர்.

ஜெனீவாவில் கூடிய ஐ.நா. மனித உரிமை ஆணையம் நிறைவேற்றியத் தீர்மானங்களின் அடிப்படையில் எந்த அளவிற்கு இலங்கை அரசு செயற்பட்டுள்ளது என்பதை ஆராய்வதற்காக பென் எமர்சனும், புதிய அரசியல் அமைப் புச் சட்டம் உருவாக்கும் பணி எந்த அளவிற்கு நிறைவேறி யிருக்கிறது என்பதை நேரிடையாக அறிந்துகொள்வதற்காக ஜெப்ரி பெல்ட்மேனும் இலங்கை வந்தடைந்தனர்.

இவர்கள் வருகையின் விளைவாகத்தான் அதிபர் சிறீ சேனாவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் மேலே கண்ட அவசர அறிவிப்புகளை வெளியிட்டுள்ளனர்.

ஆனால், இந்த அறிவிப்புகளைக் கண்டு பென் எமர்சன், ஜெப்ரி பெல்ட்மேன் ஆகியோர் ஏமாறவில்லை. ஐந்து நாள் சுற்றுப்பயணத்திற்குப் பிறகு 'ஜெனீவா தீர்மானத்தின் நோக் கங்களை நிறைவேற்றும் வேலை அடியோடு தடைப்பட்டுக் கிடக்கிறது' என பென் எமர்சன் பகிரங்கமாகக் கண்டித்த தோடு பின்வருமாறும் தெரிவித்தார்:

"கொடிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கிவிட்டு அதற்கு மாற்றுச் சட்டம் கொண்டு வருவதாக வாக்குறுதி யளித்த இலங்கை அரசு அதன்படி நடந்து கொள்ளவில்லை. 1979-ஆம் ஆண்டு அவசரகால நடவடிக்கையாக பயங்கர வாதச் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டபோதிலும், தமிழர்களுக்கு எதிராக மட்டுமே இச்சட்டத்தை சிங்கள அரசு பயன்படுத்தியுள்ளது.

சிங்கள அதிகார வர்க்கத்தின் சித்திரவதைக் கொடுமை களை இச்சட்டத்தின்கீழ் தமிழர்கள் அனுபவிக்க நேர்ந்தது. காவல்துறையிலும், இராணுவத்திலும் சிங்களரே இருந்த காரணத்தினால் இன வெறியுடன் தமிழர்களை மிருகத்தன மான கொடுமைகளுக்கு ஆளாக்கினார்கள்."

இவ்வாறு பல்வேறு கொடுமைகளுக்கு ஆளானவர்களைச் சந்தித்து அவர்களிடம் நேரடியாகக் கண்டறிந்த உண்மை களை எமர்சன் பகிரங்கப்படுத்தினார். மேலும், இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு மருத்துவ ஆதாரங்களும் உண்டு என்று கூறினார்.

'இலங்கையில் சித்திரவதை என்பது வழக்கமான ஒன்றாகி விட்டது. சிங்கள அரசோ, அதிகாரிகளோ இதை ஒருபோதும் மறுக்கவில்லை. அந்நாட்டின் குற்றவியல் நீதி அமைப்பின் ஒரு அங்கமாகவே சித்திரவதைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

உலகத்திலேயே மிகமோசமான அளவில் சித்திரவதைகள் நடைபெறும் நாடாக இலங்கை விளங்குகிறது. புதிய ஆட்சி யிலும் இது தொடர்கிறது. இது மிகவும் வெட்கக்கேடானது' என அவர் கூறிய உண்மைகள் அதிர்ச்சிகரமானவையாகும்.

**இந்தியா உட்பட உலக நாடுகள் எத்தனை காலம்தான் ஏமாறப் போகின்றன? சீனாவின் பிடிக்குள் போய்விட்ட இலங்கையை மீட்பதே முக்கியம்.**

'ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் தீர்மானங்களை ஏற்றுக்கொண்ட இலங்கை அரசு, அவற்றை மதியாமல் நடக்குமானால் மனித உரிமை ஆணையம் மற்றும் ஐ.நா. பாதுகாப்புக் குழு ஆகியவை கண்டனம் செய்யும் நிலை உருவாகும்' என்றும் எமர்சன் எச்சரித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத்துறையின் துணைச் செயலாள ரான பெல்ட்மேன், பிரதமர் ரணில், வளர்ச்சித் துறை அமைச்சர் இரத்தின விநாயகா, வெளியுறவுத்துறை அமைச்சர் ரவி கருணாநாயகே, கிழக்கு மாநில ஆளுநர் ரோகித, கிழக்கு மாநில முதல்வர் நசீர் அகமது ஆகியோரைச் சந்தித்து புதிய அரசியல் அமைப்புச் சட்டம் குறித்து உரையாடினார்.

மேலும் மாகாண சபைக்கான தேர்தல்கள் குறித்தும், புதிய அரசியல் அமைப்புச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு இவ்வளவு தாமதம் ஏற்பட்டதற்குரிய காரணங்களையும் அவர் கேட்டறிந்தார். சிங்கள அரசு தரப்பில் கூறிய சமா தானங்கள் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை.

சர்வதேச சட்டங்கள், நடைமுறைகள், மரபுகள் ஆகிய எதனையும் மதியாத போக்கில் இலங்கை நடந்துகொள்வது புதிதல்ல. வழக்கமாக அது தொடரும் பாதைதான்.

2009-ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கையில் போர் முடிந்தவுடன், ஐ.நா. மனித உரிமை ஆணையம் இலங்கை யில் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என கூறியது.

**சர்வதேச சட்டங்கள், நடைமுறைகள், மரபுகள் ஆகிய எதனையும் மதியாத போக்கில் இலங்கை நடந்து கொள்வது புதிதல்ல. வழக்கமாக அது தொடரும் பாதைதான்.**

அதே ஆண்டு சூன் மாதம் ஐ.நா. பொதுச் செயலாளர் பான்-கீ-மூன் நியமித்த சட்ட வல்லுநர் குழுவும் இதே கோரிக்கையை பரிந்துரைத்தது. 2010-ஆம் ஆண்டு சனவரியில் டப்ளின் மக்கள் தீர்ப்பாயம் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணை நடத்தப் பட வேண்டும் எனக் கூறியது. ஜெர்மன் மக்கள் தீர்ப் பாயமும் இதனை வலியுறுத்தியது.

ஆனால், இலங்கை அரசு உள்நாட்டு விசாரணையைத் தொடங்காத காரணத்தினால் ஐ.நா. விசாரணைக் குழுவை பான்-கீ-மூன் அமைத்தார். இக்குழு இலங்கைக்குள் நுழை வதற்கு அனுமதிதர இலங்கை அதிபராக இருந்த ராசபக்ச மறுத்தார். 'நல்லிணக்க ஆணைக்குழு' என்ற பெயரால் தனக்குத்தானே ஒரு குழுவை அவர் நியமித்துக்கொண்டார்.

2012-ஆம் ஆண்டு உள்நாட்டு விசாரணை, நல்லிணக்க ஆணையக்குழு பரிந்துரை ஆகியவற்றைச் செயற்படுத்துவது குறித்த ஒரு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமை ஆணையத் தில் அமெரிக்கா கொண்டுவந்தது. இதையும் ஏற்றுக்கொள் வதற்கு ராசபக்ச மறுத்தார்.

2013-ஆம் ஆண்டில் மீண்டும் சர்வதேச விசாரணையை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் தலைவராக இருந்த நவநீதம் பிள்ளை வற்புறுத்தினார்.

2014-ஆம் ஆண்டில் அமெரிக்கா, பிரிட்டன் உள்பட ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒன்றுகூடி இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத் தவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் ஒரு தீர்மானத் தைக் கொண்டுவந்தன.

23 நாடுகள் அதற்கு ஆதரவாக வாக்களித்தன. 12 நாடுகள் எதிராக வாக்களித்தன. இந்தியா இவ்வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் வகையில் அத்தீர்மானம் அமைந்திருந்ததால் அதை ஆதரிக்க முடியவில்லை என இந்திய அரசு அறிவித்தது.

அதற்குப் பின்னர் மனித உரிமை ஆணையம் இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானங்களை இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டது. போர்க் குற்றங்களை விசாரணை செய்து தண்டிக்கும் பொறுப்பை இலங்கை அரசே மேற்கொள்ளட்டும் என இந்திய அரசு திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றச்செய்தது. அதாவது சர்வதேச நீதி விசாரணையிலிருந்து இலங்கை அரசை இந்தியா காப்பாற்றியது.

ஆனால் 2012-ஆம் ஆண்டிலிருந்து ஐ.நா. மனித உரிமை ஆணையம் நிறைவேற்றிய தீர்மானங்களில் எதையும் இலங்கை அரசு மதிக்கவில்லை, செயற்படுத்தவில்லை. அவ்வப்போது ஐ.நா.வை ஏமாற்றும் நடவடிக்கைகளில் இலங்கை ஈடுபடுகிறது.

ராசபட்சவாக இருந்தாலும், சிறீசேனாவாக இருந்தாலும் மிகக்கொடுமையான போர்க் குற்றங்களைப் புரிந்த தங்கள் நாட்டு இராணுவத்தையும், காவல்துறையையும் விட்டுக் கொடுக்காமல் காப்பாற்றுகின்றனர். தொடர்ந்து உலகை ஏமாற்றும் நடவடிக்கைகளில் சிங்கள இனவெறி அரசுகள் ஈடுபடுகின்றன. உலகமும் ஏமாறுகிறது. இந்திய அரசும் ஏமாறுகிறது.

இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமை மற்றும் சனநாயக உரிமைப் பாதுகாப்புச் சிறப்புத் தூதுவர் பென் எமர்சன், அமெரிக்காவின் அரசியல் துறைச் செயலாளர் ஜெப்ரி பெல்ட்மேன் ஆகியோரை ஏமாற்றும் வகையிலும் இந்தியா உள்பட உலக நாடுகளைத் திசை திருப்புவதற் காகவும், அதிபர் சிறிசேனாவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் அவசர அறிவிப்புகளை வெளியிட்டுள்ளனர்.

இதன்படி இவர்கள் ஒருபோதும் செயற்படப்போவ தில்லை. ஏமாற்றும் நாடகம் தொடர்கிறது. எத்தனை காலம் தான் இது தொடரப்போகிறது.

இந்தியா உட்பட உலக நாடுகள் எத்தனை காலம்தான் ஏமாறப்போகின்றன? சீனாவின் பிடிக்குள் போய்விட்ட இலங்கையை மீட்பதே முக்கியம்.

சிங்கள இனவெறி கொடுங்கரங்களில் சிக்கித் தவிக்கும் ஈழத்தமிழர்களையும், தமிழக மீனவர்களையும் காப்பாற்று வதைவிட இலங்கையின் நட்பே பெரிது என இந்தியா கருதுமானால் கொக்கு தலையில் வெண்ணையை வைத்துப் பிடித்துவிடலாம் என கருதியவனின் கதிதான் இந்தியாவுக்கு நேரும்.

*நன்றி - தினமணி (02.08.2017)*

# ‘தலைவன் இருக்கிறான்’

## - கமல் அறிவிப்பு




‘விஸ்வரூபம் 2, சபாஷ் நாயுடு’ படங்களுக்குப் பிறகு ‘தலைவன் இருக்கிறான்’ என்கிற படத்தில் நடிக்க உள்ளதாக கமலஹாசன் கூறியுள்ளார். இதுகுறித்து வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கமல் கூறியதாவது: விஸ்வரூபம் 2 முதலில் வரவேண்டும். அடுத்தது சபாஷ் நாயுடு. என் அடுத்தப் படத்தின் தலைப்பைச் சொன்னால் இப்போது உள்ள சூழலை நான் பயன்படுத்திக்கொள்கிறேன் என்று சொல்வார்கள். ஆனால் அந்தத் தலைப்பை நாலைந்து வருடங்களுக்கு முன்பே பதிவு செய்துவிட்டேன் என்று கூறியுள்ளார். ஆமாம். என் அடுத்தப் படம் - ‘தலைவன் இருக்கிறான்.’

கமல் நடித்து இயக்கியுள்ள விஸ்வரூபம் 2 தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளில் இந்த வருடம் வெளிவரவுள்ளது. தசாவதாரம் படத்தில் இடம் பெற்ற கதாபாத்திரங்களுள் பரவலான வரவேற்பைப் பெற்ற கதாபாத்திரம் பல்ராம் நாயுடு. இந்த கதாபாத்திரத்தை அடிப்படையாக வைத்து ‘சபாஷ் நாயுடு’ என்ற படத்தை உருவாக்க திட்டமிட்டார் கமல்ஹாசன். கமல்ஹாசனோடு அவரது மகள் ஸ்ருதிஹாசன் முதன் முறையாக இப்படத்தில் தந்தையுடன் இணைந்து நடிக்கிறார்.

# மன்சூர் அலிகான் சொன்னதுபோல் பைத்தியக்கார வீடாகியது பிக் பாஸ் வீடு

விஜய் தொலைக்காட்சி பிக் பாஸ் வீடு எனும் நிகழ்ச்சியை ஆரம்பித்தபோது அதனை மிகவும் கடுமையாகச் சாடிய நடிகர் மன்சூர் அலிகான், 30 கமெராக்களைக் கொண்டுபோய் வீட்டுக்குள் பூட்டிக் காட்டுகின்றீர்களே,







எங்கள் இனம் கொத்துக்கொத்தாக கொல்லப்பட்டபோது அங்கு ஒரு கமெராவைக் கொண்டுபோய் பூட்டிக் காட்டியிருக்கலாமே என்று குற்றம்சாட்டினார். அத்துடன், பிக் பாஸ் வீடு ஒரு பைத்தியக்கார வீடு என்றும் எள்ளி நகையாடியிருந்தார்.

இந்நிலையில், பிக் பாஸ் வீடு பைத்தியக்கார மருத்துவமனையாக மாறிவிட்டது. வையாபுரிக்கு மருத்துவரும் வேடமும், பிந்து மாதவிக்கு தாதி வேடமும் கொடுக்கப்பட்டது. சக்தி மற்றும் கணேஷ் ஆகியோர் மருத்துவருக்கு துணையாக இருக்க, மற்றவர்கள் பைத்தியக்காரர்களாக நடிக்கவேண்டும். ஓவியா காதல் தோல்வியால் பைத்தியமாகிவிட்டார் எனவும், ஜூலி ஒரு போராட்டத்தில் கலந்துகொண்ட போது காவல்துறை மண்டையில் அடிபட்டு பைத்தியமாகிவிட்டார் எனவும் நடிக்க கொடுக்கப்பட்டது. இதுபோல மற்றவர்களுக்கும் அவர்களின் குணநலன்களைப்போல் பைத்திய வேடங்கள் கொடுக்கப்பட்டன. இதனால், பிக் பாஸ் வீடே ஒரு உண்மையான பைத்தியக்கார வீடு போலவே இருந்தது.

# பேசும் படம்




# வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## உலக சந்தையில் தங்கத்தின் விலை அதிகரிப்பு

உலக சந்தையில் தங்கத்தின் விலை 2 வீதத்தால் திடீரென அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஒரு அவுன்ஸ் தங்கம் 1253 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. கடந்த மாதத்தில் 3 வாரங்களாக தங்கத்தின் விலையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாமல் இருந்த நிலையில் தற்போது தங்கத்தின் விலை கணிசமாக அதிகரித்துள்ளது. இதன்படி ஒரு அவுன்ஸ் தங்கம் 1218 டொலரில் இருந்து 1253 டொலராக அதிகரித்துள்ளது. 35 அமெரிக்க டொலர் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. இது 2 வீத அதிகரிப்பு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக சந்தையில் தங்கத்தை அவுன்ஸ் கணக்கில் விலை சொல்வார்கள். ஒரு அவுன்ஸ் என்பது 32 கிராம். இது 24 கரட் தங்கம் ஆகும்.



## கூகுள் தாய் நிறுவன இயக்குநரானார் சுந்தர் பிச்சை

சென்னையில் பிறந்து அமெரிக்காவில் வாழ்பவரும் கூகுள் நிறுவனத்தில் கடந்த 2004ம் ஆண்டு முதல் பணிபுரிந்துவருபவரும் – கடந்த






2015ம் ஆண்டு முதல் கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாகவும் பதவி உயர்வுபெற்ற சுந்தர் பிச்சை (45 வயது), தற்போது ‘அல்ஃபபெட் Alphabet.’ நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார். அல்ஃபபெட் நிறுவனம் கூகுளின் தாய் நிறுவனமாகும்.

இதுகுறித்து அல்ஃபபெட் நிறுவனத்தின் அதிகாரி லாரி பேஜ் வெளியிட்ட அறிவிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: கூகுள் இயக்குநராக மிகச் சிறப்பான பணியாற்றி வருபவர் சுந்தர் பிச்சை. அவரது முயற்சியால் சிறந்த வளர்ச்சி, கூட்டமைப்புகள், வழங்கும் சேவைகளில் புத்தாக்கம் ஆகியவற்றை கூகுள் கண்டது. அல்ஃபபெட் நிறுவனத்தில் அவருடன் இணைந்து பணியாற்றுவதை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன் என்று அந்த அறிவிக்கையில் லாரி பேஜ் தெரிவித்துள்ளார்.

## உலக பணக்காரர் பட்டியலில் சிலவிநாடிகள் பில் கேட்சை பின்தள்ளிய ஜெ.ஃப் பேசோஸ்

உலக பணக்காரர்கள் பட்டியலில் 23 ஆண்டுகளாக தொடர்ந்து இருக்கும் மைக்ரோசாஃப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் முதன்முறையாக முதல் இடத்தை இழந்தார். உலகப் பணக்காரர்கள் பட்டியலில் மைக்ரோசொஃப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் பல ஆண்டுகளாக முதல் இடத்தில் இருந்து வந்தார். நேற்று, அமேசான் இணைய நிறுவனத்தின் தலைவர் ஜெஃப் பேசோஸ், பில் கேட்ஸை பின்னுக்குத் தள்ளி முதல் இடத்தைப் பிடித்தார். ஆனால், சிறிது நேரத்திற்கு மட்டுமே ஜெஃப் பேசோஸ் உலகின் முதல்தர பணக்காரராக இருந்தார்.

மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் பங்குகள் அமேசான் இணைய நிறுவனத்தின் பங்குகளை விட குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் குறைவாக இருந்தது. அந்தச் சிறிது நேரத்தில் அமேசான் நிறுவன பங்குகளின் மதிப்பு 90.60 பில்லியன் அமெரிக்க டொலராகவும், மைக்ரோசொஃப்ட் நிறுவன பங்குகளின் மதிப்பு 90 பில்லியன் டொலராகவும் இருந்துள்ளது. சற்று நேரத்தில் அமேசான் பங்குகள் சரிவைச் சந்தித்தும் மைக்ரோசொஃப்ட் நிறுவனம் அமேசானை முந்தியது. இதனால், பில்கேட்ஸ் மீண்டும் உலகின் முதல் பணக்காரரானார். அமேசான் நிறுவனத்தில் 81 மில்லியன் பங்குகளில் கிட்டத்தட்ட 17 சதவீத பங்குகளை ஜெப் பேசாஸ் கொண்டுள்ளார்.



ஒரு கதை

## துன்பச் சிறையில் இருந்து விடுபடும் வழி



ஒரு பெரியவரிடம் அய்யா! நான் துன்பச் சிறையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறேன்? என்றான் ஒருவன். "என்ன காரணம்?" என்று கேட்டார் ஒரு பெரியவர். "மற்றவர்கள் எனக்குத் துன்பம் கொடுக்கிறார்கள்..." என்றான்

"உனக்குத் துன்பம் கொடுப்பது உன்னுடைய மனம்தான்..." என்றார் பெரிவர்

"அப்படியா சொல்கிறீர்கள்...?" "ஆமாம்...!"

"அப்படியானால் துன்பத்திலிருந்து விடுபட என்ன வழி...?"

"மனதைப் புரிந்து கொள்... அது போதும்..."

"எப்படிப் புரிந்து கொள்வது?" என்றான் அவன்.

"இந்தக் கதையைக் கேள்..." என்று அவர் சொன்னார் -

"ஆசையாக ஒரு பூனையை வளர்த்தார் ஒருவர். அந்தப் பூனை ஒரு நாள் எலியைப் பிடித்து கவ்விக் கொண்டு வந்தது, அவருக்கு அது மகிழ்ச்சியாக இருந்தது. மறுநாள் அந்தப் பூனை, அவர் ஆசையாக வளர்த்த ஒரு கிளியைக் கவ்விக் கொண்டு வந்தது, அவருக்கு அது அதிர்ச்சியாக இருந்தது, இன்னொரு நாள் அந்தப் பூனை எங்கேயோ சென்று காட்டிலிருந்து ஒரு குருவியைப் பிடித்துக் கவ்விக் கொண்டு வந்தது. இப்போது அவர் மகிழவும் இல்லை, வருந்தவும் இல்லை. எதையாவது பிடிப்பது பூனையின் சுபாவம் என்பதைப் புரிந்துகொள்ள அவருக்குக் கொஞ்ச காலம் ஆயிற்று. தனக்குப் பிடிக்காத எலியைப் பிடிக்கிறபோது இன்பம். தனக்குப் பிடித்தமான கிளியைப் பிடிக்கிறபோது துன்பம், தனக்குச் சம்பந்தமே இல்லாத குருவியைப் பிடிக்கிறபோது இன்பமுமில்லை... துன்பமுமில்லை..." - என்று அவர் கதையை முடித்தார். இவன் சிந்திக்கத் தொடங்கினான்.

துன்பச் சிறையின் கதவுகள் திறக்கப்படுகிற ஓசை அவன் செவிகளில் விழுந்தது. "மனதைப் புரிந்து கொள்கிறவர்களே மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்..."

ஒரு விதை

## லெப்.கேணல் வெண்ணிலவன்

மன்னார் மாவட்டம் பெரியமறிப்பு மாதா கிராமத்தின் மடு வீதியைச் சேர்ந்த செபமாலை ஜோர்ஜ் சந்திரசேகரன் (லெப்.கேணல் வெண்ணிலவன் அல்லது கவாஸ்கர்) 04.08.1996 அன்று கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதி மீது நடத்திய எறிகணைத் தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.




செபமாலை ஜோர்ஜ் சந்திரசேகரன்
08.12.1971 - 04.08.1996

ஒரு குறள்

அறத்துப்பால் – நடுவு நிலைமை

கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.



நடுவுநிலைமை தவறாமல் அறவழியில் வாழ்கிற ஒருவருக்கு அதன் காரணமாகச் செல்வம் குவியாமல் வறுமை நிலை ஏற்படுமேயானால் அவரை உலகம் போற்றுமே தவிரத் தாழ்வாகக் கருதாது.

ஒரு மருத்துவம்

## இரத்த தானம், செய்வதால் இலாபமா..?

இரத்த தானம் செய்கிறவரது உடல்நலத்துக்கும் நல்லது என்று சொல்கிறார்களே... அப்படி என்ன நன்மை இருக்கிறது இரத்த தானம் செய்வதில்?

18 வயதில் இருந்து 65 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருவருமே இரத்ததானம் செய்யலாம். மஞ்சள் காமாலை, புற்றுநோய் போன்ற மற்றவர்களைப் பாதிக்கும் நோய்களை உடையவர் கண்டிப்பாக இரத்த தானம் செய்யக்கூடாது. அது மட்டுமில்லாமல் இரத்த அழுத்தம், நுரையீரல் மற்றும் இதய பாதிப்பு உடையவர்கள், 45 கிலோவுக்குக் குறைவாக நிறை கொண்டவர்கள், ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருப்பவர்கள் ஆகியோரும் இரத்த தானம் செய்யக்கூடாது.




தானம் செய்கிறவருக்கு தன்னுடைய உடல்நிலை பற்றி நன்றாகத் தெரியும். எனவே, பிறருக்குபாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய குறைபாடுகள் தங்களுக்கு இருப்பது தெரிந்தால் இரத்த தானம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. ஒருவருடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று நல்ல மனதுடன் இரத்த தானம் கொடுப்பதால் உளவியல் ரீதியாகவே அவர் மனமகிழ்வையும், ஆத்ம திருப்தியையும் பெற்றுவிடுவார். இதனால்தான் ஒருவருக்கு இரத்த இழப்பு ஏற்பட்டாலும் தானம் கொடுக்கும்போது தலைசுற்றலோ, மயக்கமோ வருவதில்லை.

இதேபோல ஒருவருடைய உடலில் 120 நாட்களுக்கு ஒருமுறை புதிய இரத்தம் உருவாகும். ஆனால், இரத்த தானம் செய்யும்போது 3 அல்லது 5 நாட்களுக்குள் புதிய இரத்தம் உருவாகிவிடும். இதன்மூலம் ஆற்றல் கொண்ட புதிய உயிரணுக்களும் தோன்றும். உடல் ஆரோக்கியத்துக்கு இது மிகவும் நல்லது.

ஒரு தகவல்

## பதினாறு செல்வங்கள்

பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க! என்று என்று நம் முன்னோர்கள் வாழ்த்தினரே. அந்தப் பதினாறு செல்வங்களும் எவை என்று தெரியுமா?

01. கலையாத கல்வி (வெற்றிக்கு வழிகாட்டக் கூடிய கல்வி)
02. குறையாத வயது (நீண்ட ஆயுள்)
03. கபடு வராத நட்பு (நம்பிக்கையான நல்ல நண்பர்கள்)
04. குன்றாத வளமை (வளமான வாழ்க்கைக்குத் தேவையான பொருள்)
05. குன்றாத இளமை (உழைப்புக்குத் தளராத உடல் வலிமை)
06. கழுபிணி இல்லா உடல் (நோயற்ற வாழ்க்கை)
07. சலியாத மனம் (கலங்காத மனத்திண்மை)
08. அன்பகலாத கணவன் - மனைவி (மாறாத அன்பைச் செலுத்தும் கணவன் - மனைவி)
09. தவறாத சந்தானம் (அறிவு, ஆற்றல், ஒழுக்கம், ஆயுள் இவற்றில் தவறி விடாத குழந்தைகள்)
10. தாழாத கீர்த்தி (மென்மேலும் வளரக்கூடிய பொருளும் புகழும்)
11. மாறாத வார்த்தை (வாய்மை)
12. தடைகள் வராத கொடை (இல்லையென்று சொல்லாத உதவி)
13. தொலையாத நிதியம் (சிக்கனம், சேமிப்பு பழக்கம்)
14. கோணாத கோல் (நேர்மையும் திறமையும் கொண்ட குடும்ப நிர்வாகம்)
15. உதவி பெரிய தொண்டரோடு கூட்டு (பெருமக்கள் தொடர்பு)
16. துய்ய நின்பாதத்தில் அன்பு (இறை நம்பிக்கை)

ஒரு பொன்மொழி

**எது நன்மை என்பது**
**அதை இழந்தால்தான் தெரியும்.**

- ஸ்பெயின்

ஒரு வரலாறு

## தனது மரணச் சடங்கை பார்த்த ஆபிரகாம் லிங்கன்!

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் எத்தனையோ நல்ல குணங்கள் பற்றி சொல்வதுண்டு. ஆனால், தனது மரணச் சடங்கை அவர் முன்கூட்டியே பார்த்துள்ளார் என்பது தெரியுமா?



இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு வாட்கில் லமன் என்ற நண்பருடன் பேசிக்கொண்டு இருக்கையில் தனது கனவை பற்றி கூறினார்.

அவர் கூறியது "பத்து நாட்களுக்கு முன்பு மிகவும் தாமதமாக ஓய்வு எடுக்க சென்றேன். மிகுந்த களைப்பின் காரணமாய் உடனே உறங்கி விட்டேன். சிறுது நேரத்தில் கனவில் காண தொடங்கினேன். அங்கே மரண அமைதி இருந்தது. பிறகு நான் விசும்பல்களை கேட்டேன். பலர் அழுது கொண்டிருந்தனர். பின்பு மெத்தையை விட்டு கீழ்த்தளத்தில் வந்து அலைந்து கொண்டிருந்தேன் என நினைக்கிறேன்.

அதே உருக்கமான அழுகையால் அங்கிருந்த அமைதி உடைந்தது. ஆனால் அழுபவர்கள் கண்ணுக்கு புலப்படாமல் இருந்தனர். நான் ஒவ்வொரு அறையாக சென்றேன்.

எங்கும் யாருமே தென்படவில்லை. ஆனால் அதே துன்பத்தின் ஓசை நான் கடந்தபோது என்னை சந்தித்தது.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு பழமொழி

**தூக்கி எறிகிற குதிரையைவிடச் சுமக்கிற கழுதை மேல்.**

ஒரு பழமொழியும் விளக்கமும்

**ஆலும் வேலும் பல்லுக்குறுதி,**
**நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.**



ஆலும் என்பது ஆலமரத்தின் விழுதினையும், வேலமரம் என்பது வேப்ப மரத்தின் குச்சியையும், நாலும் என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும். இது பொதுமக்கள் அனைவராலும் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் பழமொழியாகும். ஆலமரத்தின் விழுதினையும், கருவேல மரத்தின் மரக்குச்சிகளையும் நன்கு மென்று பல்விளக்க, பல் நன்கு பளபளப்புடனும், பல் ஈறுகள் நல்ல பலத்துடனும் காணப்படும் என்னும் செய்தி இப்பழமொழியில் விளக்கம் பெறுகிறது.

# யூலை மாதம் வீரகாவியமான மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு!




கட்டுநாயக்கா விண்ணுந்து நிலையத் தாக்குதலில் வீரகாவியமான கரும்புலி மறவர்கள் மற்றும் யூலை மாதம் வீரகாவியமான அனைத்து மாவீரர்களுக்குமான நினைவு வணக்க நிகழ்வு பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மாவீரர் பணிமனையின் ஏற்பாட்டில் கடந்த 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை லாக்குர்நோவ் பகுதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஈகைச்சுடரினை 01.05.2008 அன்று முகமாலைச் சமரில் வீரச்சாவடைந்த 2ம் லெப். இசைப்பிரியனின் சகோதரன் ஏற்றிவைத்து மலர்வணக்கம் செலுத்தினார். அகவணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் சுடர்ஏற்றி மலர்வணக்கம் செலுத்தினர்.



# மூதூர் படுகொலையின் 11வது ஆண்டு நினைவேந்தல்!




சிறீலங்கா படைகளால் 04.08.2006 அன்று மூதூரில் படுகொலை செய்யப்பட்ட பட்டினிக்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த 17 பணியாளர்களின் 11வது ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு கடந்த 04.08.2017 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு, பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, பிரான்சு கிளிச்சி பிராங்கோ தமிழ்சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிச்சிப் பகுதியில் குறித்த பணியாளர்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரை கிளிச்சி பிராங்கோ தமிழ்ச் சங்கப் பொறுப்பாளர் திரு.குமணன் அவர்கள் ஏற்றிவைக்க ஈகைச்சுடரை பட்டினிக்கு எதிரான அமைப்பின் மூதூரில் குறித்த 17 பணியாளர்களுடன் பணியாற்றிய முன்னாள் பணியாளர் திரு.ஜெயகாந் அவர்கள் ஏற்றிவைத்தார்.



மலர்வணக்கத்தை Mairie de Clichy உதவி நகர பிதா Mme Viviane DIECO அவர்கள் செலுத்தினார். தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் மலர்வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து குறித்த 17 பணியாளர்கள் தொடர்பான நினைவுரைகள் இடம்பெற்றன. நினைவுரைகளை செல்வன் மீராஜ், திரு.ஜெயகாந் (முன்னாள் பணியாளர் ACF MOOTHUR) மற்றும் ACF Fraace இல் பணியாற்றும் உத்தியோகபூர்வ வழக்குரைஞர் ஒருவர், Mme Viviane DIECO (Mairie de Clichy), கிளிச்சி பிராங்கோ தமிழ்ச் சங்க செயலாளர் திரு. சச்சி கந்தையா, பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பாலசுந்தரம் ஆகியோர் ஆற்றியிருந்தனர். இவர்களுடன் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு தமது நினைவு வணக்கத்தைச் செலுத்தியிருந்தனர்.



# பிரான்சில் அரியாலை ஐக்கிய கழகம் நடாத்திய துடுப்பெடுத்தாட்டப்போட்டி!

பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு தமிழர் விளையாட்டுத் துறையின் ஆதரவில் அரியாலை ஐக்கியகழகம் அமரர்கள் சுப்பிரமணியம் கௌசிகன், சுப்பிரமணியம் இதயராஜ், பஞ்சரத்தினம் ஜனார்த்தனன் ஆகியோரின் நினைவாக 5வது தடவையாக நடாத்திய துடுப்பெடுத்தாட்டப்போட்டி கடந்த 30.07.2017 ஞாயிற்றுக்கிழமை Chateau de vçaceanes பகுதியில் இடம்பெற்றது.

பிரான்சின் 16 கழகங்கள் பங்குபற்றிய இப்போட்டியில், முதலிடத்தை ஸ்கந்தா விளையாட்டுக்கழகமும், இரண்டாம் இடத்தை றொக் பைற்றர்ஸ் விளையாட்டுக்கழகம், மூன்றாம் இடத்தை பாடும் மீன் விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன.











# ரஷ்யா, ஈரான், வடகொரியா மீது அமெரிக்காவின் பொருளாதார தடை

## முழு அளவிலான வணிகப் போர் என ரஷ்யா குற்றச்சாட்டு

அமெரிக்காவில் கடந்த ஆண்டு நவம்பர் 8ம் திகதி நடந்த ஜனாதிபதி தேர்தலில், ரஷ்யா நேரடியாக தலையிட்டு ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன் தோற்கவும், ரஷ்ய ஆதரவாளரான டிரம்ப் வெற்றி பெறவும் துணை நின்றது என்று குற்றம் சாட்டப்படுகிறது. மேலும், உக்ரைனின் ஒரு அங்கமாக திகழ்ந்த கிரிமியாவை தனது அங்கமாக ரஷ்யா சேர்த்துக்கொண்டது என்றும் குற்றச் சாட்டு எழுந்து இருக்கிறது.

இந்த குற்றச்சாட்டுகளின் காரணமாக ரஷ்யா மீது புதிய பொருளாதார தடைகளை விதிக்க உகந்த சட்ட மசோதாவை அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் சமீபத்தில் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற் றின. இந்த மசோதா ஏவுகணை சோதனையில் ஈடுபட்டு வரும் ஈரான், வடகொரியா ஆகிய நாடுகள் மீது தடை விதிக்கவும் வகை செய்துள்ளது.



அமெரிக்க நாடாளு மன்றத்தின் இரு சபைக ளிலும் பொருளாதார தடை மசோதா நிறைவேற்றப் பட்டது, ரஷ்யாவுக்கு மிகுந்த ஆத்திரத்தை ஏற்படுத்தியது. உடனடியாக தங்கள் நாட்டில் உள்ள அமெரிக்க தூதரகம், துணைத் தூத ரகங்களில் பணியாற்றுகிற அதிகாரிகள், ஊழியர்களின் எண்ணிக்கையை 755 ஆக குறைக்க வேண்டும் என ரஷ்யா உத்தரவிட்டது. மேலும், மொஸ்கோ அருகில் அமெரிக்க தூதரகத்தினரால் பயன்படுத்தப்பட்டு வந்த 2 ரஷ்ய சொத்துகளை தொடர்ந்து பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், ரஷ்யா, ஈரான், வடகொரியா ஆகிய 3 நாடுகள் மீதும் புதிய பொருளாதார தடைவிதிக்க வகை செய்யும் சட்ட மசோதாவில் ஜனாதிபதி டிரம்ப் கடந்த வாரம் பூட்டிய அறைக்குள் வைத்து கையெழுத்திட்டு சட்டம் ஆக்கி அது நடைமுறைக்கு வந்துள்ளது. வழக்கமாக இதுபோன்ற சமயங்களில், நிர்வாக உத்தரவுகள் பிறப்பிக்கிறபோது டிரம்ப் ஆரவாரமாக காணப்படுவது உண்டு. ஆனால் இம்முறை அப்படி இல்லை.

இருப்பினும் பொருளாதார தடை மசோதாவை சட்டம் ஆக்கியது தொடர்பாக அவர் ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையில் அவர், வெளியுறவு கொள்கையை வடிவமைக்கும் தனது அதிகாரங்களை அமெரிக்க நாடாளுமன்றம் மீறுவதின் அளவை சாடி உள்ளார். நாடாளுமன்றம் சாதிப்பதை விட, தன்னால் பிற நாட்டு அரசுகளுடன் சிறப்பான உடன்பாடுகளை செய்ய முடியும் எனக் கூறி உள்ளார். அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர் ஒரு செய்தியும் விடுத்துள்ளார். அந்தச் செய்தியில் அவர், ஈரான், வடகொரியா மற்றும் ரஷ்யா ஆகியவற்றின் ஆக்கிரமிப்பு, சீர்குலைக்கும் நடத்தைகளை தீர்ப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நான் சாதகமாக இருந்தாலும்கூட, இந்த சட்டம் கணிசமான குறைபாடுகளை கொண்டுள்ளது என்று கூறியுள்ளார்.

அமெரிக்காவின் புதிய பொருளாதார தடை, ரஷ்யாவுக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக அந்த நாட்டின் பிரதமர் டிமிட்ரி மெத்வடேவ் தனது பேஸ்புக் பக்கத்தில் ஒரு பதிவு வெளியிட்டுள்ளார். அதில் அவர், ரஷ்யா மீதான அமெரிக்காவின் புதிய பொருளாதார தடை, ரஷ்யாவுக்கு எதிரான முழு அளவிலான வணிகப்போர்தான். இது டிரம்ப் நிர்வாகத்தின் முழுமையான அதிகாரமற்ற தன்மையை எடுத்துக்காட்டுகிறது. அமெரிக்காவின் புதிய நிர்வாகத்துடனான எங்கள் உறவு மேம்படும் என்று நாங்கள் கொண்டிருந்த நம்பிக்கை முடிவுக்கு வந்துவிட்டது என ஆவேசத்துடன் கூறியுள்ளார்.

இதேவேளை, வட கொரியா மீது கடுமையான புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்கும் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் அமெரிக்கா தாக்கல் செய்தது. அந்த நாட்டின் மீது ஐ.நா. பாதுகாப்புக் குழு ஏற்கனவே விதித்திருந்த தடைகளை மீறி அணு குண்டு சோதனை, ஏவுகணைகள் சோதனை ஆகியவற்றில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்க முடிவு செய்ததாக அமெரிக்க அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. இரும்பு, நிலக்கரி, உணவு மீன் வகைகள் உள்ளிட்ட பொருள்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை வட கொரியா ஈட்டி வருகிறது. அந்த வருவாய் கிடைக்காமல் இருக்கச் செய்யும் விதமாகப் புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா தீர்மானம் தாக்கல் செய்தது. இதனால் ஆண்டொன்றுக்கு 3 பில்லியன் டொலர்கள் வருவாயை வட கொரியா இழக்கும். வட கொரிய் அப்பாவிப் பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளைக் கருத்தில் கொண்டு சில வகை பொருளாதாரத் தடைகளை விதிப்பதை அமெரிக்கா தள்ளிப்போட்டு வந்தது. இந்த நிலையில், வட கொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளில் ஈடுபட்டு வந்தது. கண்டம் விட்டு கண்டம் பாயும் சக்தி வாய்ந்த ஏவுகணையை சென்ற யூலை மாதம் 4ம் திகதி வெற்றிகரமாகப் பரிசோதனை செய்தது. அது அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தைத் தாக்கும் வல்லமை உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, மீண்டும் யூலை 28ம் திகதி மேலும் சக்தி வாய்ந்த ஏவுகணை பரிசோதனையை வட கொரியா வெற்றிகரமாக மேற்கொண்டது. இந்த ஏவுகணை அமெரிக்காவின் எந்தப் பகுதியை வேண்டுமானாலும் இலக்கு வைத்து தாக்கும் வல்லமை கொண்டது என்பதை மேற்கத்திய விஞ்ஞானிகளும் ஒப்புக் கொண்டுள்ளனர். இந்த நிலையில், வட கொரியாவின் அந்நியச் செலாவணி வருவாயை பாதிக்கும் வகையில் கடுமையான புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்கும் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்பு சபையில் அமெரிக்கா தாக்கல் செய்துள்ளது.

வடகொரியா மீதான பொருளாதார தடையை வலுப்படுத்துவதற்கு சீனாவும், ரஷ்யாவும் எதிர்ப்பு தெரிவித்தன. பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், புதிய பொருளாதாரத் தடைகளால் ஒன்றும் நடக்காது என கூறப்பட்டது. ஆனால் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் இவ்விவகாரத்தில் உறுதியாக இருந்தன.

வடகொரியாவின் மீது கடும் பொருளாதார தடை கொண்டுவர சீனாவிற்கும் அமெரிக்கா கடும் நெருக் கடியை கொடுத்தது. ஐ.நா. பாதுகாப்பு சபையில் அமெரிக்கா கொண்டுவந்த வலுவான பொருளாதாரத் தடை தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது. 2006ம் ஆண்டுக்குப் பிறகு வட கொரியா மீது கொண்டு வரப்படும் 7வது தடை த்தீர்மானமாகும்.

இப்போது பொருளாதார தடையை வலுப்படுத்தி உள்ளதால் வடகொரியாவின் ஏற்றுமதி பெரிதும் பாதிக் கப்படும். இப்போதைய பொருளாதார தடை மூலம் வடகொரியாவின் வங்கிகள், வெளிநாட்டு நிறுவனங்களுடனான கூட்டு செயல்பாடு ஆகியவற்றிலும் பாதிப்பு ஏற்படும். இன்றைய காலகட்டத்தில் இதுபோன்ற கடுமையான தடையை எதிர்க்கொண்டு உள்ள நாடு வடகொரியாவாகும். இதனால் வெளிநாடுகளில் உள்ள வடகொரியாவினர் பாதிக்கப்படும் சூழ்நிலையும் உள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் அமெரிக்க தூதர் நிக்கி ஹெலே பேசுகையில், வடகொரியாவின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைக்கு கடும் அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றார். இன்றைய தலைமுறையில் இது மிகவும் கடுமையான பொருளாதார தடையாக இருக்கும் என்றார். சீனாவும், ரஷ்யாவும் இந்த தடையை முறையாக செயல்படுத்தினால் வடகொரியாவிற்கு பெரும் பாதிப்பாக இருக்கும். வெளிநாட்டில் பணிபுரியும் வடகொரியர்களால் அந்நாட்டிற்கு மற்றொரு வருவாய் கிடைக்கிறது. இதுவும் பாதிப்புக்கு உள்ளாகும்.

# சீனப் பெருஞ்சுவருக்கு கீழ் தொடருந்து வழித்தடம் 94 மீற்றர் ஆழத்தில் மெட்ரோ நிலையம்

சீனப் பெருஞ்சுவருக்கு கீழே நிலக்கீழ் தொடருந்துப் பாதையை சீனா அமைத்து வருகிறது. சீனாவின் ஜாங்ஜியாகு நகரில் வரும் 2022ம் ஆண்டு பனிக்கால ஒலிம்பிக் விளையாட்டு நடைபெறவுள்ளது. அதையொட்டி, அந்த நகரை மேம்படுத்தும் விதமாகப் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்புத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், அந்த நகரை நாட்டின் அதிவிரைவு தொடருந்துப் போக்குவரத்துடன் இணைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தலைநகர் பெய்ஜிங் – ஜாங்ஜியாகு நகர் இடையேயான பாதையில் சுமார் 12 கிலோ மீற்றர் நீளமுள்ள சிக்கலான பாதை சீனப் பெருஞ்சுவருக்கு அடியில் அமைந்துள்ளது. இதற்காக சுமார் 430 மீற்றர் ஆழத்தில் நிலக்கீழ் தொடருந்துப் பாதை அமைக்கப்படுகிறது. பெருஞ்சுவருக்கு நேர் அடியில் ஒரு தொடருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சீனாவில் மெட்ரோ தொடருந்துக்கு பூமிக்கு அடியில் 94 மீற்றர் ஆழத்தில் தொடருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மெட்ரோ சுரங்க பாதை பூமிக்கு அடியில் பல அடுக்குமாடி கட்டடங்களுடன் தொடருந்து நிலையத்தை கட்டி வருகிறது. சீனாவின் சாங்கிங் மாகாணத்தில் ஹாங்டியூடி மெட்ரோ நிலக்கீழ் நிலையத்தில் பூமிக்கு அடியில் 94 மீற்றர் ஆழத்தில் இந்த தொடருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது.

அங்கு 31 அடிக்கு மாடிகள் கட்டப்படுகின்றன. வீதியில் இருந்து பூமிக்கு அடியில் தொடருந்து நிலையம் செல்ல நகரும் படிக்கட்டு அமைக்கப்படவுள்ளது. அதன் மூலம் பூமிக்கு அடியில் உள்ள தொடருந்து நடைமேடைகளுக்கு 3 நிமிடத்தில் செல்ல முடியும். அதன் மூலம் உலகில் உள்ள மிக ஆழமான மெட்ரோ தொடருந்து நிலையங்களில் இதுவும் ஒன்றாகும். தற்போது வடகொரியாவில் பூமிக்கு அடியில் 110 மீற்றர் ஆழத்தில் மெட்ரோ தொடருந்து நிலையம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# எகிப்தின் மிகப் பெரிய இராணுவத் தளம் திறப்பு

எகிப்தின் மிகப் பெரிய இராணுவ தளத்தை அந்நாட்டு அதிபர் அப்தெல் ஃபதா அல்–சிசி நாட்டுக்கு அர்ப்பணித்தார். அலெக்ஸாண்ட்ரியா நகருக்கு மேற்கே மார்சா மத்ரோ மாகாணத்தில் அமைந்திருக்கும் இந்த இராணுவ தளம்தான் மத்திய கிழக்குப் பிராந்தியத்திலேயே மிகப் பெரியதாகும்.

நாட்டின் வட மேற்குப் பகுதியைப் பாதுகாப்பதிலும், கடலோர நகரங்கள், பல முக்கிய இராணுவ நிலைகளைப் பாதுகாப்பதிலும் புதிய இராணுவ தளம் முக்கியப் பங்காற்றும் என்று அதிபர் அல்சிசி தனது அர்ப்பணிப்பு உரையில் தெரிவித்தார். புதிய இராணுவ தளத்துக்கு எகிப்தின் முதல் அதிபர் முகமது நகீப் பெயரிடப்பட்டுள்ளது. இராணுவ தளபதியாக இருந்து பின்னர் அவர் அந்நாட்டின் அதிபரானார். லிபியாவையொட்டிய எல்லைப் பகுதியில் அண்மையில் ஓர் இராணுவ தளம் அமைக்கப்பட்டதாக எகிப்து அண்மையில் அறிவித்தது. அதைத் தொடர்ந்து தற்போது மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் மிகப் பெரிய இராணுவ தளத்தைஅமைத்ததாகஅறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## படுகொலை விசாரணை தொடங்குகிறது

வடகொரிய அதிபர் கிம் ஜங் உன்னின் சகோதரர் கிம் ஜங் நாம், மலேசிய தலைநகர் கோலாலம்பூர் விமான நிலையத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 13ம் திகதி படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கில், இந்தோனேசிய பெண் சிதி ஆயிா, வியட்நாம் பெண் டோன் தி குவாங் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீதான விசாரணை ஒக்டோபர் 2ம் திகதி தொடங்குகிறது.

## சுவிட்சர்லாந்தில் உலகின் மிக நீளமான நடைமேம்பாலம் திறப்பு

உலகின் மிக நீளமான தரை வழி குகைப் பாதையைக் கொண்டிருக்கும் சுவிட்சர்லாந்தில், உலகின் மிக நீளமான நடை மேம்பாலம் மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து கிராச்சென் (Grachen) மற்றும் ஜெர்மெட் (Zermatt) ஆகிய நகரங்களை இணைக்கும் வகையில் இந்த பாலம் கட்டப்பட்டுள்ளது. Europabruecke என்றழைக்கப்படும் இந்த பாலம், தரையில் இருந்து சுமார் 85 மீற்றர் உயரத்தில் இரு மலைகளுக்கு இடையில் கட்டப்பட்டுள்ளது. இரண்டரை ஆண்டுகளாக கட்டப்பட்ட இந்த பாலம் அதிர்வை தாங்கும் வகையில், பாதசாரிகள் நடக்கும் போது, பாலம் ஆடாமல் இருக்கும் வகையில் 8 தொன் கேபிள்கள் பயன்படுத்தப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## குற்றவாளிகளின் பிரித்தானியக் குடியுரிமை பறிப்பு!

பிரித்தானியாவில் இருந்து வெளியேறிய குற்றவாளிகள் மற்றும் பயங்கரவாதிகள் உள்ளிட்டவர்களின் குடியுரிமையை பறித்து அவர்கள் நாடு திரும்புவதற்கும் அரசு தடை விதித்துள்ளது. பிரித்தானியா அரசின் இந்த அதிரடி நடவடிக்கையால் 150க்கும் மேற்பட்டோரின் குடியுரிமை பறிக்கப்படுகிறது. மட்டுமின்றி சிரியா உள்ளிட்ட நாடுகளுக்கு சென்று பயங்கரவாதிகளை திருமணம் செய்துள்ள பிரித்தானிய பெண்களும் இந்த பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பு தெரிவித்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் பேசிய பாதுகாப்புத்துறை மூத்த அதிகாரி ஒருவர், இனிமேல் பிரித்தானியாவுக்கு திரும்ப முடியாதவர்களின் பட்டியல் அதிகரித்துள்ளது அதிர்ச்சி தருவதாக உள்ளது, ஆனால் எங்களின் முதன்மையான முன்னுரிமை என்பது குறித்த நபர்களை சட்டத்திற்கு முன் நிறுத்தி அவர்களுக்கு தண்டனை வாங்கித் தர வேண்டும் என்பதே என்றார்.

இந்த ஆண்டு மட்டும் சந்தேகத்துக்

→ 20

குரிய பிரித்தானியர்கள் 40 பேரின் கடவுச்சீட்டுகளை முடக்கியுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மட்டுமின்றி இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களுக்கும் இந்த சட்டம் பொருந்தும் எனவும் தெளிவு படுத்தியுள்ளனர்.

## வங்கிக் கொள்ளையில் டொனால்டு டிரம்ப்!


அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் முகமூடியை அணிந்து கொண்டு இத்தாலியை சேர்ந்த இருவர் கொள்ளையடித்த சம்பவம் நடந்துள்ளது. இத்தாலியின் டூரின் ஒரு பணம் எடுக்கும் இயந்திரம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.



சுமார் 27 மற்றும் 31 வயது மதிக்கத்தக்க இருவர் 20 பணம் எடுக்கும் இயந்திரத்தை உடைத்து 1 இலட்சம் ஈரோவை கொள்ளையடித்துள்ளனர். இவர்கள் இருவரும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்பின் முகமூடியை அணிந்து கொண்டு கொள்ளையடித்துள்ளது கண்காணிப்புக் காணொளியில் பதிவாகியுள்ளது. முகமூடி அணிந்து திருடியபோதும் பின்னர் இருவரும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். இருவரும் சகோதரர்கள் என்பது கண்டறியப்பட்டதுடன், அவர்களிடம் விசாரணை நடத்திய போது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

## வீதி கடக்கும்போது செல்பேசிக்குத் தடை

அமெரிக்காவின் ஹவாய் மாகாணத்தில் உள்ள ஹொனலு நகரில் வீதியைக் கடந்து செல்லும் பாதசாரிகள் செல்பேசிகளை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. வீதிகள் மற்றும் நடைபாதைகளில் கடந்து செல்லும்போது செல்பேசியில் குறுஞ்செய்தி அனுப்புதல்



அல்லது பேசிக்கொண்டே செல்வதால் விபத்துகள் அதிகமாக ஏற்படுவதைக் தடுக்கவே இத்தகைய முறை கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த விதிமுறைகை மீறி செல்பேசியைப் பயன்படுத்தினால் 15 முதல் 35 டொலர்கள் அபராதம் விதிக்கப்படும். முதலில் அபராதம் செலுத்திவிட்டு பின் தொடர்ந்து அந்தத் தவறை திரும்ப செய்தால் 99 டொலர்கள் வரை அபராதம் விதிக்கவும் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இந்த உத்தரவு வரும் ஒக்டோபர் மாதம் இறுதி முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது என நகர நிர்வாக தலைவர் கிர்க் கால்டுவெல் தகவல் தெரிவித்துள்ளார்.

## மலேசியாவில் 5000 வெளிநாட்டுத் தொழிலாளர்கள் கைது

மலேசியாவில் முறையாகப் பதிவு செய்யாத தொழிலாளர்களுக்கு அந்நாட்டு அரசாங்கம் பதிவு செய்வதற்கான காலக்கெடுவை நிர்ணயித்திருந்தது. அக்கெடு

→ 21

## அமெரிக்கா – மெக்சிக்கோ எல்லைச் சுவர்

### 98 செனட் உறுப்பினர்கள் ஆதரவுடன் நிறைவேறியது

அமெரிக்க அதிபர் டிரம்பின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான அமெரிக்கா – மெக்சிக்கோ இடையேயான எல்லைச் சுவர் கட்டும் திட்டத்திற்கான மசோதா, அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியது. ?மெக்சிக்கோவில் இருந்து சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்கவும், போதை பொருட்கள் கடத்தலை தடுக்கவும், அமெரிக்க எல்லையில் சுவர் எழுப்பப்படும், இதற்கு மெக்சிக்கோவிடமிருந்தும் நிதி பெறப்படும்? என அதிபர் டெனால்ட் டிரம்ப் தனது தேர்தல் வாக்குறுதியில் கூறியிருந்தார்.

இத்திட்டத்தை நிறைவேற்ற, எல்லைச் சுவர் அமைப்பதற்காக 10,400 கோடி டொலர் நிதி ஒதுக்குவதற்கான மசோதா அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையில் கடந்த வாரம் கொண்டு வரப்பட்டது. ஆளும் குடியரசுக்கட்சி உறுப்பினர்கள் ஆதிக்கம் கொண்ட பிரதிநிதிகள் சபையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. மசோதாவுக்கு 235 பேர் ஆதரவாகவும், 192 பேர் எதிராகவும் வாக்களித்தனர். இதையடுத்து, இந்த மசோதா செனட் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அங்கு நிறைவேற்றப்படும் பட்சத்தில் அதிபர் டிரம்ப் கையெழுத்திட்டு சட்டம் இயற்றப்படும். எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் அதிகம் உள்ள செனட் சபையில் இந்த மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா – மெக்சிக்கோ எல்லையானது 3,100 கிலோ மீற்றர் நீளமுள்ளது. அதில் இயற்கையாக அமைந்துள்ள மலைகள், ரியோ கிராண்டே நதி உள்ளிட்ட நீர் நிலைகள் போன்ற தடைகளைத் தவிர, சுமார் 1,500 கிலோ மீற்றர் நீளத்துக்கு சுவர் எழுப்ப வேண்டும்.

## 98 வீத வாக்குகளுடன் ருவாண்டா அதிபர்

### 3வது முறையாகவும் தேர்வு

ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் நடந்த அதிபர் தேர்தலில் அதிபர் பால் ககாமி 98 சதவீத வாக்குகளைக் கைப்பற்றி அபார வெற்றி பெற்றார். அதுவும் தொடர்ந்து 3வது முறையாக அவர் அதிபர் ஆகியுள்ளார். அவரை எதிர்த்து இந்த தேர்தலில் போட்டியிட்ட ஜனநாயக பசுமைக் கட்சி வேட்பாளர் பிராங்க் ஹபினேசாவும், சுயேச்சை வேட்பாளர் பிலிப்பி மபயிமனாவும் படுதோல்வி அடைந்தனர்.



இந்த தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்த மற்றொரு சுயேச்சை வேட்பாளரும், தொழில் அதிபருமான டயானா ஷிமா ரிவிகராவை தேர்தல் ஆணையகம் தகுதி இழப்பு செய்து விட்டது. இந்த தேர்தலுக்கு முன்னதாக பால் ககாமி அதிபர் தேர்தல் பற்றி குறிப்பிடுகையில், 'அதிபர் தேர்தல் வெறும் சம்பிரதாயம் மட்டுமே' என கூறியது குறிப்பிடத்தக்கது.

இந்த தேர்தல் முடிவு குறித்து பால் ககாமி ஆதரவாளர்கள் கருத்து தெரிவிக்கையில், தலைவர் பால் ககாமி நாட்டில் நிலைத்தன்மை, பொருளாதார முன்னேற்றத்தை கொண்டு வந்துள்ளார் என கூறினர். தேர்தல் வெற்றிக்கு பின்னர் பால் ககாமி நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் உரை ஆற்றினார். அப்போது அவர், ருவாண்டா மக்களின் பிரச்சினைகளை மேலும் 7 ஆண்டுகளுக்கு கவனிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. நாம் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் கண்ட உண்மையான ருவாண்டா மக்களாவோம் என உறுதி அளிக்கிறேன் என கூறினார். பால் ககாமி கடந்த 17 ஆண்டுகளாக அதிபராகப் பதவி வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2,271 லீற்றர் தாய்ப் பாலைத் தானமாக வழங்கி அமெரிக்க பெண் சாதனை!



அமெரிக்காவை சேர்ந்த எலிசபெத் அண்டர்சன் சியெரா என்ற 29 வயதுப் பெண் இதுவரை 2,271 லீற்றர் தாய்பாலைத் தானமாக வழங்கியுள்ளார். வழக்கமாக ஒரு தாய்க்கு சுரக்கும் பாலைவிட 10 மடங்கு அதிகமான பால் இவருக்கு சுரக்கிறது. இவருக்கு ஒரு நாளைக்கு 6.4 லீற்றர் பால் சுரக்கிறது. தினமும் 5 வேளை பாலைக் கறந்து, பதப்படுத்தி, பாக்கெட்களில் அடைத்து, குளிர் சாதனப் பெட்டியில் வைத்துவிடுகிறார். பின்னர், ஓரினச் சேர்க்கையாளர்களின் குழந்தைகள், மார்பகப் புற்று நோயால் மார்பு அகற்றப்பட்ட தாய்மார்களின் பிள்ளைகள், ஊட்டச்சத்துக் குறைபாடு உடைய குழந்தைகள் என்று தாய்ப்பால் தேவைப்படுபவர்களுக்கு இலவசமாகப் பாலை வழங்கி வருகிறார். தனது முதல் குழந்தையின்போது தனக்கு அதிக பால் சுரந்ததாகக் கூறும் எலிசபெத், இரண்டாவது குழந்தை பிறந்தபோது மேலும் அதிகரித்துள்ளதாகக் கூறியுள்ளார்.



தாய்ப்பால் இல்லாமல் தவிக்கும் குழந்தைகளுக்கு தன்னால் உதவ முடிந்தது தனக்கு மகிழ்வைத் தருவதாகக் கூறியுள்ளார். பணத்திற்காக இதனைச் செய்யவில்லை என்று கூறியுள்ள எலிசபெத், உதவி செய்பவர்களின் பணத்தைக்கொண்டு தாய்பாலை இலகுவாக கறப்பதற்கான கருவிகளை வாங்குவதற்கே பயன்படுத்துவதாகவும் கூறியுள்ளார்.

## ஐஎஸ்ஐஎஸ் படைகளை சுற்றி வளைத்தது சிரிய இராணுவம்!

ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாத இயக்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த சிரியாவின் ஹோம்ஸ் எனும் முக்கிய நகரத்தை அந்நாட்டின் இராணுவம் கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து ஐஎஸ்ஐஎஸ் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்குப் பகுதிகளை நோக்கி இராணுவம் முன்நகர்ந்து வருகிறது. ஐஎஸ் படைகளை சுற்றி வளைத்தது சிரியாவின் இராணுவம் என்ற தகவலை சிரிய மனித உரிமை அமைப்பும் வெளியிட்டுள்ளது.

பால்மைரா எனும் பழங்கால நகரத்திலிருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள சுக்னா எனும் இடத்திற்கு இராணுவம் சென்றுள்ளது. அதன் அருகில் இன்னும் ஐஎஸ்ஐஎஸ்சின் முழுக்கட்டுப்பாட்டிலுள்ள டீயர் அல்-சோர் எனும் மாகாணம் உள்ளது. சுக்னாவை இராணுவம் சுற்றி வளைத்துள்ளது என்று சிரிய அரசு செய்தி



நிறுவனமான சானா தெரிவித்துள்ளது. இப்பகுதிகளை அரசுப் படைகள் கைப்பற்றினால் சிரியா போரில் முழுமையாக வெற்றி பெற்றுவிடும் என்று கூறப்படுகிறது.

இதேவேளை ஈராக்கிலும் படுதோல்வியைச் சந்தித்துவரும் ஐஎஸ்ஐஎஸ், மரபுவழிப் போரில் இருந்து பின்வாங்கி, கெரில்லாப் போருக்குள் தள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

# 2016ல் தீவிரவாதத் தாக்குதல்கள் அதிகம் நடந்த நாடுகளின் பட்டியல்

## நடந்ததில் ஈராக் முதலிடம்

## நடத்தியதில் ஐஎஸ்ஐஎஸ் முதலிடம்

2016ம் ஆண்டில் தீவிரவாத தாக்குதல்கள் அதிகம் நடந்த நாடுகள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் அறிக்கையில் இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில் 2,965 தீவிரவாதத் தாக்குதல்களைச் சந்தித்து, ஈராக் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்த படியாக, 1,340 தாக்குதல்களைச் சந்தித்து, ஆப்கானிஸ்தான் இரண்டாம் இடத்திலும், 927 தாக்குதல்களைச் சந்தித்து இந்தியா 3வது இடத்திலும் உள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2016ம் ஆண்டில் உலகம் முழுவதும், 11,072 பயங்கரவாத தாக்குதல் சம்பவங்கள் 1,010 பயங்கரவாத சம்பவங்கள் நடந்த நிலையில், 2016ம் ஆண்டு 734 சம்பவங்கள் நடந்துள்ளன.

பயங்கரவாதத் தாக்குதல் நடத்துவதில் உலகின் மோசமான தீவிரவாத அமைப்பான ஐஎஸ்ஐஎஸ் முதலிடத்திலும், தலிபான் அமைப்பு 2வது இடத்திலும் இருக்கின்றன. இந்தியாவில் செயல்படும் நக்சலைட்டுகளுக்கு 3ம் இடம் கிடைத்துள்ளது. போகோ ஹறாம் பயங்கரவாத அமைப்பு 4வது மோசமான தீவிரவாத அமைப்பாக உள்ளது.

இந்தியாவில் நடந்த தீவிரவாத சம்பவங்களில் பெரும்பாலானவை நக்சலைட்டுகள் நடத்தியவை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2016ம் ஆண்டில்



நடந்துள்ளன. இது 2015ம் ஆண்டில் நடந்த தாக்குதல்களை விட 16 வீதம் அதிகம். அதேபோல், பயங்கரவாத தாக்குதல்களில் பலியானவர்களின் எண்ணிக்கையும் 2015ம் ஆண்டை விட 17 வீதம் அதிகரித்துள்ளது.

இதேவேளை பாகிஸ்தானில் பயங்கரவாதத் தாக்குதல்கள் குறைந்துள்ளன. பாகிஸ்தானில் 2015ம் ஆண்டில் இந்தியாவில் காஷ்மீர், சத்தீஸ்கர், மணிப்பூர் மற்றும் ஜார்க்கண்டில் அதிகளவில் தீவிரவாத தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன. கடந்த வருடம் நக்சலைட்கள் நடத்திய 336 தாக்குதல் சம்பவங்களில் 174 பேர் கொல்லப்பட்டனர். 141 பேர் காயமடைந்துள்ளனர்.

## சீன வங்கி முன்னாள் அதிகாரிக்கு 14 ஆண்டு சிறை

சீன வளர்ச்சி வங்கியின் மேற்பார்வை குழுவில் அதிகாரிக்கு 14 ஆண்டு சிறை தண்டனை விதிகப்பட்டுள்ளது.

சீனாவில் அதிபராக ஜின்பிங் பதவி ஏற்ற பிறகு நாட்டில் இலஞ்ச ஊழலை ஒழிப்பதற்கு அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறார். அங்கு இலஞ்ச ஊழலில் ஈடுபடுகிறவர்கள் கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்பட்டு வருகின்றனர் இந்த நிலையில் அங்குள்ள சீன வளர்ச்சி வங்கியின் மேற்பார்வை குழுவில் அதிகாரியாக பணியாற்றிய யோவ் ஜோங்மின் என்பவர் மீது இலஞ்ச குற்றச்சாட்டு எழுந்தது. இவர் கடன்கள் வழங்குவதற்கும், பிற ஒப்பந்த பணிகள் வழங்குவதற்கும் மக்களிடம் இருந்து இலஞ்சம் பெற்றுள்ளார். இது தொடர்பாக இவர் மீது விசாரணை நடத்தி வழக்கு தொடரப்பட்டது. விசாரணையின்போது, தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை யோவ் ஜோங்மின் ஒப்புக்கொண்டார். இவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தனது சகோதரர் மூலம் 2012, 2013 ஆண்டுகளில் 36.2 மில்லியன் யுவான் இலஞ்சம் வாங்கி உள்ளார். இந்த வழக்கு விசாரணையின்போது ஒத்துழைப்பு அளித்த காரணத்தால் குறைவான தண்டனை விதிப்பதாக கூறிய நீதிமன்றம், யோவ் ஜோங்மினுக்கு 14 ஆண்டு சிறைத்தண்டனை விதித்தது. மேலும் மூன்றரை மில்லியன் யுவான் அபராதமும் செலுத்துமாறு உத்தரவிட்டது.

## சைபர் தாக்குதல் அச்சுறுத்தல்

## சீன டிரோன்களை கைவிடும் அமெரிக்க இராணுவம்

சீனத் தயாரிப்பான ஆளில்லா விமானங்களான டிரோன்களால் சைபர் அச்சுறுத்தல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கூறி அவற்றின் பயன்பாட்டை நிறுத்துவதற்கு அமெரிக்க இராணுவம் முடிவுசெய்துள்ளது. சீன நிறுவனமான எஸ் இஸட் டிஜேஐ தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து (sz dji technology co) அமெரிக்க இராணுவம் தனது பயன்பாடுகளுக்கு டிரோன்கள் எனப்படும் ஆளில்லா விமானங்களை வாங்கியது. இப்போது திடீரென இவற்றின் பயன்பாடுகளை ஒட்டுமொத்தமாக நிறுத்தும்படி தனது அணிகளுக்கு இராணுவம் உத்தரவிட்டுள்ளது. இந்த டிரோன்களால் சைபர் ஆபத்துகள் ஏற்பட வாய்ப்பிருப்பதாக கூறியுள்ள இராணுவம் எவ்வாறு இந்த வாய்ப்பு ஏற்படுகிறது என்பதைக் கூறவில்லை.




இந்த முடிவு குறித்து கருத்து வெளியிட்ட நிறுவனம் இப்படி முடிவெடுப்பதற்கு முன் தங்களை கலந்தாலோசிக்கவில்லை எனக் கூறியுள்ளது. மேலும் இராணுவத்தின் சந்தேகங்களுக்கு பதில் அளிக்கத்தயாராக இருப்பதாகவும் அது கூறியுள்ளது. இது பற்றி அறிக்கை வெளியிட இராணுவம் தயாராகி வருவதாகவும் தெரிகிறது. கடந்த மே மாதம் டிஜேஐ டிரோன்கள் தொடர்பாக இராணுவ ஆய்வு மையமும், கடற்படையும் அளித்த இரு வெவ்வேறு அறிக்கைகளின் மூலம் இந்த முடிவு எட்டப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. உலக டிரோன் சந்தையில் அதிக இடத்தை டி.ஜே.ஐ நிறுவனம் கொண்டிருக்கின்றது. சுமார் 70 சதவீதம் பங்குகளை அந்நிறுவனம் கொண்டிருக்கின்றது. அத்துடன், அடுத்த ஐந்தாண்டுகளில் டிரோன் வர்த்தகம் 100 பில்லியன் டொலர்களை எட்டும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானின் இடைக்காலப் பிரதமராக ஷாஹித் அப்பாஸி பதவி ஏற்பு

பாகிஸ்தானின் 18வது பிரதமராக ஷாஹித் அப்பாஸி பதவி ஏற்றுள்ளார். பாகிஸ்தானின் பிரதமராக இருந்தவர் நவாஸ் ஷெரிப். 'பனாமா ஆவணங்கள்' ஊழல் வழக்கில் இவருக்கும், இவரது குடும்பத்தாருக்கும் தொடர்பு இருப்பதாக குற்றம்சாட்டப்பட்டது.

விசாரணையில் நவாஸ் ஷெரீஃப் மற்றும் அவரது குடும்பத்தினர் வெளிநாடுகளில் சொத்து குவித்தது கண்டுபிடிக்கப்பட்டதால், அவர் மீது குற்றவியல் வழக்குத் தொடரவும் பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் பரிந்துரை செய்தது. அதன் தொடர்ச்சியாக உச்சநீதிமன்றத்தால் கடந்த வாரம் நவாஸ் ஷெரீப் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

இதையடுத்து, நவாஸ் ஷெரீஃப் தனது பிரதமர் பதவியை விட்டுவிலகினார். பின்னர் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சியின் தேசிய செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது. இதில், பாகிஸ்தான் நாட்டின் புதிய பிரதமராக பஞ்சாப்



முதல்வரும், நவாஸ் ஷெரீஃபின் இளைய சகோதரருமான ஷேபாஸ் ஶரீஃப், அக்கட்சியினரால் தேர்வு செய்யப்பட்டார். ஆனால் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத காரணத்தால், அதுவரை ஷாஹித் அப்பாஸி பிரதமராக இருப்பார் என்று முடிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் பிரதமர் பதவிக்கான தேர்தல் நடைபெற்றது. இதில் ஷாஹித் அப்பாஸி 221 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். பாகிஸ்தான் நாடாளுமன்றத்திற்கு ஆறுமுறை தேர்தெடுக்கப்பட்ட இவர், ஷேபாஸ் ஷெரீஃப் பொறுப்பேற்றுக் கொள்ளும் வரை இடைக்காலப் பிரதமராக செயல்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாகிஸ்தான் அமைச்சரவையில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு இந்து மதத்தை சேர்ந்த ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் அப்பாஸி 65 வயதான தர் ஷென் லால் என்ற இந்து மதத்தை சேர்ந்த ஒருவரை அமைச்சராக அறிவித்துள்ளார். சிந்து மாகாணத்தில் உள்ள கோட்கரி மாவட்டத்தில் தர்ஷென் லால் மருத்துவராக பணிபுரிந்து வருகிறார். லால் 2013ம் ஆண்டு சிறுபான்மையினருக்கான கோட்டாவில் இரண்டாவது முறையாக நாடாளுமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். 20 ஆண்டுகளுக்குப் பிறகு தர்ஷென் லால் சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தான் அமைச்சரவையில் இடம்பெறும் இந்து மதத்தை சேர்ந்த அமைச்சராவார். பிரதமர் அப்பாஸி தலைமையிலான அமைச்சரவையில் 47 அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர். பதவி பிரமாணம் அவர்களில் 28 பேர் மத்திய அமைச்சர்களாகவும் 19 பேர் இணைய அமைச்சர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த யூன் 30ம் திகதியோடு முடிந்ததையடுத்து, மலேசிய குடிவரவுத்துறை சோதனை நடவடிக்கைகளைத் தொடங்கியது. அதன்படி கைது செய்யப்பட்டுள்ள 5,065 தொழிலாளர்களில் 1,520 பங்களாதேஷிகள், 1,476 இந்தோனேசியர்கள், மியான்மரைச் சேர்ந்த 429 பேர், வியட்னாமைச் சேர்ந்த 285 பேர், தாய்லாந்தைச் சேர்ந்த 206 பேர், பிலிப்பைன்சைச் சேர்ந்த 261 பேர் உள்ளடங்கியுள்ளனர். இவர்களை வேலைக்கு அமர்த்திய குற்றத்திற்காகப் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த 108 பேரும் கைதுச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பால்வினை நோயால் 35 கோடி பேர் மரணம்

### 2016ம் ஆண்டில் 10 இலட்சம் பேர்

2016ம் ஆண்டில் மட்டும் பால்வினை (எய்ட்ஸ்) நோய்க்கு 10 இலட்சம் பேர் பலியாகியுள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது. உலகம் முழுவதும் பால்வினை நோயின் தாக்கம் குறித்து ஐ.நா. ஆய்வு நடத்தியது. இதன் முடிவுகள் சமீபத்தில் எய்ட்ஸ் நோய் தொடர்பான கருத்தரங்கில் ஐ.நா. வெயிட்டது. அதில் 2016 ஆண்டில் மட்டும் பால்வினை நோயால் பாதிக்கப்பட்ட 10 இலட்சம் பேர் மரணடைந்துள்ளனர். முன்னதாக 2005ல் 19 இலட்சம் பேர் பால்வினை நோயால் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரம் பாதிக்கப்பட்ட 3.65 கோடி பேரில், 1.95 கோடி பேர் எய்ட்ஸ் நோய்க்கு சிகிச்சை பெற்றுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த ஆண்டு எய்ட்ஸ் நோயால் 18 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டனர். 1997ல் 35 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டனர். தற்போது உலகம் முழுதும் 7.61 கோடி பேர் பால்வினை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோயால் தற்போது வரை 35 கோடி பேர் மரணமடைந்துள்ளனர். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சூரிய கிரகணத்தின் ஆபத்து பொதுமக்களுக்கு நாசா அறிவுரை!

பூமிக்கும் சூரியனுக்கும் இடையே நீள் வட்டப்பாதையை நிலவு கடக்கும் போது சூரியனின் ஒளியை நிலவு மறைத்து விடும் நிகழ்வுக்கு சூரிய கிரகணம் என்று பெயர். இதில் முழு கிரகணம், பகுதி கிரகணம், கங்கண கிரகணம், கலப்பு கிரகணம் என



பல வகைகள் உண்டு. இந்த நிலையில் ஓகஸ்ட் 21ம் திகதி முழு சூரிய கிரகணம் தோன்றும் என நாசா அறிவித்துள்ளது. மேலும் 99 ஆண்டுகளுக்குப் பின்னர் தோன்றும் முழு சூரிய கிரகணம் ஆகும். இதற்கிடையே சூரிய கிரகணத்தை பார்க்க உள்ள மக்களுக்கு நாசா சில பாதுகாப்பு அறிவுரைகளை வழங்கியுள்ளது. அதன்படி ஓகஸ்ட் 21ல் தோன்றவுள்ள முழு சூரிய கிரகணத்தில் சூரியனின் விளிம்புகள் மட்டுமே தெரியும் என நாசா கூறியுள்ளது. மேலும் இதை வெற்றுக் கண்களால் பார்க்கக் கூடாது என்றும் அதற்கென பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ள சூரிய ஒளித் தடுப்புக் கண்ணாடிகளால் மட்டுமே பார்க்க வேண்டும் என்றும் நாசா அறிவுறுத்தியுள்ளது. இதேபோல் உலகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் 30 கோடி மக்களால் கிரகணத்தை பார்க்க முடியும் என்றும் நாசா தகவல் தெரிவித்துள்ளது.

## வங்ரோத் அரசியல்...

மாவட்டத்தில் என்ன விடயம் நடைபெறுகின்றது என்பது கூட இவருக்குத் தெரியவில்லை என்றால் மக்கள் பிரதிநிதியாக இருந்து ஊடகங்களுக்கு அறிக்கையிடுவது அர்த்தமற்ற விடயமல்லவா?

விடுதலைப் புலிகள், தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கிய முக்கிய விடயங்களில் ஒன்று தமிழ் மக்களின் அன்றாட அரசியல் ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகும். ஆனால் இன்று அந்த அமைப்பு இல்லை என்ற காரணத்தினால் தாங்கள் விரும்பிய பாதையில் ஆளுக்கொரு கருத்துக்களையும் கூறிக்கொண்டு அரசியல் பிழைப்புச் செய்கின்றார்கள்.

உண்மையில் தமிழ் மக்கள் விழித்தெழும்பும் வரை இவ்வாறான கபோதிகள் இருக்கத்தான் செய்வார்கள். முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைப்பது போன்று புரையோடிப் போயுள்ள தமிழர் பிரச்சினைகளை தெரியாது எனத் தெரிவிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்து தமிழர்களுக்கு என்ன இலாபம்? மக்கள்தான் சிந்திக்க வேண்டும்.

இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வசிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் எல்லாம் அடுத்த தடைவை எவ்வாறு தேர்தலில் போட்டியிடுவது, எவ்வாறு வெற்றிபெறுவது என்ற சிந்தனையிலேயே இருக்கின்றார்கள். இவர்களுக்கு மண்ணைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ எந்தொரு அக்கறையும் இல்லை என்பது தெட்டத்தெளிவான உண்மை. ஒருவரை ஒருவர் குறைகூறிக் கொண்டு காலத்தை கடத்துகின்றனர்.

போர் நடைபெற்ற காலத்தில் சிங்கள ஆக்கிரமிப்பு படைகளின் கெடுபிடிகளுக்கே தமிழ் மக்கள் அதிகம் முகம் கொடுத்தனர். ஆனால் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் சொல்லோன்னாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இனிவரும் காலங்களில் இவரைப் போன்றவர்களை தேர்தலில் தேர்ந்தெடுப்பதை தமிழ் மக்கள் தவிர்த்தால் மிகவும் நல்லது.

## தமிழர்களின் சொத்துக்...

பம்பலபிட்டி பகுதியைச் சேர்ந்த வர்த்தகரான இராமநாதன் கமலநாதன் என்பவர் கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவில் கடந்தவாரம் முறைப்பாடு ஒன்றினைச் செய்திருந்தார். தனது காணியை தனக்கு தெரியாமல் போலி ஆவணம் ஊடாக விற்பனைச் செய்ய முயற்சிகள் நடப்பதாக அவர் கொடுத்த முறைப்பாட்டுக்கு அமைய கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவின் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய காவல்துறைக் குழுவினர் விசேட விசாரணைகளை ஆரம்பித்தனர்.

குறித்த காணியை போலி உறுதி ஊடாக விற்பனை செய்யும் முயற்சிகள் இடம்பெறுவதை வெளிப்படுத்தியுள்ள காவல்துறையினர், விற்பனை தொடர்பில் ஆரம்ப கட்ட பணப் பறிமாற்றல் பொரலஸ்கமுவ பகுதியில் விடுதி ஒன்றில் நடப்பதை அறிந்து அங்கு சென்று சந்தேக நபர்கள் இருவரை கைது செய்தனர்.

> **மேலதிக விசாரணைகளில் இந்தப் போலி ஆவணங்களை காணி பதிவுத் திணைக்களத்தில் பதிவிடும் நடவடிக்கைகளை முன்னெடுத்ததாக நம்பப்படும் சந்தேக நபரை காவல்துறையினர் அடையாளம் கண்டுள்ளனர்.**

இந்த விற்பனை நடவடிக்கையில் பணம் பரிமாற்றங்களுக்கு வந்திருந்த பிரதான சந்தேக நபர்களில் ஒருவரான ஹசனும் அந்த இருவரில் அடங்கியிருந்த நிலையில் அவரிடம் காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். இதன்போது ஹசனின் வாகனத்தில் இருந்து நூற்றுக்கணக்கான ஆவணங்களை காவல்துறையினர் கண்டுபிடித்துள்ளனர். அட்டனி பத்திரங்கள், காணி உறுதிப்பத்திரங்கள், மற்றும் ஏராளமான ஆவணங்கள் அதில் இருந்துள்ளன. இந்த ஆவணங்கள் உண்மையானதா, போலியானதா என்பதைக் கண்டறிய விசேட விசாரணைகள் தற்போதும் தொடர்கின்றன.

முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில் இந்த போலி ஆவணங்களை காணி பதிவுத் திணைக்களத்தில் பதிவிடும் நடவடிக்கைகளை முன்னெடுத்ததாக நம்பப்படும் சந்தேக நபரை காவல்துறையினர் அடையாளம் கண்டுள்ளனர். இதனையடுத்து றிஸ்மின் எனும் சந்தேக நபரையும் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

அதனையடுத்து செய்யப்பட்ட மேலதிக விசாரணைகளில் கட்டுகஸ் தோட்டை வஜிர என்பவர் ஊடாகவே இந்த போலி ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளமையை கண்டறிந்தனர். கட்டுகஸ்தோட்டை வஜிர மீது கண் வைத்த காவல்துறையினர், போலி காணி உறுதி தொடர்பிலும் பிரத்தியேக விசாரணைகளை நடாத்தினர். இதன்போது இராமநாதன் கமலநாதன் எனும் வர்த்தகருக்கும் அவரது மனைவிக்கும் சொந்தமான காணி, வேறு இருவருக்கும் விற்கப்பட்டு, அவ்விருவர் ஊடாக மற்றொருவருக்கு விற்பனைச் செய்யப்படுவதைப் போல் போலி ஆவணம் தயார் செய்யப்பட்டிருந்தை காவல்துறையினர் அவதானித்தனர்.

சொத்தை ஏற்கனவே வாங்கியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த வவுனியா, யாழ் பகுதியைச் சேர்ந்த குறித்த இருவரையும் முதலில் கைது செய்து அவர்களை ஏனைய சந்தேக நபரையும் கைது செய்தனர். இதன் போது போலி உறுதிகளை அச்சிட பயன்படுத்தப்பட்ட அச்சு இயந்திரம், ஸ்கானர், முத்திரைகள், காணி உறுதிகள் அச்சிடப்பயன்படுத்தப்படும் தாள்கள் உள்ளிட்டவற்றையும் கைப்பற்றினர். மொத்தமாக இதுவரை 8 சந்தேக நபர்கள் கொழும்பு மோசடி தடுத்துப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களில் ஐவர் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டு எதிர்வரும் ஒகஸ்ட் 10ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.

## புலிகளின் தடையை...

இவர்களின் தொடர் நச்சரிப்புக்களைத் தாங்க முடியாமல் உலகின் சில நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்தன. அதன்படியே ஐரோப்பிய ஒன்றியமும் புலிகள் மீது தடை விதித்தது.

ஆனால், தற்போது யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த ஒரு இடத்திலோ அல்லது எந்தவொரு நாட்டிலோ வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை எனத் தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியம், புலிகள் மீதான தடையை நீக்கியிருக்கின்றது. இந்தத் தடை நீக்கம் சிறீலங்கா அரசிற்கு பெரும் அடியாக அமைந்துள்ளது. அதுவே, அரசுக்குத் தலையிடியாகவும் மாறியது.

புலிகள் மீதான தடை நீக்கமானது தனது இராஜதந்திரச் செயற்பாடுகளுக்கு படுதோல்வியாக அமைந்து விட்டது என சிறீலங்கா அரசு கருதுகின்றது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பணியாற்றும் தனது தூதுவர்களின் செயற்றிறன் தொடர்பாக சிறீலங்கா அரசு கடும் அதிருப்தி அடைந்துள்ளது. அவர்களின் பலவீனமான செயற்பாடுகள் காரணமாகவே இந்த தடை நீக்கப்பட்டது என்று கருதிய சிறீலங்கா தலைமை அவர்களை எச்சரித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீக்கத்தை தொடர்ந்து ஏனைய நாடுகளும் புலிகள் மீதான தடையை நீக்கினால் அது புலிகளின் மீளுருவாக்கத்திற்கு வித்திடும் என்று சிறீலங்கா அரசு அச்சமடைகின்றது. புலிகள் மீள உருவாகினால் அவர்கள் சர்வதேச நாடுகளில் அனுசரணையுடன் பலம் பொருந்திய ஜனநாயக அமைப்பாக, அல்லது ஆயுத அமைப்பாக மாறிவிடுவார்கள் என்று சிறீலங்கா கடும் அச்சத்தில் இருக்கின்றது.

புலம்பெயர் தமிழர்கள் தற்போது மிகவும் பலமான கட்டமைப்புக்குள் இருக்கின்றனர். அவர்கள் எந்தத் தருணத்திலும் சிங்கள அரசுக்கு எதிரான பாய்ச்சல்களில் ஈடுபடலாம் என்றும் சிறீலங்கா படைத் தலைமையும் அரசும் கருதுகின்றன. அதனாலேயே அடிக்கடி புலம்பெயர் தமிழர்கள் விடயத்தில் அதிக கவனம் தேவை என சிங்கள ஆதிக்கவாதிகள் அரசை எச்சரிக்கின்றனர்.

இதனால் தமிழர் தாயகத்தில் தற்போதும் அச்சமான சூழ்நிலையே இருக்கின்றது என்று வெளியே மிகைப்படுத்த வேண்டிய தேவை சிங்களத் தரப்புக்கு ஏற்பட்டுள்ளது. அதற்காகவே யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப் பாதுகாவலர்கள் மீது தாக்குதல் நடத்தியவர் முன்னாள் புலி உறுப்பினர் என பரவலான அறிவித்தல் விடப்பட்டிருக்கின்றது. அது ஒருபுறம் இருக்க கொக்குவிலில் வைத்து கோப்பாய் காவல்துறையினர் இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் முன்னாள் புலிகள் என சிறீலங்கா காவல்துறைமா அதிபர் பகிரங்க அறிவித்தல் விடுத்திருக்கின்றார்.

இதைவிட, புலி உறுப்பினர்கள் புலம்பெயர் தேசத்தில் இருந்து மாறுவேடத்தில் நாட்டுக்குள் நுழைந்து விட்டனர் என்று சிங்களத் தரப்பு அறிக்கைகளை விடுத்திருக்கின்றது. இவற்றை வைத்து நோக்கும்போது யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சம்பவங்கள் அனைத்தும் நன்கு திட்டமிடப்பட்டவை என்பது தெளிவாகின்றது.

தமிழர் தாயகத்தில் நிலைகொண்டுள்ள படையினர், காவல்துறை பட்டாலியன்களுக்குள் தற்போது இரு அணிகள் இயங்குகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது சகோதரரும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ச ஆகியோருக்கு நெருக்கமான அணிகள் இப்போதும் வினைத்திறனுடன் செயற்படுகின்றன.

அடுத்த அணி ரணில் - மைத்திரி அரசின் சொற்கேட்டு நடக்கும், அரச விசுவாச அணி. அதிலும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நெருக்கமாக தனியான அணிகளும் இயங்குகின்றன.

இந்த அணிகளில் மகிந்த - கோத்தாவுக்கு விசுவாசமான அணிகளே தீவிர வன்முறைப் போக்குகளைக் கையாண்டு வருகின்றன. குறிப்பாக, கடந்த வருடம் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் மீது கொக்குவிலில் தாக்குதல் நடத்தி அவர்களைப் படுகொலை செய்தது மகிந்த அணியாகும்.

இதைவிட, யாழ்ப்பாணத்தில் உள்ள வாள்வெட்டுக் குழுக்களுக்கு தீனி போட்டு வளர்க்கும் காவல்துறைக் குழுக்கள் மகிந்தவுக்கு நெருக்கமானவர்களாவர். மகிந்த ராஜபக்ச காலத்தில் தமிழ் இளைஞர்களை சுட்டுப் படுகொலை செய்யும் செயற்பாடுகளை மேற்கொண்டவர்களும் படைப் புலனாய்வாளர்களாக இயங்கியவர்களும் தற்போது இரகசிய வாள்வெட்டுக் குழுக்களாக இயங்குகின்றன.

இதைவிட, நல்லாட்சி அரசு எனக் கூறப்படும் ரணில் - மைத்திரி அரசும் இராணுவம், கடற்படை, காவல்துறை பிரிவுகளுக்குள்ளே தமது குண்டர் படையணிகளைக் கட்டிவைத்திருக்கின்றன.

மேற்படி குழுக்கள் அனைத்தும் எப்போதும் தயார் நிலையிலேயே இருக்கும். எந்த நேரத்தில் அவைகளுக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றனவோ அந்த நேரத்தில் உடனடியாகவே களமிறங்கி கனகச்சிதமாக காரியங்களை நிறைவேற்றும்.

இவ்வாறான நிலையிலேயே, ஐரோப்பிய ஒன்றியத் தடை நீக்கம் தற்போது பெரும் விடயமாகப் பார்க்கப் படுவதால் யாழ்.குடாநாட்டில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன.

மகிந்த தரப்பு ரவுடிக் கும்பல் ஒன்று கொக்குவிலில் காவல்துறை மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்த, காவல்துறையினரால் வளர்க்கப்படும் ரவுடிக் கும்பல் ஒன்று மானிப்பாய்க்குச் சென்று மகிந்த தரப்பு குழு மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தக் குழுக்கள் தமக்குள் மாறி மாறித் தாக்குதல்களில் ஈடுபடும்போது, தமிழர் தாயகத்தில் வன்முறைகள் நடைபெறுகின்றன, முன்னாள் போராளிகளே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர், அதனால் இந்த விடயங்களில் சர்வதேசம் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று சிறீலங்காவின் படைத்துறையும் காவல்துறையும் கூக்குரல் எழுப்புகின்றன. அரசாங்கமும் அரச அமைச்சர்களும் அதற்கு ஒத்தூதுகின்றன.

தமிழர்களை அழிக்கவேண்டும், தமிழர்களின் எழுச்சியைத் தடுக்கவேண்டும் என்பதில் சிங்களத் தரப்புக்கள் அனைத்தும் ஒன்றுபட்டு நிற்கும் இந்த நிலையை புலம்பெயர் தேசத்தில் உள்ள தமிழ் மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். மக்களுக்கு அப்பால், புலம்பெயர் தேசத்தில் தமிழீழ விடுதலைக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் அமைப்புக்களும் இந்த விடயத்தில் கூடிய கரிசனை எடுக்கவேண்டும்.

தமிழர்களை அழிக்க சிங்களம் ஒன்றுபடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தமிழர் சேனையும் ஒன்றுபடவேண்டும். உண்மை நிலையை சர்வதேசத்திற்கு எடுத்துரைக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால், தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிங்களவர்களின் அடிமைகளாகவே வாழவேண்டிய நிலை ஏற்படும்.

## தனது மரணச் சடங்கை...

அனைத்து அறைகளிலும் விளக்கெரிவதை பார்த்தேன். எல்லா பொருட்களும் எனக்கு பழக்கப்பட்டவையாக இருந்தன.

ஆனால் இதயங்கள் உடைந்துவிடும் அளவுக்கு அழுது கொண்டிருக்கும் மக்கள் எங்கே? எனக்கு புதிராகவும் திகைக்க வைப்பதாகவும் இருந்தது. இவை அனைத்திற்கும் என்ன அர்த்தம்? இந்த சூழ்நிலையின் காரணத்தை கண்டுபிடிக்க உறுதியாய் இருந்தேன். அவை மர்மமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. கிழக்குப் பக்க அறைக்கு செல்லும் வரை அப்படித்தான் இருந்தது. அங்கே ஒரு வருந்தத்தக்க ஆச்சர்யத்தை சந்தித்தேன். எனக்கு முன்னால் ஒரு சவப்பெட்டியை ஏற்றிசெல்லும் வாகனம் இருந்தது. அதன் மேல் ஈமச்சடங்களுக்கான உடையணியப்பட்ட ஓர் உடலம் இருந்தது. சுற்றிலும் படையினர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். கூட்டம் கூட்டமாக மக்கள் உடலத்தைப் பார்த்து அழுது கொண்டிருந்தனர். உடலத்தின் முகம் மூடப்பட்டிருந்தது.

'வெள்ளை மாளிகையில் இறந்தது யார்?' என படையினர் ஒருவனிடம் கேட்டேன். அவன் 'ஜனாதிபதி, அவர் ஒருவனால் கொல்லப்பட்டார்' என்றான். பின்பு கூட்டத்திலிருந்து பெரும் அழுகை ஏற்பட்டது.

நான் விழித்துக் கொண்டேன். அதன் பின்பு அந்த இரவு நான் தூங்கவில்லை. அது வெறும் கனவுதான் என்றபோதிலும் எப்போதும் என்னை வித்தியாசமாக நச்சரித்தது." என்று கூறியுள்ளார்.

இந்த கனவை அவர் கண்ட இரண்டாவது வாரம், ஏப்ரல் மாதம் 14ம் திகதி ஆபிரகாம் லிங்கன் படுகொலை செய்யப்பட்டார். அவருடைய உடல் மக்களின் பார்வைக்காக வெள்ளை மாளிகையின் கிழக்குப் பக்க அறையில்தான் வைக்கப்பட்டிருந்தது.

RAMI COIFFURE
உங்கள் எண்ணம் போல் சிகை அலங்காரம் செய்து கொள்ள
Drancy RER தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில்
11-13 RUE MORIN, 93700 DRANCY
Port: 06 27 93 63 44

பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34

Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

J.K.S ALIMENTATION GENERALE
SPÉCIALITÉ AFRO - ASIATIQUE
Ria
WESTERN UNION WU
MoneyGram
இலங்கை இந்திய மளிகைப் பொருட்களை உங்கள் Le Bourget இல் மலிவாகவும் தரமாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளுங்கள்
52, avenue Jean Jaures
93350 Le Bourget
RER B : Le Bourget
jks.alimentation@gmail.com
Tel: 01 48 51 71 41
09 66 97 71 41
தினமும்: 9h00 - 21h00

DEVI Textiles & Tailors
சாரி பிளவுஸ் 30 நிமிடங்களில் தைத்துத் தரப்படும்
ஆண் பெண் இருபாலாருக்கும் அனைத்து விதமான ஆடைகளும் மற்றும் உங்கள் வசதிக்கு அமைவான தோல்பைகளும் உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
29, Bld de la Chapelle, 75010 Paris
Tél: 09 51 01 85 59 - Suresh: 07 81 29 86 50
M°: La Chapelle (ligne 2)

Baby Baloon
Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23

Ragawa Tailor
அனைத்து விதமான ஆடைகளும் உங்கள் வசதிக்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
01 40 35 14 77
190 Rue Fbg St. Denis
75010 Paris
M°: Gare du Nord

பாரிஸ் லா சப்பலில்
AMBAAL STORE
பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

VICHNESH SHOP
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை பேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

உடனுக்குடன் தழிழ்த்தேசிய, மற்றும் சர்வதேசச் செய்திகளுடன்
சங்கதி 24
www.sankathi24.com

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவு வகைகள்
Ria
MoneyGram money transfer
WESTERN UNION MONEY TRANSFER
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

பாலன்ஸ் சலூான்
தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்
29 rue Philippe de Girard,
75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!
திரு.சகாதேவன்
SAGADEVAN PIERRE
எமது மொழிபெயர்ப்புக்கள் அனைத்து அரசு நிறுவனங்களிலும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும். எம்மிடம் நேரடியாக வருபவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.
தொடர்பு கொள்ள
சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்
(Leader Price கடைக்கு அருகாமையில்)
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

S.P.Raju Jewellery
பழைய நகைகளுக்கு புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!
199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33
13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42

சுவர்ண மஹால்
SWARNA MAHAL
பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஓடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
www.swarnamahal-france.com
122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve
Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25
Email: swarnamahal93120@gmail.com


Mohan
Jewellery Mart
பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
VISA
Aurore
3/4 Fois sans Frais
(Piéce d'identité + Rib + C.B)
201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82
Mo: La Chapelle / Gare du Nord


ஈழமுரசு
உடனுக்குடன் இணையத்திலும்...
www.eelamurazu.com


கபறினா இறைச்சிக்கடை
தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...
BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30


செல்லில் - உங்கள் அபிமான பேபியின்
புதிய உதயம்
அபி சலூான்
தொடரந்து நிலையத்தில் இருந்து 2 நிமிட நடை தூரம்
11 avenue Maréchal Foch
77500 Chelles
07 82 31 73 94
07 51 28 81 34


செஞ்சோலை
நினைவும்
செங்கொடி
நினைவேந்தலும்
காலம்
15-08-2017
நேரம்
பி.ப15.00மணி
Commémoration pour la 11eme année du massacre de Sencholai.
Le 14 août 2006, la vie de 61 jeunes filles tamoules orphelines a été anéantie.
Aujourd'hui, aucune justice n'a été rendu pour ce crime commis par l'Etat sri- lankais
இடம்- Place de la République Métro 3,5,8,9 & 11
தொடர்புகளுக்கு- 06 3 29 68 82, 06 52 72 58 67
CCTF- 01 43150421


ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!
உணவகங்கள் - கடைகள் - தொழிற்சாலைகள் போன்றவற்றில்
STOP !
எலிகள் - சுண்டெலிகள்
கரப்பான் பூச்சிகள்
தொல்லைகொடுக்கும் பூச்சிகள்
அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்
14 Rue Charles V,
75004 Paris.
DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107
Tél.: 01 60 07 34 29
சுதா / விமல் : 06 34 18 80 04